
# தோட்டக்காட்டினிலே

- சிறுகதைகள் -



- மலரன்பன்
- மாத்தளை சோமு
- மாத்தளை வடிவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டக்காட்டினிலே....

## சிறுகதைத் தொகுதி


- மலரன்பன்
- மாத்தளை சோமு
- மாத்தளை வடிவேலன்



வெளியீடு;

- மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்
- 367, பிரதான வீதி - மாத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டக்காட்டினிலே சிறுகதைத்தொகுதி

● எழுதியவர்கள்—
மலரன்பன்
மாத்தளை சோமு
மாத்தளை வடிவேலன்

● வெளியீடு—
மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்
367, பிரதான வீதி — மாத்தளை.

● அட்டைப்படம்
ரமணி

● அச்சுப்பதிவு
கவின் அச்சகம் - கே. கே. எஸ்வீதி, யாழ்ப்பாணம்

● தொகுப்பாசிரியர்
மாத்தளை சோமு

● விலை. 6/50

# சமர்ப்பணம்

1939-ம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த நாட்டிற்காக,

'தோட்டக்காட்டினிலே'

இறுதி மூச்சுவரை உழைத்து, உழைத்து, தம்மைச் சுரண்டி கொழுத்த வர்க்கத்தினரின் அடக்கு முறைக்கும், அட்டூழியத்திற்கும் எதிராக அவ்வப்போது குரல் கொடுத்தும் கொடிஉயர்த்தியும், போராடி அவர்களின் துப்பாக்கிகளுக்குப் பலியாகி உயிர் நீத்த தோட்டத் தொழிலாளர்த் தோழர்களுக்கு இச்சிறுகதைத் தொகுதி சமர்ப்பணமாகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையிலே கடந்த மூன்று தசாப்தங்களாகத் தேசிய இலக்கியக் கோட்பாடு இயக்க வடிவம் பெற்றமையும், அவ்வுணர்வின் விளைவாகவும் வெளிப்பாடாகவும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அவ்வப்பகுதி மண்வாசனை கமழும் ஆற்றல் மிக்க ஆக்கங்கள் உருவாகி வந்துள்ளமையும், இவற்றின் உடனிகழ்ச்சியாக மொழிநடை இலக்கிய உத்திகள் முதலியவற்றிலே குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு வந்தமையும் இப்பொழுது இலக்கிய வரலாறாகிவிட்டன. பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புக்களில், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குக் களமாக உள்ள மலைநாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பனவற்றிற்குத் தனியிடமுண்டு. சிறுகதை, நாவல் நாடகம், கவிதை என்ற இலக்கியப் பிரிவுகளில் சிறுகதையே மலைப்பிரதேசம் பற்றிய படைப்புக்களில் முதலிடம் பெற்றுள்ளது எனலாம். காலத்துக்குக் காலம் வெவ்வேறு நிறுவனங்கள் நடத்தும் சிறுகதைப் போட்டிகளிலே நடுவர் குழுக்களில் பணியாற்றிய வேளைகளிலெல்லாம், மலையக எழுத்தாளருக்குச் சிறுகதைக்கலை மீதுள்ள ஆர்வத்தினை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன், குறிப்பாகக் கடந்த பத்தாண்டுக் காலத்தில் மலையகத்திலே துடிப்புமிக்க எழுத்தாளர் பலர் தோன்றியிருப்பதை நன்கறிவேன். பத்திரிகைகள், சிறுசஞ்சிகைகள் கல்லூரி வெளியீடுகள் முதலியவற்றிலும் மலையகத்தைப் பொருளாகக் கொண்ட பற்பல சிறுகதைகளைப் படித்திருக்கிறேன். ஆயினும் பிரதேச அடிப்படையில் ஒப்பீட்டளவில் நோக்குமிடத்து மலையகம் சம்பந்தமான சிறுகதைகளில் நூலுருவம் பெற்றவை மிகச் சிலவே என்பது புலனாகும்.

நான் அறிந்தவரையில் இதுவரை இரண்டு சிறுகதைத் தொகுதிகளே வெளிவந்திருக்கின்றன: கதைக்கனிகள் நிறுவன அடிப்படையிலும் நாமிருக்கும் நாடே தனியார் முயற்சியாலும் பிரசுரமாகியிருக்கின்றன. **தோட்டக் காட்டினிலே** என்னும் இத்தொகுதி மூன்றாவது வெளியீடாகும். மலரன்பன், மாத்தளைச் சோமு, மாத்தளை வடிவேலன் ஆகிய மூவரும் சேர்ந்து ஆளுக்கு மும்மூன்று கதைகளாக ஒன்பது சிறுகதைகளை இந்நூலில் வழங்குகின்றனர். ஏறத்தாழப் பத்து வருடங்களுக்கு முன்பு நீர்வை பொன்னையன். செ. யோகநாதன், காலஞ்சென்ற செ. கதிர்காமநாதன் ஆகியோர் **மூவர் கதைகள்** என்ற தலைப்பில் ஆளுக்கு மும்மூன்றாக ஒன்பது கதைகளடங்கிய தொகுதியொன்றை வெளியிட்டனர். பலவிதங்களில் இத்தொகுதி முந்தியதை நினைவூட்டியது. இலக்கிய நோக்கிலும் போக்கிலும் ஒற்றுமைகொண்ட எழுத்தாளர்கள் சேர்ந்திணைந்து நூல் வெளியிடுதல் நமது சூழலுக்குப் பழக்கமானதும் பொருத்தமானதுமாகும்.

மாத்தளைச் சோமு தொகுத்தளித்திருக்கும் இந்நூலிலுள்ள கதைகளைப் படிக்கையில், மலையக வாழ்க்கையை உள்நின்று சித்திரிக்கும் எழுத்தாளர்களின் உள்ளங்களையும் ஆற்றலையும் உணர்ந்துகொள்ள முடிந்தது. மலையக மக்களைத் தூரநின்று பார்த்து எழுதுபவர்களும் இருக்கின்றனர். இத்தொகுதியில் இடம்பெறும் கதைகளின் ஆசிரியர் மூவரும் இயன்றவரை நடப்பியலைப் புரிந்துகொண்டு, நியாயத்தின் பக்கம் நின்று எழுத முயன்றிருக்கின்றனர். நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடு காணத் தெரிந்தவர்களாயிருக்கின்றனர். பூசிமெழுக முற்படாதவர்களாய் இருக்கின்றனர். இதனால் இக்கதைகளைப் படித்தபொழுது திருப்தியும் தெளிவும் ஏற்பட்டன. சிறுகதைகள் தம்பெயருக்கும் உள்ளார்ந்த இயல்புக்கும் இயையச் சிறிய சம்பவங்களையும், நிகழ்வுகளையும் சலனங்களையும் கருவாகக் கொண்டன. அவற்றினூடாக உலகின் இயல்பையும் உண்மைகளையும் உணர்வு பூர்வமாக விளக்குவன. ''ஒரு கமிராவின் மூலம் பார்ப்பதுபோல் அந்த ஜன்னல் காட்சிகள் அழகாக இருந்தன'' (பக். 34) என்று மாத்தளைச் சோமு ஒருகதையில் எழுதுகிறார். அத்தகைய ஜன்னல் காட்சிகளை வாழ்க்கைக் கூறுகளை - உயிரோவியங்களை -மெய்ம்மை குன்றாத வகையில் தீட்டிக்காட்டுகின்றனர். அதீத உயர்வு நவிற்சியும், அநாவசியமான கிண்டலும் இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமல் நேராகவும் சீராகவும் விஷயத்தை விவரித்துள்ளனர் இது பாராட்டுக் குரியதாகும்.

மலையக உழைக்கும் மக்களின் வாழ்க்கையிலிருந்தே பெரும்பாலான கதைகள் முகிழ்த்திருக்கின்றன. அந்த வாழ்க்கை அவலம் நிறைந்ததாயும், பலவிதமான சுரண்டல் களுக்கும் அடக்கு முறைகளுக்கும் அடிப்படுத்தப்பட்டதாயுய சோகமே நித்தியமாயும் நிரந்தரமானதாயும் இருந்து வந்திருப்பது உலகறிந்த உண்மையாகும். அத்தகைய வாழ்க்கையைச் சிறிதளவேனும் சித்திரிக்க முற்படும் கதைகளில் துவ பச்சுவை இழையோடுவது எதிர்பார்க்கக் கூடியதே. ஆயினும் துன்பத்தின் மத்தியிலும் வாழத்துடிக்கும் மனிதத்துவத்தையும் ஆங்காங்கு நமக்குக் காட்டுகிறார்கள் கதாசிரியர்கள். **புத்தாண்டு புதிதல்ல** என்ற கதையில் வரும் காமாட்சி எதுவுமற்ற நிலையிலும் எத்துணை அமைதியுடன் வாழ்க்கையை எதிர்நோக்குகிறாள்!

மலையகத்திலே, குறிப்பாகத் தோட்டங்களிலே உழைக்கும் மக்கட் சமூகத்தில் பெண்கள், முதியோர், குழந்தைகள் மேலதிக சுமைகளையும் துன்பங்களையும் அநுபவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். சோக உணர்ச்சி கசியும் இக்கதைகளில் முதியோர் படும் துன்பம் முனைப்பாய்த் தெரிகிறது. உழைக்கும் சக்தியை இழந்த பின்பு அவர்கள் அலைப்புண்டு ஆதரவின்றித் தத்தளிக்கும் நிலை நெறியற்ற சமுதாயத்தின் போக்கையே காட்டுகிறது. தோட்டக்காட்டிலே வேலைசெய்ய முடியாதவர்கள் தேடுவாரற்றுத் தெருவிலே நடைப்பிணங்களாய்க் கிடந்து மறையும் சோகத்தை **கறிவேப்பிலைகள்** என்ற கதை மறக்கமுடியாதபடி இசைக்கிறது. கறிக்குப போட்டுப் பயன்படுத்தியபின் தூக்கி வீசப்படும் கறிவேப்பிலைகளாக அவர்கள் இருப்பதை வடிவேலன் அநுதாபத்துடன் சித்திரிக்கிறார். **வெட்டுமரங்கள்** என்ற கதையிலும் முதியோர் பயனற்றவர்களாகக் கருதப்படுவதைக் குறியீடாகப புலப்படுத்துகிறார் ஆசிரியர். மரங்களே பாத்திரங்களாகி விடும் பான்மையில் உருக்கமாக அக்கதை வார்க்கப்பட்டுள்ளது. இக்கதைகளில் நாம் காணும் ராமையா, மாரிமுத்து, ரெங்கையா, காமாட்சிப் பாட்டி, பாலாயிக்கிழவி, சன்னாசிக் கிழவன் முதலியோர் முதுமையின் கொடுமையை உணர்கின்றனர்; நாமும் உணர்கிறோம்; சமூக அநீதியை எண்ணிக் கொள்ளுகிறோம்.

**உறவுகள்** என்ற கதையில் பெயரற்ற ஒருகிழவியைக் காண்கிறோம்; அநாதையாய் ஆஸ்பத்திரியில் அவள் இறப்பதைக் கவனிக்கிறோம். தாய், இளையமகன், மூத்தமகன், மருமகள்மார் என்றே அநாமதேயங்களாய்ப் பத்திரங்கள் வருணிக்கப்படுகின்றன. பெயர்கள்தாம் எதற்கு? மனித உணர்வுகளே அற்ற முறையில் நடந்து கொள்வோருக்குப் பெயர் வேண்டாம் என்று ஆசிரியர் கருதியிருக்கலாம் போலும். 'புனித'மான பாசங்கள்கூட பணத்தை ஆதாரமாய்க்கொண்டன என்னும் அடிப்படை உண்மையை உணர்த்துகிறார் ஆசிரியர்.

''மகன் தாய் என்ற உறவெல்லாம் பொருளாதாரம் என்ற நூலில்தான் இழைக்கப்படுகிறது'' (பக். 21) என்று கூறப்படுகிறது. கசப்பான இவ்வுணர்வு கோட்பாடாக அன்றி மனித உறவுகளின் தொழிற்பாட்டின் சான்றுகளுடன் தத்ரூபமாக நிறுவப்படுகிறது. நிதானமாக நிதர்சனங்களை விவரிக்கும் பண்பு இக்கதையில் குறிப்பிடத்தக்க அளவு உள்ளது.

மனித உணர்வுகள் எல்லோருக்கும் பொதுவானவை என்று சிலர் 'தத்துவம்' போதித்தாலும், கூர்ந்து நோக்கினால், அவையும் மனிதரது வர்க்க நிலைகளுக்கும் நிலைப்பாடுகளுக்கும் அமையவே செயற்படுவது தெளிவாகும். யதார்த்தமான பாத்திரப்படைப்பிற்கு இந்த அடிப்படையான சமூகவியல் நியதியை எழுத்தாளர்கள் தெளிந்து கொள்ளுதல் அத்தியாவசியமாகும். இத்தொகுதியிலுள்ள கதைகளில் இந் நியதியின் இயைபையும் பொருத்தப்பாட்டையும் அழுத்தந் திருத்தமாக ஆசிரியர்கள் காட்டியிருக்கின்றனர். குறிப்பாக, மாத்தளைச் சோமுவின் **நாய்கள் மனிதராவதில்லை**, **லயத்துப் பயல்** என்னும் இரு கதைகளிலும் தோட்டத்துரைமார்களின் மனோபாவம், செயல் ஆகியவற்றின் மூலம் வர்க்க முரண்பாடுகளும் அவற்றினடியாக எழும் கருத்தோட்டங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும், பெருமதிகளும், உணர்வுகளும் நுண்மையத்துடன் தீட்டப்பட்டுள்ளன. அதேசமயத்தில் இனக்குரோதம், வகுப்பு வாதவெறி இவற்றின் மத்தியிலும் ஆங்காங்கு உழைக்கும் மக்களின் உணர்வு வர்க்க அடிப்படையில் தோய்ந்ததா இருக்கமுடியும் என்பதையும் மலரன்பன் காட்டியுள்ளார் தார்மீகம் என்ற கதை. அஞ்சலைப்பாட்டியின் மனிதாபிமான தர்மத்தைச் சிறப்பாகக் காட்டும் அதேவேளையில், பொடி அப்புஹாமி என்ற சிங்களத் தொழிலாளியின் வர்க்க உணர்வையும் ஒரு மின்னற் கீற்றுக் காட்டுவதாயுள்ளது. ''இந்தாப்பாருங்க இங்க உள்ளவங்க எல்லாம் தோட்டத்தில நாயாப் பாடுபட்டு கால்வயிறு, அரைவயிறு கஞ்சிகுடிக்கிறவங்க. ஒருபாவமும் செய்யாத இவங்கள ஒன்னும்செய்ய வேணும்... நான் தமிழன் பக்கம் சேரலடா. நியாயம் பக்கம் சேர்ந்திருக்கேன்'' என்று சிங்களக் காடையர் கூட்டத்திற்குக் கூறும் அப்புஹாமியும் நமது நாட்டு யதார்த்தத்தில் ஒரு அம்சம் என்பதை மலரன்பன் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதே.

மொத்தத்தில் இக்கதைகளிலே தர்மாவேசமும், மனிதாபிமானமும், எதிர்கால நம்பிக்கையும் வெவ்வேறு அளவில் கலந்து ஓடுகின்றன. **அவன் ஒருவனல்ல....** என்ற கதையில் இலட்சிய வேட்கையும் பேசப்படுகிறது. இவற்றை அநாவசியமான அலங்காரங்களும் வார்த்தை ஜாலங்களுமின்றிப் பொருளுக்கேற்ற மொழிநடையிலும், உருவச் செறிவுடனும் ஆசிரியர்கள் கூறிச்செல்கின்றனர். மலைநாட்டு மரம், செடி, கொடி, பூ, பிஞ்சு, கனி முதலியவற்றைக் குறியீடுகளாகப் பயன் படுத்திச் சிற்சில எண்ணங்களையும் உணர்வுகளையும் குறிப்பாலுணர்த்திவிடும் திறமையும் ஆங்காங்கு பளிச்சிடுகிறது. இத்திறமைகள் முயற்சியாலும் பயிற்சியாலும் மேலும் வளர்க்கப்பட வேண்டியவை என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஒருகுறை நூலிற் காணப்படுகிறது. எழுத்துப்பிழைகளும் அச்சுப்பிழைகளும் கண்ணைக் குத்துகின்றன. எழுத்தின் ஆவியையே சிலபிழைகள் கொன்று விடத்தக்கன.

இம்மூவரும் தனித்தனியே சிறுகதைத் தொகுதிகள் வெளியிடக்கூடிய விதத்தில் இன்னும் அதிகமாகவும் ஆணித்தரமாகவும். எழுதவேண்டும் என்பது என்விருப்பம் ஓரளவு தொய்ந்து காணப்படும் இன்றைய இலங்கைச் சிறுகதையுலகில், இத்தொகுதி நம்பிக்கையையும் நல்லுறுதியையும் பாய்ச்சும் என எதிர்பார்க்கலாம். அதற்காகவும் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

க. கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில் 1979-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒருநாள்,

அன்று அண்ணாசாலையிலுள்ள சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டடத்தின் கேட்போர் கூடத்தில் ஒரு இலக்கியக் கூட்டம், நானும் 'மக்கள் மலர்' என்ற நாளிதழின் உதவி ஆசிரியர் என்ற முறையில் போயிருந்தேன் அந்தக்கூட்டத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, தமிழ்ச் சிறுகதைகள். நாவல்கள் பற்றியும் பேசினூர்கள் பேச்சில் இலங்கையின் வடகிழக்கு பகுதி எழுத்தாளர்களின் பெயர்கள் படைப்புகள் யாவும் வெளிவந்தன.

இலங்கையில் பரம்பரை பரம்பரையாக உழைக்கின்ற மலைநாட்டு மக்களின் கலை, இலக்கியங்கள், சிறுகதைகள் பற்றி ஒரு வார்த்தைகூட பேசப்பட இல்லை. மலேசியநாட்டு தொழிலாளர்களையும் அவர்களின் கலை இலக்கியங்கள்- சிறுகதைகள் - நாவல்கள் ஆகியவற்றையும் எடுத்துச் சொன்னூர்கள்'

150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை நாட்டை தம் உழைப்பால் வியர்வையால் - இவைகளுக்கு மேலாக தம் ரத்தத்தால் - உழைத்துக்கட்டி யெழுப்பிவிட்டு, இப்போது திரும்பவும் அகதிகளாக எந்தநாட்டிலிருந்து வந்தார்களோ அந்த நாட்டுக்கே போய்க் கொண்டிருக்கிற, நம் மலையக மக்களையும் - இங்கேயே நிரந்தரமாகத் தங்கிக் கொண்டும் உழைத்துக் கொண்டும் இருக்கிற மக்களையும் அவர்களின் கலை இலக்கியங்களையும் தமிழ்நாட்டுக்கும் பக்கத்து நாடுகளுக்கும் தெரியவில்லையென்ருல் அதற்கு யார் காரணம்? இதுபற்றித் தீவிரமாக யோசித்துப் பார்த்தேன்...

பொதுவாக தமிழக எழுத்தாளர்களில் மறைந்த எழுத்தாளர் புதுமைப்பித்தன் மாத்திரம் துன்பக்கேணி என்ற கதையில் இலங்கை மலைநாட்டை படம்பிடித்துக் காட்டியிருக்கிருர். தமிழகப் பத்திரிகைகளோ - எழுத்தாளர்களோ நம்மைப் பற்றிக்கேட்டால் தெரியாது என்கிருர்கள். இலங்கைப் பயணக்கதை எழுதிய 'மணியன்' இந்துசமுத்திரத்தின் அழகிய முத்துக்கள் என்று வர்ணிக்கப்படுகிற இலங்கையில் அந்நிய செலாவணியை அள்ளித்தருகிற மலையகத்தையும், அதனுள்ளே உழைத்து வாழ்கிறமக்களையும் பார்க்காமலும், எழுதாமலும் விட்டுவிட்டார், அவர் மட்டுமல்ல தமிழகத்திலுள்ள முன்னணி இலக்கிய வாதிகளும் அப்படியே தான் செய்கிருர்கள்...

இது ஏன் ஏற்பட்டது என்பதும் - இலங்கை என்ருல் யாழ்ப்பாணம் மட்டும் வரயார் காரணம்? — மலையகம் ஞாபகத்திற்கு வராததற்கு யார் காரணம்? — மலையக மக்களும் எழுத்தாளர்களும் சிந்திக்க வேண்டியதாகும். யாழ்ப்பாண மொழியும், அம்மண்ணும், தமிழகத்தில் மணக்கிறதென்ருல், அது யாழ்ப்பாண எழுத்தாளர்களின் உழைப்புக்கும் அங்கிருந்து வெளியான கலை, இலக்கியங்களுக்கும் கிடைத்த வெற்றியாகும், ஆனுல் நம்மை அவர்களுக்குத் தெரியவில்லை என்ருல், அதற்கு நாம்வேறு யாரையும் காரணம் சொல்லாமல் அதுபற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும்... நானும் சிந்தித்துப் பார்த்தேன். கிடைத்த முடிவு. இதற்கெல்லாம் 'நாம் தான் காரணம்...

ஆம்! ஒரு சமூகத்தை - ஒரு மனிதக் கூட்டத்தை அடையாளம் காட்டுவது சிறுகதைகள் - கவிதைகள் - நாவல்கள்... மலையக எழுத்தாளர்கள் - சமுதாய நிறுவனங்கள் - தொழிற் சங்கங்கள் யாவும் தீவிரமாக உழைத்து மலையக இலக்கியங்களை வளர்த்தெடுக்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச அரங்கில் நம்குரல் ஒலிக்கும், அதற்கு மலையகத்தவர்கள் யாவரும் பொறுப்புணர்வோடு உதவ வேண்டியது அவசியமாகும்,

இலங்கைத் தமிழ்திரைப்பட வரலாற்றில் சாதனை செய்த - இலங்கையிலும் தமிழ் திரைப்படம் எடுக்கலாம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டலாம் என்ற நம்பிக்கையை விதைத்த 'தோட்டக்காரி' 'புதியகாற்று' திரைப்படங்கள் மலையகத்திலிருந்து கிளம்பினது என்பதை எடுத்துச் சொல்வது பெருமைக்காக அல்ல! இங்கே இருக்கிற கலை, இலக்கியங்களின் வளர்ச்சிக்காக கலை இலக்கியங்கள் முன்னேற வசதிகள் இல்லை. மலையகத்தில், ஏராளமான தரமான சிறுகதைகள் - நாவல்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை இணைத்துத் தொகுதியாக வெளியிட நிறுவனங்களும் இல்லை, அதை முன்னின்று செய்வாரும் இல்லை!

இதுவரை மலையகத்தில் இரண்டு சிறுகதைத் தொகுதி தான் வெளிவந்திருக்கின்றன. ஒன்று வீரகேசரி பிரதம துணைஆசிரியர் திரு. எஸ். எம். கார்மேகம், பரிசுபெற்ற சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்ட கதைக் கனிகள். வீரகேசரி பிரசுரமாகவும் மற்றது வைகறை வெளியீடு வெளியிட்ட மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் 'நாமிருக்கும் நாடே' என்ற தொகுதி, இன்னும் வரவேண்டிய சிறுகதைகள் - கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளைத் தொகுத்துக்கொண்டு வரவேண்டியது மலையகத்தவரின் கடமையாகும். எனது எழுத்தாள நண்பர்கள் மலரன்பன் - மாத்தளை வடிவேலன் ஆகியோரையும் மற்றைய நண்பர்களையும் கலந்து ஒரு சிறுகதைத் தொகுதி வெளியிட முயற்சி மேற்கொண்டே ஆளுக்கு 3 சிறுகதைகளாக மொத்தம் 9 சிறுகதைகள் இணைத்து இந்த 'தோட்டக்காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுதியினை அமைத்துள்ளேன்.

இத் தொகுதியில் உள்ள 9 சிறுகதைகளில் நண்பர் மலரன்பனின்' தார்மீகம் என்ற சிறுகதையும் எனது லயத்துப் பயல், என்ற சிறுகதையும், பிரசுரமாகாத புதிய கதைகள். மற்றவை ஈழத்துச் சஞ்சிகையில் பிரசுரமானவைகளாகும்.

தொகுதியை அழகாகவும் கலை உணர்வுடனும் அச்சிட்டு தந்த 'சிரித்திரன்' ஆசிரியர் திரு சி. சிவஞானசுந்தரம் அவர்களுக்கும் 'கவின் அச்சக' ஊழியர்களுக்கும் நண்பர்கள் கி. முகிலன், ராதேயன் அவர்களுக்கும் அழகிய அட்டைப்பட ஓவியர் திரு. ரமணி அவர்களுக்கும், தொகுதிக்கு முன்னுரை எழுதித்தந்த மதிப்புக்குரிய பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுக்கும், இத்தொகுதி வெளிவரபல வழிகளில் உதவிய ஏனையோருக்கும் எனது அன்பு கலந்த நன்றிகளை மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றிய சார்பிலும் இத்தொகுதியின் பதிப்பாசிரியர் என்ற முறையிலும் தெரிவிக்கின்றேன்...

கடைசியாக சிறுகதைத் தொகுதிக்கு ஏன் 'தோட்டக்காட்டினிலே' என்றபெயரை வைத்திருக்கிறீர்கள்? எனக் கேட்கிறார்கள், கேட்பார்கள்! ஆம்! எம்மை 'தோட்டக்காட்டான்கள்' என்றார்கள். அவர்கள் அப்படி அழைப்பதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. 'தோட்டங்கள் —தோட்டக்காட்டான்கள்' இல்லாமல் மலையகம் இல்லை, எனவே எம்மை எதற்காகவோ, ஏனோ ஆட்டி அழைத்த பெயரையே இலக்கிய அந்தஸ்துடன் 'தோட்டக்காட்டினிலே' என்று மாற்றி - அங்கே நடந்த நடக்கிற கதைகளை இணைத்துத் தொகுதியாக்கி உங்களுக்கும் - இந்த உலகத்திற்கும் காட்டுகிறோம்.

கதைகளைப்படியுங்கள். இனி நீங்கள் சொல்லுங்கள் நாம் 'தோட்டக்காட்டினிலே' தான் வாழ்ந்தோம் — வாழ்கிறோம் என்று... அதுவே போதும்... நன்றி வணக்கம்.

367, பிரதான வீதி,
மாத்தளை
ஜனவரி - 1980.

மாத்தளை சோமு
தொகுப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலரன்பன்

☐ பார்வதி

— தினபதி -1967

☐ தார்மீகம்

☐ உறவுகள்

— அஞ்சலி - 1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வதி

இப்படியாகத் தானே... அந்த பத்துத்தலை இராவணனாகப் பட்டவன்... இராமபிரானின் மனைவியாகிய சீதாப்பிராட்டியை... பர்ணசாலையோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு வானவீதியில் புட்பகவிமானந்தில் பறந்துகொண்டிருந்தான்...''

மேட்டு லயத்து அண்ணாவிக் கங்காணி பெரிய எழுத்து இராமயணத்தை எழுத்துக்கூட்டி சுருதி சேர்த்துப் படிக்கும் ஒலி பணிய லயத்துப் பார்வதியின் காதுகளில் விழுகிறது.

சன்னலைத்திறந்து மேட்டு லயத்தைப் பார்க்கின்றாள். அண்ணாவிக் கங்காணியின் 'காம்ப்ரா' திண்ணையில் ஒருகும்பல் உட்கார்ந்திருக்கின்றது. புராணங்கள் படிக்கும்போது படுத்துக்கொண்டு கதைகேட்டு அடுத்தப் பிறவியில் பாம்பாய்ப் பிறக்க விரும்பாததால் உட்கார்ந்து கொண்டே கதை கேட்கின்றது கும்பல்.

''சேச்சே! என்னா புராணம் விடியவிடிய; மனுசனாகப் பட்டவன் தின்னா உண்ணா அசந்து மசந்து தூங்காம சும்மா காதடைக்க கத்துறானுக'' சலிப்புடன் சன்னலை சாத்துகிறாள் பார்வதி.

''என்னா தொங்கவிடு. இப்பத்தான் சன்னல் சாத்றாப்ல இருக்கு இன்னும் தூங்கலியா?'' கேட்பது அடுத்த வீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒப்புறான தூக்கமா வருது இந்தமேட்டு லயத்து ஆளுங்களால? புராணம் படிக்கிறேன் படிக்கிறேன்னு ஒரேதா விடியவிடிய 'ஸ்டோர் மோல்' கணக்கா கத்துறாங்க...''

''ஒங்க வூட்டுக்காரரு எப்ப வருவாரு? போன சங்கதி ஒன்னும் தெரியலியே''

''யாரு ராமுவுங்க அப்பனா? எப்போ வருதோ தெரியல அவுங்க ஆயிக்கி ஆச்சா போச்சான்னு இருக்கின்னு தந்தி வந்தன்னைக்கி போனிச்சி, இன்னக்கு நாலு நாளாச்சி. என்னமே ஏதோ தெரியல''— அடுத்த வீட்டுக்காரியின் கேள்விக்கு பதில் சொல்கிறாள் பார்வதி. அவள் 'ராமுவுங்க அப்பன்' என்று சொன்னது தன் கணவனைத்தான்.

''சரிசரி எனக்கும் கண்ண கசக்கிது நான் படுக்கிறேன்

அடுத்த வீட்டில் ஒளி அவிகின்றது.

''...சீதாப்பிராட்டியை தேடிக்கொண்டு வந்த இராமலக்குமணர்கள் சுக்ரீவனை சந்திக்கின்றனர்...'' அண்ணாவிக் கங்காணியின் பெரிய எழுத்து இராமாயணம் கணீரென ஒலிக்கின்றது.

''இவன்களுக்கு வேற ஒரு பொழப்புமில்லை'' அலுத்துக்கொண்ட பார்வதியின் கண்கள் 'காம்பிராவை' நோட்டமீடுகின்றன. மூத்தபையன் ராமு ஒருமூலையில் ஒருதுண்டு சாக்கில் தன்னை இரண்டு மூன்றாக மடித்துக்கொண்டு கிடக்கின்றான். இளையவள் பேச்சி மற்றொரு மூலையில் வாட்டம் போட்ட தேயிலைக் கொழுந்தாய் சுருண்டு கிடக்கின்றாள் குப்பிலாம்பு மங்கலாக எரிகின்றது.

கதவை மெதுவாகத் திறந்து மெள்ள வெளியே வந்து பார்க்கின்றாள். பணியலயத்துக்கு எதிரே மேல் முடக்கில் இருக்கும் 'கண்டக்கையா'வின் பங்களாவில் விளக்கு எரிவது தெரிகின்றது. உள்ளே வந்தவள் கதவை மெதுவாக ஒறுக்களித்து வைத்துவிட்டு படுக்கையில் விழுகின்றாள். படுத்தபடி தன்உடலையே ஒருமுறை பார்த்துக்கொள்கிறாள். இரண்டு பிள்ளைகள் பெற்றும் கட்டுக்குலையாமலிருக்கும் தன் உடலை



கண்டு 'பெரிய ஐயா' முதல் சில்லறைக் கங்காணிமார்வரை 'ஒரு கண்' போடுவதை நினைக்கும்போது ஒருபுறம் மகிழ்ச்சியாகவும், மறுபுறம் வேதனையாகவும் இருக்கின்றது.

அவள் மனதிற்குள் ஒரு சுழற்சி......

கணவன் வெளியே சென்ற நான்கு நாட்களாக அவள் அவனுக்கு செய்யும் துரோகத்தை எண்ணும்போது வேதனை நெஞ்சை அரிக்கின்றது.

கடந்துபோன நிகழ்ச்சிகளை நினைத்துக் கொள்கிறாள்......

அன்று சாக்குக்காரப் பொடியனிடம் ஐயா சொல்லியனுப்பியிருந்ததை புரிந்து கொண்டவுடனேயே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருந்தது. அவளது இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொள்ள வந்தவன். தாயின் ஆபத்தான நிலையைக் காணப்போயிருக்கும்போது அவனுக்குத் துரோகம் செய்யலாமா?

மனம் ஓலமிட்டது!

''ஐயோ! கூடாது கூடவே கூடாது!! உயிரே போனாலும் இதற்கு சம்மதிக்கக் கூடாது என்ன நேர்ந்தாலும் எது வந்தாலும் இணங்க மாட்டேன்!''

''எவ்வளவு கீழ்த்தரமான வார்த்தைகள் எந்த ஒருநல்ல பெண்ணுமே மனதால் கூட நினைக்க மறுக்கும் கீழ்த்தரமான எண்ணங்கள்.''

மனதை திடப்படுத்திக் கொண்டு இணங்குவதேயில்லையென திடசங்கற்பம் செய்து கொண்டவளின் முன் பூதாகாரமாகப் பல பிரச்சினைகள் எழுப்பிப் பயமுறுத்தலாயின.

பெரிய ஐயாவின் முகம், அவளின் மனக்கண்முன் தோன்றி மறைகின்றது. துரையிடம் அவருக்கிருக்கும்செல்வாக்கு, அதைப்பயன் படுத்தி அவர்தனக்கு வேண்டாதவர்களைப் பழிவாங்கும் வழிகள் — அவள் நினைவுக்கு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு மாதங்களுக்கு முன்பு பணிய டிவிசன் முத்தம்மா ஐயாவின் 'ஆசை'யைப் பூர்த்தி செய்ய மறுத்ததற்காக அவளது தகப்பனின் கங்காணி வேலைக்கு 'உலை' வைத்தது மட்டுமின்றி நாலைந்து ஆட்களை அமர்த்தி, இரண்டு உரம் மூடைகளை கங்காணியின் காய்கறித் தோட்டத்தில் போட்டு, 'தோட்டத்து உரத்தை கங்காணி களவெடுத்தான்' என்ற குற்றத்தைச் சுமத்தி: அவர்களது குடும்பமே கதறியழ கங்காணியை 'பொலிஸ் ஜீப்'பில் ஏற்றி சிறைக்கனுப்பிவைத்ததெல்லாம் அவள் மனதில் நிழலாடுகின்றன.

ஒரு குற்றமும் செய்யாத அந்த கங்காணியைத் தோட்டத்துக் காவல்காரன் அடித்தஅடி...! ஒங்க வூட்டு அடி எங்க வூட்டு அடியா?''

லயத்துக்கு ஒரு தொழிற்சங்கம் இருக்கத்தான் செய்கிறது. இருந்து என்ன பலன்?

அவள் சிந்தித்துப் பார்த்தாள். ஐயாவின் ஆசையைப் பூர்த்தி செய்ய மறுத்தால் முத்தம்மாவின் குடும்பத்துக்கு ஏற்பட்ட அதே கதிதான் தனக்கும் பார்வதியின் கணவன் கள்வனாக்கப்பட்டு சிறைக் கம்பிகளுக்கு உள்ளே தள்ளப்படுவான். இது நிச்சயம்.

இப்படி ஒரு விபரீதத்தை அவளால் எண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை. கணவனை சிறைக் கம்பிகளுக்குள் தள்ளிவிட்டு இரண்டு பிள்ளைகளுடன் கண்ணீரும் கம்பலையுமாக திரிய அவள் மனம்இடம் கொடுக்கவில்லை. அவள் வாழ்வில் ஒருபெரும் சோதனை. பெண்மைக்கு அதன் கற்புக்கு விடும் சவால்! கணவனைக் காப்பாற்ற வேண்டுமானால் அதற்கு காணிக்கை அவளது கற்பு!

கற்பு - அதைப்பேணி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெண்களுடையது, மட்டுமல்ல, பெரும்பங்கு ஆண்களினதும் கூடத்தான்.



மனம் நிச்சயமாக ஒரு குரங்கு தானா! அதுதாவி விடுகின்றது. அவள் வழுக்கி விழுந்து விடுகின்றாள்.

எண்ணக் குமிழிகளில் மூழ்கிப்போயிருந்த பார்வதியின் சிந்தனை அறுகின்றது. படுக்கையைவிட்டு மெள்ள வெளியே எழும்பி வந்து 'அவர்' வருகின்றாரா என்று பார்க்கின்றாள்.

''...அசோகவனத்தில் இராவணனால் சிறைவைக்கப்பட்ட சீதாப் பிராட்டியை இராவணனை மணந்து கொள்ளும்படி அரக்கிகள் வற்புறுத்துகின்றனர். அந்த பாபமான வார்த்தைகளை காதில் கேட்ட ஜானகி காதுகளைப்பொத்திக் கொள்கிறாள்...'' இராமாயணம் தொடர்கின்றது.

அமைதியாக சென்று கொண்டிருந்த அவளது வாழ்க்கைப்படகை சூறாவளியாய் வந்து அமைதியை குலைத்துவிட்ட 'ஐயா' வருகிறாரா என்று மீண்டும் வெளியேவந்து பார்க்கின்றாள். இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை அவளுடையது.

அவள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த 'அவர்' இருளில் கள்வன் போல ஒளிந்து ஒளிந்து வருகிறார். பகலில் அரைக் காற்சட்டை யணிந்து, தொப்பிபோட்டு, முழங்கால் வரை ''மேச்சோடு'' போட்டு 'டக்டக்' என்று மிடுக்காக கைத்தடியை சுழற்றிக்கொண்டே அந்த பாதையில் மலைக்குப் போகும் அவர், இப்பொழுது கறுப்பு சட்டை சாரத்துடனும்: தலையில் ஒரு முண்டாசுடனும், இரவில் கள்ளத்தனமாக ஆடுமாடுகளுக்கு 'கிளேரியாக் குழை' வெட்டப்போகிறவன் போல், பதுங்கி, பதுங்கி போகிறார்.

பார்வதியின் மேல் 'ஒரு கண்' வைத்திருந்த ஐயா, அவள் புருசன் அயல் தோட்டத்துக்குப் போயிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்த நான்கு நாட்களாய் இதே நேரத்தில் அவள் வீட்டுக்கு நடையாய் நடக்கிறார்.

ஐயாவுக்கு நாற்பது வயதுக்குமேல் இருக்கும். தோட்டத்தில் அவர் வைத்ததுதான் சட்டம். அவர் பேச்சுக்கு மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு கிடையாது. அவரது மனைவிக்கி 'நோஞ்சான்' உடம்பு மருந்துக்கும், மாயத்திற்கும் அலைந்து கொண்டிருக்கும் அம்மாவை அவர் 'சட்டை' செய்வதில்லை.

பதுங்கி பதுங்கி வந்து கொண்டிருந்த ஐயாவுக்கு மேட்டு லயத்து இராமாயணம் காதில் விழுகின்றது. எங்கே தன் உருவம் அவர்கள் கண்களில் பட்டுவிடுமோ என்ற பயத்தில். —கீழே படுத்து – ஊர்ந்து வருகின்றார்.

பகலில் ஐயாவின் கோலத்தைக்கண்டு ஆட்கள் நடுங்குகின்றார்கள். இப்பொழுது இந்தநேரத்தில்—இக்கோலத்தில் அவர்கள் கண்டு விடுவார்களோ என ஐயா நடுங்குகின்றார்.

தட்டுக்கெட்டு தடுமாறி பணியலயம் வந்துசேர்ந்த ஐயா ஒருக்கணித்து வைக்கப்பட்டிருந்த பார்வதியின் 'காம்பரா' கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைகிறார். கதவு தாளிடப்பட விளக்கு அணைகின்றது.

''அசோக வனத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை, இராமபிரானை நினைத்து கண்ணீர் வடிக்கின்றாள். அவளது கற்புக்கனல் இராவணனை அருகில் நெருங்கவிடாமல் அனலாய் பொசுக்குகிறது...'' இராமாயண வாசிப்பு தொடர்ந்து நடைபெறுகின்றது.

நேரம் நகர்கிறது. 'பட்பட்'டென்று கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு பார்வதி, ஐயா இருவரும் திடுக்கிடுகின்றனர் இந்த 'ஏமச்சாமத்தில்' ஒருநாளும் இல்லாத திருநாளாய் யார் வந்து கதவைத் தட்டுகிறார்கள் என்று அவள் யோசிக்கிறாள்.

மீண்டும் கதவு தட்டப்படுகின்றது. அவளுக்கு உயிரே போய்விடும் போலிருக்கிறது. ஐயாவுக்கு வயிற்றில் புளி போட்டு கரைக்கின்றது. கதவு மூலையில் ஒளிந்து கொண்டு நிற்கவும் வசதியில்லையெனக் கண்ட ஐயாவின் உடல் நடுங்குகின்றது.



தாய் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றாள் என அவளைப் பார்க்கப் போன தன்கணவன், அவனதுதாய் இறந்துவிட்ட செய்தியைச் சொல்லி தன்னையும் அழைத்துக்கொண்டு போக இந்த சிவபூசையில் கரடியாய் வருவான் என்று அவள் எதிர்பார்த்தாளா? இல்லை ஐயாதான் எதிர்பார்த்தாரா?

யார் கதவைத் தட்டினார்கள்? என்ன இழவோ என்ற பயத்தில் கதவைத் திறக்கின்றாள் பார்வதி.

தாய் செத்த துயரத்தோடு வந்தவன், இந்நள்ளிரவில் தன் வீட்டில் மனைவியும் ஐயாவும் நின்ற கோலத்தை அதிர்ச்சியுடன் பார்க்கின்றான்.

நேரங்கெட்ட நேரத்தில் கணவனைக்கண்ட பார்வதிசிலையாக நிற்கின்றாள்.

வந்தவழியே திரும்பி போய்விடுவதா? இல்லை—கவ்வாத்துக் கத்தியை தூக்குவது: காரசாரமாக சண்டை போட்டு கூட்டத்தைக் கூட்டுவது போன்ற எண்ணங்கள் பார்வதியின் கணவன் மனதில் எழுகின்றது.

மறுகணம்—

''இராவணனை அழித்தப்பின்னர், எத்தனை துன்பங்கள் வந்தாலும் அதற்கெல்லாம் பணிந்துவிடாது, தனது கற்பைக் காப்பாற்றிய சீதையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு மிதிலைக்குப் புறப்படுகின்றார் இராமர்...''

அத்துடன் அன்றைய இராமாயண வாசிப்பை முடிக்கிறார் மேட்டுலயத்து அண்ணாவிக் கங்காணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தார்மீகம்

வேறொரு சமயமாக இருந்தால் அஞ்சலைப்பாட்டி ஊரே அதிர ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கும் போது யாராவது இப்படி பாராமுகமாக இருப்பார்களா!

ஒரேதாக பாராமுகம் என்றும் சொல்லிவிட முடியாது.

தாழ்ந்து கொண்டிருக்கும் கப்பலின் பிரயாணிகளின் நிலை அவர்களுடையது. எந்த நேரத்திலும் எந்தப் பக்கத்திலிருந்தும் தாக்குதல் நடைபெறலாம் என்ற பீதியில் அஞ்சலைப்பாட்டியின் திண்ணையில் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், வாலிபர்கள், சிறுவர்கள் என குழுமியிருந்த எல்லோருடைய முகத்திலும் பயம் அப்பிக்கொண்டிருக்கின்றது

பாட்டி அழுது கொண்டிருக்கின்றாள்.

எத்தனை யெத்தனையோ கதைகள் பரவி யிருந்தன. கொள்ளை, கொலை தீவைப்பு, கற்பழிப்பு கடையுடைப்பு என நாலா புறமும் ஊழிக்கூத்து வெளியிடங்களிலிருந்து அடி உதை வெட்டுக்காயங்களுடன் வந்தவர்கள் கதைகதையாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

வானில் ஊமையாய் காய்ந்து கொண்டிருக்கும் நிலவை கருமேகங்களும் வெண்மேகங்களும் மாறிமாறி ஓடிப்பிடித்துக் கொண்டிருக்கின்றன.



ஒரு பாட்டம் ஒப்பாரி வைத்துத் தீர்த்த பாட்டி திண்ணையில் மெல்லிய ஸ்தாயில் கேவிக் கொண்டிருக்கின்றாள். அவளது மருமகன் சித்தப்பிரமை பிடித்தவன் போல குந்தியிருக்கின்றான் உடம்பெங்கும் வெட்டுக்காயங்கள்.

கண்ணெதிரே தன் மனைவியை பத்துப் பன்னிரண்டுக்கு மேற்பட்ட காடையர்கள் பலாத்காரமாக தூக்கிக்கொண்டு சென்றபோது தன்னால் ஈடுகொடுக்கமுடியாது என்றாலும் கையாலாகாதவனாக வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்க முடியாமல் மனைவியை விடுவிக்க முயற்சிசெய்த அவனுக்கு மிஞ்சியதெல்லாம் அடி உதை வெட்டுக்காயங்கள் தான்.

அவனை அவர்கள் உயிரோடு விட்டிருக்கவே மாட்டார்கள்; ஆனால், அவர்களது முழுக்கவனமும் அவனைத் தாக்குவதைவிட; அவனது மனைவியை யார்முதலில் அடைவது என்பதில் இருந்ததால்தான் அந்த அளவோடு அவன் உயிர் பிழைத்தான்.

குற்றுயிரும் குலையுயிருமாக காட்டுப்பாதையில் தப்பிப் பிழைத்து ஓடியவன் எப்படியோ மாத்தளை அகதிகள் முகாமடைந்து, மாலைதான் தோட்டம் வந்து சேர்ந்தான்.

அஞ்சலைப்பாட்டியின் கடைசி மகளை அவன் திருமணம் செய்துக்கொண்டு மபாய் ஆறுமாதம்கூட ஆகியிருக்காது. அவனது மனைவியின் பிரேதம் தம்புள்ளைக்கு அருகில் குளம் ஒன்றில் மிதந்ததாக அகதிகள் முகாமில் பேசிக்கொண்டார்கள்.

தோட்டக் காட்டினிலேயே உழைத்து உழைத்து ஓடாய்ப போவதைவிட வேறுவகையில் பிழைக்கலாம் என்று தோட்டத்தை விட்டு கிராமம் ஒன்றில் குடியேறி அவனோடு சேனைப்பயிர் விவசாயத்தில், ஈடுபட்டிருந்த ஒரு இருபது வரையிலான குடுபபத்துக்கு ஏற்பட்டது இதே கதிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர நினைவுகளின் கொடூர அழுத்தத்திலிருந்து விடுபட முடியாதவளாய் கிழவி இன்னும் அழுதுகொண்டு தானிருக்கின்றாள்.

தமிழர்களுக்கு எதிராக ஏன் இத்தனை ஊழிக்கூத்து. மனிதர்கள் ஏன் இங்கு மிருகங்கள் ஆகிடபோனார்கள் என்பது அஞ்சலைப் பாட்டிக்கு விளங்கவில்லை.

இனவெறி என்பது மனிததத்துவத்துக்கு எவ்வளவு பயங்கரமான சவால்!

அஞ்சலைப்பாட்டிக்குத் தெரிந்ததெல்லாம் அந்த தோட்டமும் மாத்தளை டவுனும்தான், தோட்டம்தான் அவளது உலகம்.

அஞ்சலைப்பாட்டி என்பதைவிட ஆயம்மாபாட்டி என்றால் அறியாதவர்கள் தோட்டத்தில் மட்டுமல்ல, சுற்றுவட்டாரத்திலும் யாரும் இருக்கமுடியாது. பிரசவத்திற்கு மருத்துவம் பார்ப்பதில் எந்த பள்ளியிலும் படிக்காத நுணுக்கம் எத்தனை கஸ்டமான 'கேசையும்' கைமருந்தில் சுகப்பிரசவமாக்கிவிடும் தொழில் நுட்பம். 'அப்றூட் மிட் வைஃப்' மாரெல்லாம் அவளிடம் பாடம் கேட்டுக்கொள்ளவேண்டும் ஆஸ்பத்திரியை நம்புவதைவிட அஞ்சலைப் பாட்டியை நம்புபவர்கள் அதிகம். தோட்டத்தில் இன்று இளவட்டங்களாக திரியும் தொண்ணூறு விதமானவர்கள் அஞ்சலைப்பாட்டியின் கைப்பட பிறந்தவர்கள் தான் என்பதை நினைத்து கிழவி பூரித்துப்போவாள்.

சம்பளம் இல்லாதசேவை. ஒருவேளையோ இருவேளையோ சாப்பாடு. ஒருகிளாஸ் சாராயம் தான் வேதனம். காசு கொடுத்தால் வாங்க மறுத்துவிடுவாள்.

"எத்தனையோ பேருக்கு ஆபத்துக்கு உதவியிருக்கேன் எத்தன உசுற காப்பாத்தியிருக்கேன். முருகா, கதிர்காமத்து அப்பனே! என் புள்ளைய நீயாவது காப்பாத்தியிருக்கக்கூடாதா" தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறுகிறாள்.



பணியலயத்திலிருந்து நாலைந்து பேர் ஓடி வருகின்றார்கள்.

"நோனாத் தோட்டத்தில் நாலுலயத்த அடிச்சி நொறுக்கி கொள்ளையடிச்சிட்டானுகளாம் தோட்டத்து ஆளுகளெல்லாம் காட்டுக்கு ஓடிப் போயிட்டாங்களாம்." மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்தவர்களில் கங்காணி சொன்னார்.

"டீமேக்கர் ஐயா பங்களா, மாஸ்டர் வீடு ரெண்டுலேயும் உள்ள தூக்க முடிஞ்ச சாமான்களை யெல்லாம் எடுத்துக்கிட்டு மீதி சாமான்களையெல்லாம் அடிச்சி நொறுக்கி வீடுகளுக்கும் நெருப்பு வச்சிட்டானுக..."

"நாலு நாட்ல இருந்து நாநூறு பேருக்கு மேலவந்தது மூலத்தான் அங்க உள்ள ஆளுகளால எதுத்து நிற்க முடியலியாம். ஆடுமாடுக கோழிகளகூட கொண்டுபோயிட்டானுகளாம். கொண்டுபோக முடியாதத வெட்டிப் போட்டுட்டானுகளாம்?

"ஒல் சிலோன் 'இலங்கை பூரா ஒரே கொலப்பமாகெடக்கு..."

மாறிமாறி செய்தி சொன்னார்கள்.

வாசலில் நின்ற பூவரச மரம் சிலிர்த்துக்கொண்டது. இலைகளிலிருந்து பொலபொலவென பனி கொட்டியது.

"நாங்க என்ன குத்தம் செய்தோம் நாசமாப்போன இவனுகள ஒருபேதி வந்து கொண்டு போகாதா!" அஞ்சலைப்பாட்டி சாபமிட்டாள்.

"நம்ம தோட்டத்தையும் அடிக்கத்திட்டமிட்டிருக்கானுகளாம். எந்த நேரத்திலும் இவனுக வரலாம்..." என்றான் ஓர் இளைஞன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஊரெல்லாம் இப்படி ஒரே கொலப்பம் நடக்குதுங்களே எங்களுக்கு ஒருபாதுகாப்பு கொடுங்கன்னு நம்மபெரியதொர சில்வாகிட்ட நான் சொன்னேன். சரி பார்ப்போமின்னு சொன்னவரு, காலையில் டவுனுக்குப் போனரு. இன்னும் திரும்பவரல. உத்தியோகஸ்தர்மாரும் ஒரு நடவடிக்கையும் எடுக்கல்ல...''

அமைதியாக இருந்த கூட்டம் சலசலத்தது.

''எல்லோரும் கொஞ்சம் பேச்ச நிப்பாட்டுங்க, எல்லாலயத்திலேயும் உள்ள ஆளுககிட்ட பூரா பேசியாச்சி, பொம்பள ஆளுக கெலடு கட்டைக சின்னப்புள்ளைக எல்லாம் காட்டுப்பக்கம ஒளிய வச்சிட்டு ஆம்பளைகள் எல்லாம் லயங்கல்ல காவலுக்கு நிற்கிறதுன்னு முடிவு செய்திட்டோம் மத்தலயத்து ஆளுக எல்லாம் ஒத்துக்கிட்டாங்க. வேறவழியில்ல...'' என்றார் கங்காணி தீர்மானமாக.

கிழடு கட்டைகளும் பெண்களும் சிறுபிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு-இராணுவ வீரர்களைப் போல வரிசையில் அணிவகுத்து நிற்கும் இறப்பர் மரங்கள் தோப்பாய் வளர்ந்திருக்க; இறப்பர் நிரைகளுக்கிடையில் செழித்து நிற்கும் கொக்கோ மரங்கள் திட்டுதிட்டாய் இருளை அப்பிக்கொண்டிருக்க; நட்சத்திரங்களைப் பறிகொடுத்த சோகைப்பிடித்த நிலா பட்டும்படாமல் கஞ்சத்தனமாக வழிகாட்ட 'மொடர்ன் ஆர்ட்டைப்' போல எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத புல் மண்டிய குறுக்குப்பாதையில் பழக்க நிதானத்தில் தோட்டத்து பவுண்டரி ஓரத்திலிருக்கும் காட்டுக்குப் பயணத்தை தொடங்குகின்றார்கள். தூக்கம் கலைந்த பிள்ளைகள் அழத் தொடங்கினார்கள்.

''யாரப்பா அது. புள்ளைக உட்டு அழுகைய கொஞ்சம் அமத்துங்க, சத்தம் போடாம போகனும். நிலா வெளிச்சத்தில் கவனமா, நிதானமா போங்க, மேல் டிவிசன்ல உள்ள ஆறு லயத்து பொம்பளை ஆளுகள எல்லாம் நான் அனுப்பிட்



டேன். காட்லபோயி கப்பு சிப்புன்னு இருக்கனும்...'' கங்காணியார் ஒருபீடியை பற்றவைத்துக் கொண்டார்.

''நம்ம தலைவிதியை யாருகிட்ட போயி சொல்ல. நம்ம சனம் ஈந்தியாவில இருந்துவந்து காடுவெட்டி, ரோட்டுப் போட்டு தேயிலை, றப்பர் தோட்டம் உண்டாக்கி; ஆறேட ஆறுமணி நாயா உழைச்சி அரைவயித்து கஞ்சி குடிக்குது. நம்மலபோட்டு இப்புடி அநியாயம் பண்ணுறானுகளே அவனுகள ஒருபாம்பு புடுங்காதா...!'' தட்டுக்கெட்டு தடுமாறி குறுக்குப் பாதையில் தனது பேரனின் தோளைப்பிடித்தவாறு போய்க்கொண்டிருந்த முத்தன் கிழவன் சொன்னான். முத்தனுக்கு பகலிலேயே சரியாக கண்தெரியாது. தடுமாறி விழப் போனவனை பேரன் பிடித்துக்கொண்டான். காலில் வாதம் வேறு. நொண்டிநொண்டி நடந்தான்.

''சும்மாதொன தொனக்காம வாப்பா'' இது இன்னொரு கிழட்டுக்குரல்.

''அடசும்மா இருப்பா மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர் வனவாசம் போனமாதிரி இருக்கு நம்மபொழப்பு. என் பெரிய பயகிட்ட நான் முந்தியே சொன்னேன். வாடா ஈந்தியாவுக்குப் போயிருவமின்னு. பயபுள்ள கேக்கல்ல. இப்ப நாய்ப்படாத பாடுபடுறோம். நம்ம சனங்கள கொண்டுவந்து இப்புடி அநியாயமா படுகுழில தள்ளுன வெள்ளைக்காரன் நாசமாப்போக...'' முத்தன் கிழவன் தொனதொனத்துக் கொண்டே நடந்தான்.

நாடோடிக் கும்பலைப் போல காட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். அஞ்சலைப்பாட்டியும் தான் நடக்கின்றாள். 'நடந்தால் ஆச்சா மடியில் கட்டிவளர்ந்த நெருப்பு நீறுபூத்து நெஞ்சில் கனல்கிறது. முருகா! முருகா!!

லயத்திலிருந்து கால்மைல் தூரம் கடந்து இருப்பார்கள் காட்டை அடைய இன்னும் ஒருமைல் தூரமாவது நடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். திசை திருப்பப்பட்ட மகாவலிகங்கை சுதுகங்கையோடு சங்கமித்து பிரவாகித்து ஓடும் பேரிசைச்சல் கேட்கிறது.

‘அஞ்சு றோட்டு சந்தி’யை நெருங்கும்போது, தூரத்தில் ஒரு பந்தம் வெளிச்சம் வருவது தெரிகின்றது, பந்தம் இறப்பர் மலைக்கு கீழ்ப்புறமாக விருக்கும் ‘கொலணி’யிலிருந்து வரும் குறுக்குப் பாதையில் முன்னேறுவது மேலிருந்து பார்க்கும்போது நன்றாத்தெரிகின்றது.

அதிர்ச்சியில் வாயடைத்துப்போய் எல்லாரும் ஒருகணம் மௌனமாக நின்றார்கள். ‘‘கொலணி’’க்கும் அவ்விடத்துக்கும் குறைந்தது ஒரு மைலாவது இருக்கும்.

‘‘கொலணியிலிருந்து ஒருகூட்டம் தோட்டத்தை தாக்க வருகின்றதா?’’

குறுக்குப் பாதைக்கு அப்பால் பால் மரக்காட்டில் எல்லாரும் குந்திக்கொண்டார்கள்.

பந்தம் வெளிச்சம் அண்மையில நெருங்கிவிட்டது. ‘‘கொலணி’’யில் அப்பம் சுட்டுவிற்கும் சிங்களப்பெண் அலிஸ்நோனா ஒருசிறுவன் துணையுடன் அந்த நடுச்சாமத்தில் வந்து கொண்டிருககின்றாள்.

‘அர்த்த ராத்திரியில் அலிஸ்நோனாவுக்கு என்னலேலை? அவளது மருமகனும் நோனாத்தோட்ட சம்பவத்தில் பங்கு பற்றியதாக செய்தி பரவியிருந்தது. வேலைவெட்டி ஒன்றும் செய்யாமல் கசிப்பு காய்ச்சுவது: களவெடுப்பது, குடித்துவிட்டு ஊர் சுற்றுவது போன்ற செயல்களில் ஈடுபடும் அவன் ஒரு கியாதியான ஆள்தான். எங்கேயாவது ஒரு ‘கச்சால்’ நடந்ததாகப் பேச்சடிப்பட்டால் தொடர்ந்து அவனது பெயரும் அடிபடும்.



அலிஸ் நோனாவும் ஒருசிறுபையனும் மாத்திரமே வருகின்றார்கள் என்பதை உறுதியாக்கிக் கொண்டவர்கள் மீண்டும் குறுக்குப் பாதைக்கு வந்தார்கள்.

‘‘நானுங் தோட்டத்திக்கிதாங் போறனது. நீங்க எல்லாம் எங்கே போறனது?’’ கூட்டமாக நின்றவர்களைப் பார்த்து அலிஸ்நோனா கேட்டாள்.

‘‘……………’’ ஒருவருமே வாயைத்திறக்கவில்லை. பந்தம் மட்டும் குபுகுபுவென எரிந்துக் கொண்டிருந்தது.

‘எல்லாங் ஆளுங்ரே ஜாமே எங்கே போறனது?’ மீண்டும் கேட்டாள்.

‘‘கொளப்பம் நடக்குது தானே அதுதான் இந்தப்பக்சம் வந்தோம்’’ யாரோ ஒருத்தன் சொன்னான்.

‘‘இந்த யாப்பனே மினிசுனால தானே இந்த கரச்சல் அவங் இந்தஊர் பிரிச்சி கேக்கிறது தானே!’’ அலிஸ்நோனாவின் அரசியல் இது.

‘‘அவங்க ஊர் பிரிச்சி கேட்டா அதுக்கு எங்களப்போட்டுக் கொல்றதா? நாங்கள் என்னா குத்தம் செய்தோம் எதுக்கும் ஒருநாயம் வேணுமா?’’ முத்தன் கிழவன் சொன்னான்,

‘‘இந்த கொலப்பம் நாளைதானே பெரிய கரச்சல். களவாணிப் பயல்கள் தானே கொலப்பம் செய்யிறது. நாங் இந்த ஆயம்மா தேடித்தான் வந்தனது. நாங்உட்டு மகளுக்கி புள்ள பெறக்கிறதிக்கி வயித்துவலி மிச்சங் கஸ்டப்படுறாங். இப்ப ஸ்பிரித்தாலக்கி கொண்டுபோகவும் முடியாதுதானே. றோட்ல ராவைக்கி கார், பஸ் ஒன்றும் ஓடமுடியாதுதானே மார்ஷல்லோ சட்டம் தானே போட்டிரிக்கி...’’ அலிஸ்நோனா பரிதாபமாக சொன்னாள்.

‘‘உங்க மருமகன் எங்க?’’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்த நாசமாப் போனவன் இப்பமூனு நாள் வீட்டுக்கு வந்தனது இல்லதானே''

அலிஸ் நோனுவின் பதிலேத்தொடர்ந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அவர்கள் கேள்விப்பட்டது உண்மையாகவும் இருக்கலாம்.

''நம்பமகள் புள்ள பெக்க மிச்சங் கஸ்டப்படுறனது· ஆயம்மா ஆச்சிதான் நமக்கு ஒதவி செய்யவேணும்.''

நள்ளிரவின் அமைதியை குலைப்பது போல 'லயங்கள்' இருக்கும் பக்கம் பலர் கூச்சலிடும் சத்தத்தோடு கலந்து கூரைத் தகரங்களைத் தாக்கும் சப்தம் பலமாகக்கேட்கிறது.

நாய்கள் வேறு சல்சல் லென்று குரைக்கின்றன.

''ஐயையோ நாசமாப் போனவனுக லயத்துக்கு வந்திட்டானுக போல இருக்கே. முருகா! அந்த ஆம்பளைகள் எல்லாம் என்ன செய்யப் போறுங்களோ!'' ஓர் இளம்பெண் கிறீச்சிட்டாள்.

பெண்கள் வாயிலும் வயிற்றிலுமடித்துக்கொண்டு கதறத் தொடங்கினர்கள்.

''யாரப்பா அங்க ஒப்பாரி வைக்கிறது. எல்லாரும் வாயப் பொத்துங்க'' நொண்டிக்கிழவன் அதட்டினன்,

லயங்கள் பக்கம் ஒலிபலமாகக் கேட்டது. கூட்டம்வெலவெலத்துப்போய் நின்றது.

''ஆயம்மா ஆச்சி நீங்க இப்ப நம்மகூட வரனும். ஒங்களுக்கு மிச்சங்பின் சித்தவெய்!'' அலிஸ்நோனு பரிதாபமாக நின்றுள்.

''இந்த நேரம் ஆயம்மாவ் கொலணிக்கு அனுப்ப முடியாது, ஊரெல்லாம் ஒரே கொலப்பமா கெடக்கு...''



''அடேயப்பா ஆயம்மா பாட்டி மகள படுபாவிக பண்ணுறத ஆக்கினை யெல்லாம் பண்ணி கொன்னுப்புட்டானுக. அதுபேசக் கூட சீவன் இல்லாம கெடக்கு. அதுக்கு இப்பவர முடியாது...''

''லயத்தில இப்ப நடக்கிற அநியாயத்த கேட்டீங்களா எங்க ஆளுகள போட்டு அடிச்சிக் கொல்றுனுக. ஐயையோ அஞ்சலப் பாட்டிய சிங்கள ஆளுககூட அனுப்பமுடியாது...

ஏககாலத்தில் பல மறுப்புக் குரல்கள் ஒலித்தன:

''ஒருவயித்துப் புள்ளக்காரி புள்ளபெற வலிவந்து கஸ்டப்படுற நேரம் உதவிசெய்யமுடியாதுன்னு சொல்றது தர்மம் இல்ல. இந்த நேரத்தில உதவி செய்யாட்டி பொறகு எப்ப செய்யிறது. நான் கொலணிக்கு போயிட்டு வாரன்...'' என்றுகூறிய அஞ்சலைப்பாட்டி, பந்தம் வெளிச்சத்தில் அலிஸ் நோனுவைப்பின் தொடர்ந்து கொலணியை நோக்கி நடக்கத் தொடங்கினள்.

அவளை யாரும் தடுக்கவில்லை.

தொடர்ந்து என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியாதவர்களாய் ''இருளடித்துப் போன'' அவர்கள் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

லயங்கள் பக்கம் கேட்ட சத்தம் ஓய்ந்து அமைதி நிலவியது.

தூரத்தில் மின்னல் கீற்றுகள் தரையில் நடந்து வருகின்றனவா. சிறிது நேரத்தில் நாலைந்து ''டோர்ச் லைட்' வெளிச்சம் அவ்விடத்தை நெருங்கிவிட்டது.

பயத்தில் இரத்தம் உறைய 'பேச்சு மூச்சின்றி' கப்சிப் என அவர்கள் இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பயப்படவேணும் நாங்கதான் வர்ரோம்'' கங்காணி யார் குரல் கொடுத்தார். அவரைத் தொடர்ந்து இன்னும் சிலர் வந்தார்கள்,

''வந்தவனுக எல்லாம் திரும்பி ஓடிட்டானுக!'' என்றார் கங்காணி.

கங்காணிக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவனின் தலையில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கன்னங்களிரண்டிலும் வடிந்த இரத்தம் காய்ந்து செங்கோடுகளாகத் தெரிந்தன.

''ஒரு இருபது முப்பது பேர்கிட்ட கத்தி, கம்பு, சைக்கிள் செயின் எல்லாம் எடுத்துக்கிட்டு லயத்த அடிக்க வந்தானுக. சந்திக்கிட்ட அவனுக வந்த நேரமே நான் கண்டுட்டேன். நான் முன்னுக்குப்போய், இந்தாப் பாருங்க இங்க உள்ளவங்க எல்லாம் தோட்டத்தில நாயாப் பாடுப்பட்டு கால்வயிறு அரைவயிறு கஞ்சிக் குடிக்கிறவங்க. ஒருபாவமும் செய்யாத இவங்கள ஒன்னும் செய்யவேணும். பேசாம திரும்பிப் போயிருங்க அப்பிடின்னேன். 'டேய் நீயும் தமிழன் பக்கம் சேந்துட்டியா மரியாதயா உன் வேலய பார்த்துக்கிட்டு இங்க இருந்து போயிரு' அப்படின்னு ஒருத்தன் சொன்னான்' அடே நான் தமிழன் பக்கம் சேரலடா. நியாயம் பக்கம், சேந்திருக்கேன். நீங்க எல்லாம் வந்தவழியே திரும்பி போயிருங்க'ன்னு தயவா சொன்னேன். அவனுக கேட்கல. லயத்துக்கு கல்லடிக்கத் தொடங்கினானுக. என்னால பொறுக்க முடியல. வாளெடுத்துக்கிட்டு பாஞ்சேன். முன்னுக்கு நிண்டவனுக்கு ஒருவெட்டு. இன்னொருத்தன் வந்தான்; அவனுக்கு மண்டையில போட்டேன் ஒருபோடு. மத்தவனுக எல்லாம் சொல்லாம கொல்லாம ஓடுனானுக. அவனுக அடிச்ச கல்லுதான் என் மண்டையில பட்டிருச்சி. அவனுக போயி இன்னொரு பெரிய கூட்டத்த கூட்டிக்கிட்டு வந்தாலும் வரலாம் என்றான், பொடி அப்புஹாமி முகத்தில் வடிந்த இரத்தத்தை துடைத்தபடி.

பொடி அப்புஹாமி அதே தோட்டத்தைச் சேர்ந்த ஒரு சிங்களத் தொழிலாளி

# உறவுகள்

மகன் இப்படி பேசுவான் என அந்தத்தாய் கனவில் கூட நினைத்ததில்லை. அவளது கணவன் உயிர் வாழ்ந்த காலத்தில் ஒருநாளாவது இப்படியான வார்த்தைகளை பேசியிருக்க மாட்டான். கணவனது மகிழ்ச்சியே தனது இன்பமாகவும்; அவனது துன்பங்கள் தனது வேதனைகளாகவும் அவள் பகிர்ந்து கொண்ட நாட்களில் கூட சிறுசிறு சண்டைகள் வராமலிருந்ததில்லை. அந்த சண்டைகளின் காரணங்கள் எவ்வளவு அற்பமானதாக இருக்குமோ அதைவிட அற்பமானதொரு நேரத்திற்குள் அவர்களது கோபமும் சூடாறி தணிந்து ஒன்றுமே நடவாதது போல் ஆகிவிடுவார்கள். சண்டை ஏச்சுப்பேச்சு என வந்தால்கூட ஓர் எல்லைமீறாத வரம்புக்குள் தான் அது இருக்கும்.

லேசில் மறந்து விடக்கூடிய வார்த்தைகளா காலையில் மகன் பேசியது... ''கெழட்டுப் பொணமே பேசாம வாய அடக்கிக்கிட்டு குடுக்கிறத வாங்கி தின்னுக்கிட்டு தொன தொனக்காம கெட. அப்பிடி இருக்க இஸ்டம் இல்லியா, எங்கயாவது போயி பிச்சை எடுத்து தின்னு; அதுங் கஸ்டமா இருந்தா செவனேன்னு போயிட்டு ஆலமரத்து சந்தில கார் பஸ் போறநேரம் சிவசிவன்னு கழுத்த குடுத்திரு. கவுருமெண்டுக்கு ஒருகொத்து அரிசி சும்மா குடுக்கிறது சரி லாபமா இருக்கும்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்ததும் விடியாததுமாகத் தன்மகன் இப்படி எரிந்து விழும்படியாக அவள் என்னதான் தவறு செய்துவிட்டாள்.

அந்தக்காம்பிராவின் நாலடித்திண்ணையில் சுருட்டி மடக்கிக் கொண்டு கிழவி கிடந்தாள். தைமாதக் குளிரில் தரையெல்லாம் நடுங்கும்போது குளிரைத்தாங்கும் சக்தி அவளது உடலைப் போர்த்திருந்த கிழிந்துபோன துப்பட்டிக்கு மட்டுமல்ல அவள் உடலுக்குமில்லை தான்.

வீட்டின் உள்ளே படுக்கலாமென்றாலும் அந்தஒரு 'கம்பரா'வினுள் எத்தனை பேர்படுப்பது அவளது மகனும் மனைவியும் பேரப்பிள்ளைகள் ஆறும் சுருட்டி மடக்கிக்கொண்டு இரவுகளை கழிப்பதே சாதனைதான்.

மகனுக்குத் தொல்லையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், மழையோ குளிரோ எதுவானாலும் திண்ணையில் 'கட்டை'யைப் போட்டுக் கொள்வாள். இரவில் அவளுக்கு ஆள்துணை - பேச்சுத்துணை யெல்லாம் - லயத்தில் ஒருவரும் சொந்தம் கொண்டாடாத அந்தசொறி நாய்மட்டும்தான்,

காலையில் மருமகள் பிறட்டுக்கும் போகும் அவசரத்தில் திண்ணையில் தொங்கிய கூடையை எடுக்கையில் - படுக்கையில் கிடந்த கிழவியை நன்றாக மிதித்துவிட்டாள் திண்ணையில் ஒருஜீவன் 'நான்கைந்து துண்டுகளாகத் தன்னை மடித்துப் போட்டுக்கொண்டு கிடக்கின்றதே' என்பதை சற்று நிதானமாகப் பார்த்திருந்தால் அவளை மிதிக்க வேண்டியநிலை மருமகளுக்கு ஏற்பட்டிருககாது. கிழவியை ஒரு பொருளாகக் கூட கொள்ளாத அலட்சியம் மருமகளுக்கு.

''என்னபுள்ள நான் படுத்திருக்கிறது கண்ணு தெரியலியா... இப்புடி நாயா மிதிக்கிற மாதிரி மிதிக்கிற? முனங்கியபடி கிழவி எழும்பினாள்.

''என்ன எனக்கா கண்ணு பொட்டன்னு சொன்ன எனக்கு கண்ணு தெரியாம போனத்தானே ஒனக்கு சந்தோசமா இருக்கும். அதோட யார நாய்கீய்னு சாடபேசுற?'' மருமகள்காரி சண்டைக்குத் தயாராகி விட்டாள்.



''நான் என்ன சொன்னேன். அதுக்குள்ள நீ ஒரேயடியா சண்டைப்புடிக்கிற மாதிரி பேசுற?''

''என்ன என்னிய சண்டை காரின்னு சொல்ற நானு ஊருபூரா சண்டைக்கி சிண்ட தூக்கிட்டு சிரிப்பாச் சிரிச்சிக்கிட்டு அந்தமகன் ஊட்டுக்கும் இந்தமகன் ஊட்டுக்கும் நாயா அலையிறன்...''

மருமகள் ஆரம்பித்து வைத்த சண்டையில் மகனும் கலந்துகொண்டு தாயை 'நாக்கைப் பிடுங்கிக் கொண்டுசாக வைக்கும்' கேள்வியைக் கேட்டுவிட்டான். கிழவிக்கு விளங்கி விட்டது.

தான் ஒருஜீவனுக்கு சாப்பாடு கொடுப்பதற்காகத்தான் இத்தனைப் பேச்சும் ஏச்சுமென்று.

ஓ...! தன்னை வீட்டில் வைத்துக்கொண்டு சாப்பாடு போடமுடியாது என்றுதானே பெரியமகனும் வீட்டைவிட்டுத் துரத்தினான்...

மகன்தாய் என்ற உறவெல்லாம் பொருளாதாரம் என்ற நூலில் தான் இழைக்கப்படுகின்றதா!

தனது ஒரேயொரு உடமையான எஞ்சியிருந்த பழையதொரு சேலையைச் சுற்றி எடுத்துக் கொண்டவள் வாசற்படியில் இறங்கி விட்டாள். இனியும் இந்த வீட்டில் இருக்கலாமா?

'எங்கே போகிறாய்'? என்றுகூட மகன் வாயைத் திறக்கவில்லை.

'எங்கே அப்பாயி போற?'' பிறந்த கோலத்தில் நின்ற ஐந்துவயது பேரன்தான் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கேயோ போயி செத்துத் தொலையிறன்''

கிழவி நடந்துவிட்டாள்.

''பெரியமகன் வீட்டுக்குப் போருக பெரிய ரோசத்தில முந்தி அங்க மொத்துப்பட்டு வந்தது தெரியாது...'' மருமகள் முனு முனுத்துக் கொண்டே கூடையைத் தூக்கிதோளில் மாட்டிக்கொண்டு நடக்கிருள் மலைக்கு.

தேயிலையை ஊடறுத்துக் கிழித்துப் போட்ட நாராக வளைந்து கிடக்கும் குறுக்குப் பாதையில் ஏறுகின்ருள் கிழவி, மேட்டு லயத்துக்குப் போவதற்காக.

அதுவரை அவள்பின்னே வந்த சொறிநாய் குறுக்குப் பாதையில் சற்றுநேரம் நின்றுவிட்டு திரும்பி ஓடுகின்றது.

மேல் டிவிசனிலிருக்கும் பெரியமகன் வீட்டுக்குப் போவதற்கொன்றும் கிழவிக்கு இன்னும் பைத்தியம் பிடித்துவிடவில்லை.

மூன்று மாதங்களுக்கு முன்னர்தானே இதேபோல பெரியமகனும் வீட்டை விட்டுத் துரத்திஞன்.

தனது கணவன் இறந்த ஆறு மாதங்களுக்குள் கிழவி நடுத்தெருவுக்கு வந்துவிட்டாள்.

இப்படித் தன்னை மகன்மார்கள் 'அம்போ'வெனக் கை விட்டு விடுவார்கள் எனக்கிழவி எண்ணிப் பார்த்திருக்கவேயில்லை.

புருஷன் சாகும்போது கிழவி காதிலும் கழுத்திலும் நிறைய நகைகள் போட்டிருந்தாள். தாயின் நகையொன்றை ஈடுவைத்துதான் தகப்பனின் செத்தவீட்டுச் செலவுகளை கவனித்தனர் மகன்மார்கள் இருவரும்.



மூத்தமகன் மேல் டிவிசனிலும் இளையமகன் கீழ் டிவிசனிலும் இருந்தும்கூட கிழவியும் கிழவனும் தனியாகத்தான் குடித்தனம் நடத்தினர்.

தகப்பனின் கருமாதி காரியங்கள் எல்லாம் முடிந்த அன்று இளையமகன் சொன்ஞன்......

''ஏன் ஆயா நீ மட்டும் தனியா இங்க இருக்க. எங்கூட வந்து இரு. அப்பா செத்ததற்கு பொறகு ஒன்னிய தனியா விட்டிட்டு போக எனக்கு இஸ்டம் இல்ல...''

சின்னமகன் சொன்னது தான் தாமதம், உடனே அண்ணன்,

''தம்பி ஒனக்கு ஆறுபுள்ளைக இருக்கு நீ புள்ளைக்குட்டிக்காரன். ஒனக்கு கஸ்டமும்கூட. ஆயா என்கூட வந்து இருக்கட்டும். நான் நல்லா பாத்துக்கிறேன்...''

அண்ணன் கூறியவிதம் தம்பிக்குப் பிடிக்கவில்லை.

''நீ என்ஞ அண்ணு அப்படி சொல்லிப்புட்ட நான் என்ஞ ஆயாவுக்கின்னு தனியாவா ஒல வைக்கப்போறன். நாங்க சாப்பிடுற சாப்பாட்டுலதானே அதுக்கும் குடுக்கப் போருேம். அது எனக்கொன்னும் கஸ்டம் இல்ல...''

தாய்க்கு உச்சி குளிர்ந்துவிட்டது. ஒ...! தன் பிள்ளைகள் எவ்வளவு பாசமாக இருக்கின்ருர்கள்.

கிழவி தான் சொன்ஞள்.

''நான் இப்போதைக்கு பெரியவன் வீட்ல இருக்கேன். நீ புள்ளக் குட்டிக்காரன். ஊடமாட ஒன் வீட்டுக்கும் வாரன் காடு வாவாங்கிது, வீடுபோ போங்கிது. இன்னும் எத்தனை நாளோ? அங்க பத்துநாளு இங்க பத்துநாளு இருந்தேன்ஞ என் காலம் ஓடிரும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னமோ ஆயா இங்க நான் ஒன்மகல் ஒருத்தன் இருக்கேனங்கிறது மட்டும் மறந்திருத ஆமா...''

இளையவன் வாஞ்சையுடன் பேச்சை முடித்துக்கொண்டான்?

★ ★ ★ ★

கிழவி ஆரம்பத்தில் மூத்தமகன் வீட்டில் மேல் டிவிசனிற் தான் தங்கினுள். அவள் மூத்தவன் வீட்டுக்குப்போன முதலாவது மாதமே மகனது ஒரேயொரு மகளுக்குக் கல்யாணப் பேச்சு வார்த்தை ஆரம்பித்து முடிவாகியும் விட்டது.

மகளது கல்யாணம் நிச்சயமாகிவிட்ட பின்னர் கல்யாணச் செலவுக்கும் நகைகள் செய்து போடவும் 'கையில்மடியில் இல்லை' யென இரண்டு மூன்று நாட்களாக கவலைப்பட்டுக் கொண்டிருந்தவன் ஒரு மாலையில் தாயிடம் பேச்சை ஆரம்பித்தான்.

''ஆயா உன்பேத்திக்கு அடுத்தமாசம் கால்யாணம் வைக்கப்போறன். கையில செப்பு சல்லிகூட இல்ல. இந்த எடத்த விட்டுட்டா வேறநல்ல எடம் கெடைக்கிறது கூட கஸ்டிப்பு...''

''வயசுவந்த புள்ளைய எத்தனை நாளைக்கு தாண்டப்பா வூட்ல வச்சிருக்கிறது. நல்லஎடம் வாரப்பவே குடுத்திருரது தானே நல்லது. காலமும் கெட்டுப்போய் கெடக்கு...'

தாயின் பதிலைக்கேட்டவன் முகம் மலர்கின்றது.

''அதுதான் ஆயா நானும் ரோசன பண்றேன் சல்லிக்குத்தான் கொஞ்சம் திண்டாட்டமா இருக்கு. கல்யாணம் வச்சி ஒரு 'அட்டோம்' போட்டு மொய் புடிச்சேன்னு ஐநூறு ஆறுநூறுன்னு விழுகும். ஏன்னுநான் இன்னமும் ஒருத்தவ



கூட வைக்கல்ல, எத்தனையோ பேருக்கு நானும் செஞ்சியிருக்கேன் தானே...''

ஆமாப்பா ஒருபுள்ளதானே; தேவய அது மனங்கோணுதபடி செய்யிறதுதான் நல்லது...''

''நான் கேக்கிறேன்னு வித்தியாசமா நெனைக்காத ஆயா நானும் ஏழெட்டு எடத்தில கேட்டுப்பார்த்தேன். சரிவரல அவனவன் மொடடயாதான் இருக்கான். உன் நகைகளைக்குடு ஈடுவச்சி கல்யாண செலவ பார்க்கிறேன். கல்யாணம் முடிஞ்ச மறுநாளே மொய்க்காசு விழுமில்ல, அதுல திருப்பித் தந்திர்ரேன்.''

கிழவிமறு பேச்சின்றி எல்லா நகைகளையும் கழட்டிக் கொடுத்தாள்; அவனும் கல்யாணத்தை நல்ல 'தடபுட'லாகத்தான் செய்தான், ஆனுல் அவன் எதிர்பார்த்தப்படி 'மொய்வரும்படி' தான் கிடைக்கவில்லை. சேர்ந்த சிறு தொகை கல்யாணத்திற்கும் பின்னர் நடைபெற்ற விருந்துக்கும் அதுக்கும் இதுக்கும் என 'தன்னக்கட்ட' முடியாமல் கடனும்வேறு வந்துவிட்டது.

நகையைப்பற்றி கிழவி பேச்சே எடுக்கவில்லை. மகனது கஸ்டம் அவளுக்குத் தெரியாமலில்லையே. அவனும் அதை மறந்து போய்விட்டான் ஒருமாதம் முடிந்து அடுத்த மாதமும் வந்துவிட்டது.

கடன்காரனும் வாசற்படியில் வந்து நின்றுன் கொடுக்கும் வழிதான் இல்லை. கடன்காரனைக்கண்ட இரவே முனுமுனுக்கத் தொடங்கினுன் மகன்.

''ஒவ்வொருத்தர வீட்ல வச்சிக்கிட்டு சோறுபோட்டு எழவடிக்கிறதுன்னு லேசா? நான் என்னு காச மரத்திலயா புடுங்கிட்டு வாரன்?''

அன்றுபிடித்தது வீட்டில் சனியன் தாய்தற்பொழுது மகனுக்குப் பாரமாகத் தோன்றினுள். மறைமுகமாகவே முனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனுத்துக் கொண்டிருந்தவன் ஒரு மாலையில் நேரடியாகவே பாணத்தைத் தொடுத்தான். அன்று அவன் கொஞ்சம் 'தண்ணி'யும் போட்டிருந்தான்.

அவன் மனைவி அன்று சுகமில்லையென வேலைக்குப்போகா மலிருந்தாள், அதைச்சாட்டாக வைத்துத்தன் சண்டையை ஆரம்பித்து விட்டான்.

''நான் ஒருத்தன் சம்பாரிச்சி இந்த வீட்ல எல்லாருக் கும் எலவெடுக்கனும்...''

மனைவிக்கு அவன் பேச்சு பிடிக்கவில்லை.

''நான் இன்னக்கி ஒரு நாளக்கி சொகமில்லன்னு வீட்ல இருந்ததிற்குத்தானே இப்படி சாட கதைகதைக்கிற...'

''நான் ஒன்னிய சொல்லவரல. நீ பாட்டுக்கு சும்மா கெட. இந்த வீட்ல இருந்து தின்னுகிட்டு என் உசுற வாங் கிறவங்கள சொல்றேன். கடன்காரன் என் கழுத்த அறுக் கிறன்.''

மகன் தன்னைத்தான் சுட்டிக்காட்டுகிறுன் என்பது தாய்க்கு விளங்கிவிட்டது.

''ஏன்டாப்பா அப்படி சொல்ற? நீ வான்னு கூப்பிட தானே வந்தேன். ஒனக்கு பாரமா தெரிஞ்சா சொல்லு போயிர்ரேன். என் நகையெல்லாம் இருந்தாலும் இப்பமுடி யாத காலத்தில் வித்துசரி சாப்பிடுவேன்.''

''என்னமோ பத்தாயிர ரூவா நகை! ப்பூ பிச்சக்கார நக ஐநூறோ ஆறுநூறோ பொறும்!''

''அதசரி திருப்பிக் கொடுத்தேன்னாலும் யாருக்காவது வித்து என் காலத்த கழிப்பேன்...''



''கட்டையில போற வயசுல ஒனக்கு நகையா வேணும் நக?''

''நீ இப்புடி பேசுறது நாயமில்லப்பா!''

அவனுக்குக் 'கேந்தி' தலைக்கேறி விட்டது. ''நாயம்பேச வந்திட்டியா நாயம்? பாவமின்னு வீட்ல வச்சிகிட்டு தீனி குடுத்ததுல வந்த கொழுப்பு இது. நான்ஒன் நகையை குடுக் கல்லன்னு போய் கோட்ல வழக்குப்போடு!''

குடிவெறியில் கிழவியின் கையைப் பிடித்துத் தரதர வென்று இழுத்துக்கொண்டு போய் வாசலில் தள்ளி கதவைச் சாத்தினுன்.

மூத்தமகனுல் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் நேரே பணிய டிவிசனுக்கு இளையமகன் வீட்டுக்கு வந்தாள்.

அண்ணணன் தன் தாய்க்குச் செய்த கொடுமைகளைக் கேட்ட சின்னவன் ஒரேத் 'தாண்டாகத் தாண்டினுள்.' தாய்க்காரிதான் தடுத்துவிட்டாள். அண்ணனோடு சண்டை சச்சரவு வேண்டாமென்று.

இளையமகன் சொன்னுன். ''அவன் கெடக்கிறுன் ஆயா பிச்சக்காரப்பய! நான் ஒன்னிய ராசாத்தி மாதிரி பாத்துக் கிறேன்.''

கிழவி இளையவன் வீட்டுக்கு வந்து ஒருவாரம் கழிந்த பின்னர் ஒருநாள் மெல்ல தாயிடம் கேட்டான்.

''ஆயா ஒன் கணக்கில பெரவிடென்ட் பண்ட் பணம் எவ்வளவு இருக்கு? தொர குடுத்த துண்டெல்லாம் எங்க இருக்கு...?''

''ஆறு நூத்திச் சொச்சம் இருக்குபோல இருக்கு. துண் டெல்லாம் என்கிட்டதான் இருக்கு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த சல்லிய இப்பவே எடுத்திறனும் ஆயா. நான் சொனங்கினு எடுக்க கரச்சலா இருக்கும்..."

"அப்படின்னு கௌாக்கரையா கிட்டச் சொல்லி எடுத் திருடாப்பா"

தாயின் பதில் அவனுக்குத் தேனுக இனித்தது.

அடுத்தநாள் எங்கே விடிந்தது ஆபிசில் விடிந்தது என நின்றான் அவன்.

கிளாக்கரையாவைச் சந்தித்து அவருக்குக் 'கொடுக்க வேண்டிய' தொகையை எல்லாம் ஒத்துக்கொண்டு தாயை யும் கூட்டிக்கொண்டு போய் ஒப்பம் வைத்துச் சேமலாப நிதிப்பணத்தை எடுக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டான்.

அவனது யோகம். அதிக நாள் செல்லவில்லை. இந்தியா வுக்குச் செல்பவர்களின் கணக்குகள் சீக்கிரமே முடிக்கப்படு வதால் கிழவியின் பணமும் ஒருமாதத்தில் வந்துவிட்டது.

பணம் வந்ததும் முதல் வேலையாக மனைவிக்கு நானூறு ரூபாயில் அட்டியல் ஒன்று வாங்கிப்போட்டான். அந்த மாதம் தீபாவளியும் வந்தது. இனிக்கேட்கவும் வேண்டுமா?

தீபாவளி முடிந்தது. கிழவியின் பணம் முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. கிழவியிடம் இப்பொழுது மிஞ்சியுள்ள தெல்லாம் பழைய சேலைகள் இரண்டுதான்.

இளைய மகனுக்கும் தாய் தற்பொழுது பாரமாகத்தெரி கின்றாள். தலையில் பாரம் இருக்கிறது என்றால் தூக்கியெறியத் தான் தெரியாதா? எறிந்து விட்டான் தூக்கி!

★ ★ ★ ★

கிழவி மேட்டு லயத்து தலைவர் வீட்டுக்குப் போனாள். கிழவி சொல்வதெல்லாம் தலைவருக்குப் புரிந்தது - என்ன நட வடிக்கை எடுப்பது என்பதைத்தவிர.



துரையிடம் பேசி பிள்ளை மடுவத்தில் தங்குவதற்கு ஏற் பாடு செய்து கொடுத்தார் தலைவர் லயத்தில் யார்யாரோ அனுதாபப்பட்டுச் சோறோ ரொட்டியோ கொடுத்தார்கள்' அதுவும் ஒருவேளையோ இரண்டு வேளையோ தான் நான்கு நாட்களில் கிழவிக்கு கடும் காய்ச்சல் வந்துவிட்டது. கடுமை யான மலேரியா ஜுரம் எனத்தோட்டத்து டாக்டர்துண்டு எழுதிக் கொடுத்து விட்டார்; டவுன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படி தலைவர் துரையிடம் கூறி தோட்டத்து லொறியில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்.

மகன்மார்கள் இருவரிடமும் தாய் ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப் பட்டுள்ளத்தைத் தலைவர் கூறினார். இருவரும் அதைக் காதில் கூடப்போட்டுக் கொள்ளவில்லை.

இரண்டு நாட்களின் பின்னர் கிழவி ஆஸ்பத்திரியில் இறந்து விட்டதாகத் தந்தி வந்தது தோட்டத்திற்கு.

தோட்டக் கணக்கில் பெட்டியொன்று ஏற்பாடு செய்து விட்டு தலைவரும் பத்துப்பதினைந்து ஆட்களும் ஆஸ்பத்திரிக் குச் செல்கின்றனர்.

கிழவியின் மூத்தமகன், மனைவி, இளையமகன், மனைவி, பிள்ளைகள் எல்லோரும் கேட்டடியில் நிற்கின்றனர்.

தலைவரைக் கண்டவுடன் மூத்தமகன் ஓடிவந்து கட்டிப் பிடித்து கேவிக்கேவி சிறிது நேரம் அழுதுவிட்டு.

"தலைவரய்யா எங்காயா என்மேல உசிறயே வச்சிருந் திச்சி. இப்ப அது செத்து சிவலோகம் போயி தெய்வமாயி ருச்சி. அது பொணத்த கொண்டுபோயி என் வீட்ல வச்சி நல்லா தமுறு, கெலாறி நெட் எல்லாம் வாசிச்சி, நல்லா செறப்பா நான்தான் பொதைக்கனும் இதஎன் தம்பிக்கிட்ட சொல்லுங்க......"

அண்ணனின் பேச்சை முடிக்குமுன்னரே தம்பிக்குக்கோபம் வந்து விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தலைவரய்யா நான்யாரு சொன்னாலும் விட்டுக்குடுக்க மாட்டேன், சாவுறதுக்கு ஒரு கெழம வரைக்கும் என்தாய் என்னோடதான் இருந்திச்சி. இனி நான் அந்த தெய்வத்த கண்ணால காண்கவா போறேன். பொணத்த நான்தான் என் வீட்ல கொண்டுபோயி வச்சி பொதைப்பேன்...''

தலைவருக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அண்ணன் தம்பி இருவருமே விட்டுக்கொடுக்காமல் பேசினர்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. இளையமகன் மனைவி தன் கணவனைச் சற்றுதூரம் அழைத்துக் கொண்டுபோய் மெதுவாகக் கூறினாள்.

''நீங்கதான் விட்டுக்குடுங்களேன். ஒங்க அண்ணனே கொண்டுபோய் பொதைக்கட்டுமே. இதுக்கு யாம் இப்புடி சண்டை புடிக்கிறீங்க?''

அவனது முகம் கோபத்தால் சிவந்துவிட்டது.

''நீ யாருடி ஒன்னும் தெரியாதவளாக இருக்க? பொணத்திற்கு பெட்டியும் தோட்டத்துக்கு கொண்டுபோக லொறியும் தோட்டக் கணக்கில சும்மா குடுக்கிறாங்க. வேற என்ன செலவு போயிடப்போவுது. மேற்கொண்டு பத்தோ இருபதோ போகும். நான் இந்த தோட்டத்தில எத்தன வருசம் இருக்கேன். கல்யாணம், சடங்கு, கருமாதி, சாவுன்னு எவ்வளவு மொய் எழுதியிருக்கேன். இதுவரைக்கும் நம்ம வீட்ல தேவ எட்டோம்னு ஒன்னு செஞ்சியிருக்கோமா? இப்ப பொணத்த நம்ம வீட்டுக்கு கொண்டு போனம்னு கட்ட மொய்மட்டும் மூனு டிவிசன் ஆளும் கொறைஞ்சது முன்னூறுருபா லேசா? அதோட கோடிச்சீல எத்தன விழுகும்...''

என்னபதில் சொல்வதென்றே அவளுக்குப் புரியவில்லை.

▣ ▣ ▣



மாத்தளை சோமு

## 'மாத்தளைச் சோமு'வின் கதைகள்

▣ அவன் ஒருவனல்ல
● சிரித்திரன் — 1979

▣ நாய்கள் மனிதராவதில்லை
● வீரகேசரி — 1974

▣ லயத்துப்பயல்
● ...... 1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் ஒருவனல்ல...

ஜன்னல் அருகே நின்று மத்தியில் கம்பீரமாக நிற்கும் ஸ்கூலைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு கண்கள் கலங்க ஆரம்பித்தன. இன்னும் கொஞ்சநேரம் அப்படியே நின்றால் அந்தக் கண்களிலிருந்து கண்ணீர் கொட்ட ஆரம்பிக்கும்.

அவன் ஜன்னலை விட்டு நகர்ந்து நாற்காலியில் உட்கார்த்தான். அப்போது அவனுடைய பார்வையில் அந்த நீலநிற சூட்கேஸ் பட்டது அந்த சூட்கேசில் அவனுடைய எல்லாப் பொருட்களும் அடங்கியிருக்கின்றன. ஒருபயணம் போவதென்றால் அந்த சூட்கேசும் அதனுள் இருக்கும் பொருட்களும் அதிகமானவைதான். ஆனால் அவனுடைய முழு வாழ்க்கைப் பயணத்துக்கும் அவைகள் அதிகமானதென்று சொல்ல முடியுமா? அவனிடம் இருக்கும் அசையும் அசையா சொத்துக்கள் எல்லாமே அந்த சூட்கேசில் இருப்பவைதான்...

நாற்காலியை விட்டு எழும்பிய அவன், அந்த சூட்கேசை தூக்கிப்பார்த்தான். அவ்வளவு பாரமாகத் தெரியவில்லை, ஒருஆள் தூக்கிப்போகக் கூடியபாரம்தான்... ஆனால் அந்தப் பெட்டியைப் பார்க்கும்போது தன்மனதில் கிளம்புகின்ற எண்ணங்களின் பாரத்தைத்தான் அவனால் தாங்கமுடியவில்லை... இத்தனை நாட்களும் உடுத்தியதையும் சொந்தத்தவைக்காக வைத்திருந்ததையும் அப்படியே அந்த சூட்கேசில் எத்தனை சுலபமாக வைத்தாகி விட்டன! ஆனால் இந்த மனதைமட்டும் அவனால் அடக்கிவைக்க முடிந்ததா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இன்னமும் அந்த 'வோர்டர்'னின் உள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. அவன் எடுத்த முடிவுக்கு வந்த பின்னரும், இன்னமும் அந்த முடிவுக்கு வந்தது சரியா, தவறு? என்று ஆராய்ச்சி செய்து பார்க்கிறதன் மனதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை...

நேற்றுவரை ஸ்கூல் மாஸ்டராக இருந்த அவன், அந்தத் தோட்டத்தை விட்டுப் போவதென்றும் மாஸ்டர் வேலையை உதறுவதென்றும் உறுதியாக இறுதியாக முடிவு எடுத்திருந்தான். ஆனால் அவனால் இன்னமும் அந்த முடிவின்படி தைரியமாக நடக்க முடியவில்லை...

ஜன்னல் அருகே வந்து நின்றான் அவன். அவனுடைய பார்வை ஜன்னல் வழியாக நழுவி வெளியே ஓடியது. ஒரு கமிராவின் மூலம் பார்ப்பதுபோல் அந்த ஜன்னல் காட்சிகள் அழகாக இருந்தன... வெளியே இயற்கை அன்னை நடந்துபோக ஒரு பச்சைக்கம்பளம் விரித்தது போல தேயிலைச் செடிகள் நின்றுகொண்டிருந்தன. அதே தேயிலைச்செடிகள் யாரோ ஒருத்தர் நடந்துபோக சற்றுவிலகி நின்று செம்மண் நிறத்தில் நடைபாதை போட்டிருந்தன. அதில் நடந்து போனால் அந்த எஸ்டேட் ஸ்கூலுக்குப் போகலாம்... ஓ! அந்த ஸ்கூல்கூட அழகாக ஜன்னல் வழியே தெரிகிறதே! அந்த ஸ்கூலையே பார்த்தான்... அதில்தான் அவன் மாஸ்டர் நேற்று வரை... இன்று. அவன்தான் அந்த ஸ்கூலை விட்டு விலகிவிட ராஜினாமாக் கடிதம் எழுதி விட்டானே! இனி அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அந்தசூட்கேசைச் தூக்கிக்கொண்டு போகவேண்டியது தான்...

எந்த ஸ்கூல் ஆசிரியர் இல்லாமல் மூடப்பட இருந்ததோ அந்த ஸ்கூலை மூடாமல் தானே ஆசிரியராக பணிபுரிந்து காப்பாற்றினானே, எந்த ஸ்கூலில் வேலை செய்வதை ஒரு பெரிய சமூகசேவை என்று நினைத்தானே, அந்த ஸ்கூல் வேலையை உதறிவிட்டு நகர்ப்புற ஸ்கூலில் சேவை செய்யப் போகிறானாம்... அதற்காகத் தான் அந்த ராஜினாமாக் கடிதம்..



தன்னை இப்போது வேறு ஒருத்தனாக விலகி நின்று பார்க்கும் போது அவனுக்கு தன்மீதே ஒரு கசப்பும் வெறுப்பும் பீறிட்டுக் கொண்டு வருகிறது...!

அன்று 'எஸ்டேட் ஸ்கூலில் படித்துக் கொடுத்து லயமே உலகமென்று கிடக்கின்ற மனிதக்கூட்டத்தின் வாரிசுகளை அறிவு வெளிச்சத்திற்கு கொண்டு செல்வேன்! இது எனது லட்சியம்! இதை யாராலும் தடுக்க முடியாது' என்று யாரிடம் ஆவேசமாக சத்தம் போட்டானோ அவரிடமே இப்போது அடக்கமாக சரணடைந்து விட்டானே!

போன மாதம் அவன் அப்பா வந்திருந்தார். அவரோடு அம்மாவும் வந்திருந்தாள்.

"இந்த தோட்டத்து ஸ்கூல்ல வேல செஞ்சு என்னத்தை காணபோற, ஆடுமாடுகளை மேய்க்கிறதும் இங்க படிச்சி கொடுக்கிறதும ஒண்ணுதான்... நீ சரின்னு சொல்லு... டவுன் ஸ்கூலுக்கு எம். பியை பிடிச்சி டிரான்சர் வாங்கித்தாறேன்...'

அவனுடைய அப்பாவும் அம்மாவும் ஏககுரலில் அத்தீர்மானத்தை வெளியிட்டார்கள்.

அவன் மௌனமாக இருந்தான்...... அவனுடைய நினைவுகள் அந்த ஸ்கூலைச் சுற்றிசுற்றி வந்தன. நகரத்திலிருந்து இருபது மைல் தூரத்தில் இருக்கும் அந்த எஸ்டேட் ஸ்கூல் மிகவும் பின்தங்கிய ஸ்கூல்... நகரத்திற்கும் அந்த எஸ்டேட்டுக்கும் ஒருநாளைக்கு இரண்டே இரண்டு தடவை தான் பஸ் உண்டு. பஸ்ஸில் போவது பதினைந்துமைல். மீதி ஐந்துமைல் நடைபாதை. அங்கே போய் படித்துக் கொடுக்க தோட்டத்தில் பிறந்து வளர்ந்து படித்தவர்களே பின்வாங்கினார்கள். டவுண் ஸ்கூலில் 'டிப்டாப்'பாக உடுத்தி மினுக்கி மாஸ்டர் வேலை செய்வதையே அவர்கள் விரும்பினார்கள். அதனால் அந்த எஸ்டேட் ஸ்கூலை மூடப்போனார்கள் அதை மூடாமல் தடுத்தவன் அவன்தான் அவன் அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனபோது நம்ம ஸ்கூலுக்கு யாரோ புதுசா மாஸ்டர் வந்திருக்காராம்.அவர் யாரோ!' என்றஎண்ணத்துடன் அவனை பார்க்க வந்தவர்கள் ஏராளம். வந்திருப்பது 'சாகப்போற கெழடாத்தான் இருக்கும்' என்று நினைத்தவர்கள் அவனைப் பார்த்ததும் முதல் பார்வையிலேயே அவனை நம்பினார்கள் மறுநாள் லயத்தைச் சுற்றி ஆடிக்கொண்டிருந்த பிள்ளைகள் எல்லாம் 'அரைத்துண்டு' சிலேட்டுடன் ஸ்கூலுக்கு வந்து விட்டார்கள். ஓ எத்தனை விதமான பிள்ளைகள்!... தேயிலை செடிகளும் லயங்களும் தான் உலகமென்று நினைக்கின்றவர்களின் வாரிசுகள்! அவர்கள் படிக்க வருவதே வேடிக்கை சிலர் கால்சட்டை மட்டும் போட்டும், சிலர் கால்சட்டை போடாமல் முழங்காலுக்குக்கீழே தொங்கும் பெரியசட்டைக்குள் உடம்பை நுழைத்துக் கொண்டும் வருவார்கள். அவர்களில் யாரிடமும் படிக்கத் தேவையான எல்லாமே இருக்காது... அத்தனை பேரையும் அவன் தான் மேய்க்கவேண்டும்...

அவனுக்கு முன்னர் வேலை செய்த 'மாஸ்டர்மார்கள்' எப்போது பார்த்தாலும் 'படம்பார் பாடம் படி... ஒன்று இரண்டு, மூன்று, நாலு, ஐந்து — ஏ, பி, சி, டி' போன்றதைத்தான் கோரஸ் பாட்டுப்பாடி மேய்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் என்று வந்தானோ, அன்று தொடக்கம் தான் அந்தப் பிள்ளைகள் படிக்க ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று, என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் கூட்டிக் கழித்து, பெருக்கி, வகுக்க ஆரம்பித்தார்கள்! A, B, C, D என்று 'இங்கிலீஸ பேசியவர்கள் 'I am a boy — Y are a Girl' என்று படிக்க ஆரம்பித்தார்கள்.

அவன் வந்தபோது இருபத்தைந்து பேர் அடங்கிய பிள்ளை மடுவமாக இருந்த அந்தஸ்கூல நிஜமாகவே ஸ்கூலாக மாறியது... பிள்ளைகளின் தொகை மூன்று மடங்காகியது. ஸ்கூலைச் சுற்றி காய்க்றித்தோட்டம் உண்டாகியது. விளையாட இடமும் பந்தும் கிடைத்தது. ஸ்கூல் சுவர்களில் மாட்ட படங்கள் கிடைத்தன.



''என்னா பேசாமஇருக்க, ஒருமுடிவை சொல்லு...'' என்று இழுத்தார் அவனுடைய அப்பா. அந்த இழுப்பைத் தொடர்ந்தாள் அம்மா...

''மத்தவங்க எல்லாம் இந்த ஸ்கூல வேணும்னு போகுதுக. நீ என்னடான்னா இதை தான்னு வாங்கிபடிச்சி கொடுக்கிற... இங்கு மனுசன் வாழ்வானா? காட்டுத் தொங்கல்... இந்த வேலவேணும்...

அவன் அப்போது அவர்களின் பேச்சை எண்ணிப்பார்த்தான். இன்று தோட்டத்தை வெறுக்கும் இவர்கள் ஆரம்பத்தில் கணக்கப்பிள்ளை குடும்பமாக தோட்டத்தில் இருந்தார்கள். இன்று டவுனில் வீட்டைக்கட்டி, டவுண் ஆட்களாக மாறி தோட்டத்தின் மீது வெறுப்பைக்கக்குகிறார்கள்... அவனுக்கு ஆத்திரம் வந்தது, அவர்கள் வேறுயாருமாக இருந்திருந்தால் வாய்க்குவாய் திட்டியிருப்பான். ஆனால் அவர்கள் அவனைப் பெற்றவர்கள்...

அவன் பதிலே பேசவில்லை. அப்பாவும் அம்மாவும் திரும்பிப் போனார்கள். அதன்பின் அம்மாவிடமிருந்து ஒருகடிதம் வந்தது. அவனும் அம்மாவைப் பார்க்கப்போனான். போகும்போது, திரும்பிவந்து அந்த ஸ்கூலில் வேலை செய்வதென்ற முடிவோடுதான் போனான், வரும்போது நீலநிற சூட்கேசில் எல்லாவற்றையும் திணிக்க முடிவுகட்டியிருந்தான்... அவனை அவனுடைய அம்மா மாற்றிவிட்டாள்... அவன்போனபோது அம்மா கட்டிலில் கிடந்தாள். அவனைக்கண்டதும் தோட்டத்து ஸ்கூலை விட்டுவிடும்படி கெஞ்சினாள்...

''ஒன்னோட படிச்சவன்தான் கணேஸ்!... இன்னைக்கி அவன் எல்லா வசதியோட இருக்கிறான், கார், பங்களா வாங்கிட்டான். நீயோ மாஸ்டர் வேல அதும் ஒரு தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் வேல செய்யிற ஒனக்கு பெரியஇடத்தில பொண்ணு பார்த்தோம். அவங்க எஸ்டேட் ஸ்கூல் மாஸ்டர் வேல செய்யிறவங்களுக்கு பொண்ணு தரமுடியாதுன்னு சொல்லிட்டாங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மௌனமாக இருந்தான்.

கடைசியில் அவனுடைய அம்மா பாசக்கயிறைவீசி அவனை இழுத்தாள். எப்படியாவது அவனை எஸ்டேட் ஸ்கூலிருந்து இழுத்தெடுக்க வேண்டும் என்பதே அவளுடைய எண்ணம்.

"கடைசியா சொல்ரேன்! நீ யாருக்காக இல்லாட்டியும் எனக்கவாது இங்க வந்திரு! நான்சாக பொழைக்க இருக்கிறேன்..."

அவன் அப்போது தான் அம்மாவை உற்றுப்பார்த்தான் உண்மையிலேயே அவள் தளர்ந்துதான் போய்விட்டாள். முகம் வெளுத்து களை இழந்திருந்தது...

அவன் தான் ஸ்கூலைவிட்டு விலகப்போவதாக முதன் முதலில் தோட்டத்து தபால்காரனின் காதில் போட்டான். அவத அதைக்கேட்டு பேயறைந்ததுபோல் நின்றார். வெகு நேரத்திற்குப்பின்னர் சுயநினைவு ஏந்த அவர் கண்கள் கலங்க சொன்னார் 'நீங்க போனா ஸ்கூலை மூடவேண்டியது தான். யாருமே படிச்சி கொடுக்க வரமாட்டாங்க இனி இந்த பட்டாளம் தோட்டத்தையே சுத்தும்..."

தபால்காரனின் ஒவ்வொரு சொல்லும் நனைந்து நனைந்து தான் வெளியே வந்து விழுந்தது. அவனால் பதில்சொல்ல முடியவில்லை. அந்த தபால்காரனுக்கு தன்முடிவைச் சொல்லாமல் இருந்திருக்கலாம் அவன். ஆனால் அந்தமுடிவு எப்படியோ தெரியத்தானே போகிறது!

தபால்காரர் தபால்பையோடு ஒருபக்கம் சரிந்து சரிந்து நடந்துபோனார். போகும்போது கெஞ்சும் குரலில், "நல்லா ரோசனை பண்ணிமுடிவு எடுங்க மாஸ்டர்..." என்றுசொல்லி விட்டு போனார்,

அவன் யோசித்துப் பார்த்தான். வேறு எந்தமுடிவும் எடுக்க முடியாது. எடுத்த முடிவு சரியாகப்பட்டது அவனுக்கு...



தபால்காரர் போன சற்றுநேரத்தில் அவனுடைய குவார்ட்டர்ஸின் முன்னே சின்னக் கூட்டமே கூடிவிட்டது. அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை... அவர்களை நிமிர்ந்து கூடப்பார்க்க முடியாமல் தவித்தான். அவர்கள் இப்படி திடீரென்று வருவார்கள் என்று அவன் நினைக்கவே இல்லை ஓ... அவன்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள்...! அவன் யார்? அவர்கள் யார்? இரண்டு பேரையும் இணைப்பது எது? அந்தப்பாசம்...

மெல்ல தலைதூக்கி அவர்களைப் பார்த்தான். அந்தக் கூட்டத்தில் தலைவர், கங்காணி, தபால்காரர், பூசாரி... இப்படி பலர்... அதில் ஒருகிழவி இரண்டுகையை ஆகாயத்தை நோக்கி விரித்துக்காட்டிப் பேசினாள்... "மூடப்போன ஸ்கூல நீங்கதான் மூடாம காப்பாத்தினீங்க! நல்லா படிச்சி கொடுத்தீங்க... உங்க மாதிரி பொறுப்போட பாரத்தோட படிச்சி கொடுக்கிர மாஸ்டர்மாருக கெடைக்கனுமே! வர்ர மாஸ்டர் மாருக எல்லாம் கொஞ்சநாளைக்கி இருந்திட்டு அவனைபுடிச்சி இவனை புடிச்சி டவுண் ஸ்கூலுக்கு போயிருனுக... நீங்கதான் எங்கபுள்ளைகளுக்கு நல்லா படிச்சி கொடுத்தீங்க! இப்பபோறேனு சொல்றீங்களே..."

அந்தக்கிழவி ஒப்பாரிவைக்கத் தொடங்கினாள். அவளுக்கு பிறகு அடுத்தடுத்து பலர் பேசினார்கள். அவன் யோசித்துப் யோசித்துப் பார்த்தான்... கடைசியில் அவன் அப்பா வகுத்தவழியிலே நின்றான்.

கட்டிலில் மல்லாந்து படுத்துக்கிடந்த அவனுக்கு தூக்கமே வரவில்லை. தூங்கவேண்டுமென்று தான் கட்டிலில் விழுந்தான். தூக்கம் வந்தால்தானே! பகலில் தூக்கம் வருமா என்ன!

கண்களை மெல்ல மூடினான் அவன். மூடிய கண்களின் இமைக்குள்ளே ஒருகாட்சி நெளிந்து... போனமாதம் ஸ்கூலில் சரஸ்வதி பூஜை லயத்தில் உள்ள அத்தனை பேரும் வந்திருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகள் நடந்தன. டவுனில் இருந்து வந்த ஒருதர் பேசினார். அவனும் பேசினான் கடைசியாக பூஜை நடந்தது. கடைசியாக அவன் நன்றி சொன்னான். அப்போது அவன் கழுத்தில் ஒரு இளைஞன் திடீரென்று மாலை போட்டான். அவன் போட்ட வேகத்திலேயே மாலையைக் கழட்டினான். அதன் பின்னர் அவன், தனக்கு மாலைபோட்டது தவறு மாலை இங்குள்ள ஒவ்வொருவருக்கும் போடவேண்டும் நான் என் கடமையைத்தான் செய்தேன். கடமையைச் செய்ததற்கு மாலை போடமாட்டார்கள் சம்பளம் கொடுப்பார்கள். இங்கே சம்பளம் கொடுக்கிறார்களே! என்று சொல்லி கைதட்டல் வாங்கினான்.

அப்போது ஒருத்தர் சொன்னார்... ''நாங்களாதான் ஒங்களுக்கு மாலை போட்டோம் மத்தவங்க மாதிரி மாலையை வாங்கி எங்களுக்கிட்ட குடுத்து போடச் சொல்லலியே!

அங்கிருந்த அத்தனை பேரும் சிரித்தார்கள்...

கண்களை மெல்ல திறந்து பார்த்தான்... மேலே வீட்டுக் கூரை தான் தெரிந்தது. மீண்டும் கண்களை மூடினான். மறுபடியும் யோசனை... யோசனை... யோசனை.

அப்போது கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. யார் கதவைத் தட்டுகிறார்கள்? என்று நினைத்துக் கொண்டே அவன் கட்டிலைவிட்டு இறங்கிப்போனான். கதவைத் திறந்தான், தபால்காரர் அன்றைய பேப்பரும் கையுமாக நின்றார். அவர் முகத்தில் வெளிச்சம் இல்லை. இருட்டுதான் இருந்தது ஏன்?

அவன் தபால்காரரிடமிருந்து பேப்பரை வாங்கினான். நேற்றுப்போன பேப்பர் லயத்தைச்சுற்றி விட்டு இப்போது தான் வந்திருக்கிறது...

அவன் தபால்காரரைப் பார்த்தான்...



''தம்பி! நீங்க போகத்தான் வேணுமா?... தபால்காரர் கேட்டார்... அவன் மௌனமாக நின்றான்...

''ஒங்கள நம்பிதான் இருக்கிறோம். ஏதோ யோசிச்சி செய்ங்க.'' என்று சொல்லிவிட்டு தபால்காரர் சரிந்து நடந்து போனார். அவருடைய தோளில் தபால்பை இல்லை. ஆனால் அதை தோளில் சுமந்து நடந்து பழகியதால் சாதாரணமாக நடக்கும் போதும் தபால்பை சுமப்பது போன்ற பாவனையில்தான் நடப்பார்.

தபால்காரர் போய்விட்டார்.

அவன் கட்டிலில் விழுந்து ஒருபக்கம் சரிந்து படுத்தான் தூக்கம் வரவேயில்லை...

அடுத்தநாள்... தன்னுடைய ராஜினாமா கடிதத்தை எடுத்துக்கொண்டு அவன் துரையின் பங்களாவுக்குப்போனான் அது துரையின் தோட்டம்... முதலாளி துரை என்று இரட்டை வேடம் போடுவது இங்கே ஒருத்தர்தான்.

குறுக்குப்பாதையில் இறங்கினான் அவன். இரண்டு பக்கங்களும் தேயிலைச்செடிகள்... அதில் பெண்கள் கொழுந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவனைப்பார்த்து அவர்கள் ஏதோ பேசிக்கொண்டார்கள். அவன் தலைகுனிந்தவாறு போய்க்கொண்டிருந்தான்.

குறுக்குப்பாதை கரத்தை றோட்டோடு சங்கமிக்கும் இடம். அங்கே ஒருமாமரம்... அந்தமரம் தன் கிளைகளை விரிந்து நிழல்பரப்பி பூவும் பிஞ்சுமாய் நின்றது. வாண்டுகள் கல்லும் தடியுமாய் அந்த மரத்துடன் போர் புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் மரம் பதில் தாக்குதல் தொடுக்காமல் அவர்களை ஆசீர்வதிப்பது போல் பூவையும் பிஞ்சையும் உதிர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மாமரத்தின் அருகே போனான். அவனைக்கண்டதும் தங்களின் யுத்தத்தை நிறுத்திய வாண்டுகள் தங்களின் ஆயுதங்களை அதாவது கல்லையும், பொல்லையும் போட்டுவிட்டு ஓடினார்கள் அவனுக்கு ஆத்திரம் வந்தது. காயும் கனியுமாக பூத்துக் குலுங்க வேண்டிய பூவையும் பிஞ்சையும் அற்ப ஆசையால் உதிர்க்கிறார்களே! இவர்களை... ஒரு வாண்டுப் பயலை எட்டிப்பிடித்தான் அவன். அந்த வாண்டு அவனிடம் படிப்பவன்... ராக்கனின் மகன் கொஞ்ச நாட்களாகத்தான் திருந்தி படிக்க ஆரம்பித்தான். அவன மீண்டும் இப்போது ஆடத்தொடங்கிவிட்டான்...

"ஏன் மரத்த நாசமாக்கிறீங்க?"

வாண்டுப்பயலின் முதுகு தவித்துக் கொண்டிருந்தது. அவன் முதுகில்தான் அடிப்பான்...

"நாளைக்கி ஸ்கூலுக்கு வாங்க கவனிச்சிக்கிறேன்..." அவனுக்கு வாய்தவறியது. அவன்தான் நாளை மாஸ்டராக இருக்கமாட்டானே!

அவன் தன்னை சமாளித்துக்கொண்டு, "சரி... சரி...போயி படிங்க... மரத்தில காய் காய்க்கட்டும்... அவசரப்பட்டு பூவையும் பிஞ்சையும் நாசமாக்காதீங்க!..." என்று சொல்லிவிட்டு வாண்டுப்பயலை ஓடவிட்டான்.

துள்ளி ஓடிய வாண்டுப்பயல் சற்று தூரப்போய், "இனி எங்க சேர் படிப்பு? நீங்க ஸ்கூலைவிட்டு போறீங்களாம், அதனால் என்னைய ஆயா இனி படிக்கபோகாதேன்னு சொல்லிச்சி இனி ஆட்டுக்கு எலை குழை வெட்டனும்! வெறகு பொறுக்கனும்!..."

அவன் அப்படியே நின்றான் அவனுடைய கால்கள் நடுங்கின. நேற்றுவரை படித்தவர்கள் நாளைமுதல் படிக்க மாட்டார்களாம்... ஏன் அவன்தான் அதற்கு காரணம்... அவன்



இருக்கும்வரை படித்தவர்கள் அவன் போகப்போகிறான் என்பதைக் கேட்டு மாறுகிறார்கள். மீண்டும் இனி அந்த வாண்டுகள் லயத்தைச்சுற்றி விளையாடுவார்கள்...

அவன் மரத்தைப் பார்த்தான். மரத்தின் கீழே பூவும் பிஞ்சும் சிதறிக்கிடந்தன. காய்காய்ப்பதற்கு முன்னரே வாண்டுகள் அவசரப்பட்டு விட்டார்கள். இன்னும் கொஞ்சம் நாட்கள் விட்டிருந்தால் சிதறிக்கிடக்கின்ற பூவும் பிஞ்சும் காய்த்து தொங்குமே... ஆனால்... ஆனால்...

அவன் திடீரென்று முடிவெடுத்தான். கையிலிருந்த கடிதத்தை கிழித்துப்போட்டான். அதுபல துண்டுகளாக சிதறிப் பறந்தன.

"நான் ஸ்கூலைவிட்டு போகவில்ல... மாஸ்டரா இருப்பேன்... போயி ஆயாகிட்ட சொல்லுங்க"

வாண்டுகள் துள்ளிக் குதித்துக்கொண்டு லயங்களை நோக்கி ஓடினார்கள். அவன் திரும்பி நடந்தான்...

மாமரம் ஆடி அசைந்து கொண்டிருந்தது. அப்போதெல்லாம் மரத்தில் உள்ள பூவும்பிஞ்சும் ஆடின. ஓ...அவைகள் தான் இனிமேல் காயாக... கனியாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்கள் மனிதராவதில்லை

தோட்டத்து ஸ்டோரை நோக்கிப்போய்க் கொண்டிருக்கிற 'லொடலொட' லொறியையும், அந்த லொறியின் பின்பக்கம் - லொறியின் உள்ளே மேலே தொங்கிக் கொண்டிருந்த சங்கிலியை இறுகப்பிடித்துக் கொண்டு நிற்பவனையும் பார்த்துவிட்டு நாலுகால் பாய்ச்சலில் குதிரையைப்போல் பாய்ந்து பாய்ந்து 'லொள்...லொள்' என்றவாறு லொறியின் பின்னே ஓடுகிறதே அதுதான் இந்த லயத்துநாய் லொறியும் விரைவாகத்தான் போகிறது. நாயும் விட்டபாடில்லை. தொடர்ந்து அது லொறியின் பின்னே நாக்கை நீளமாக வெளியே நீட்டி அசிங்கமாகத் தொங்கவிட்டுக் கொண்டும், எச்சிலை வடித்துக் கொண்டும். களைக்க களைக்க மூச்சுமுட்ட ஓடியது... அப்படி எவ்வளவு தூரந்தான் ஓடும்? அது என்ன யந்திரமா? அந்த லொறிபோல் ஓடுவதற்கு? ஆனாலும் அது ஓடுகிறது. அப்படியே ஓடி ஓடி சற்று தூரத்தில் இருக்கிற மாரியம்மன் கோவிலருகே போனதும் ஏனோ திடீரென்று நிற்கிறது. ஏன்? அதற்குமேல் அதனால் ஓடமுடியாது போனாலும் இல்லை! அதன் எல்லையே அதுதான்... அந்த எல்லைகள் தான் அதன் ஆட்சி... நாயின் பார்வையிலிருந்து லொறியும் ஓடி மறைய, அதுவரை காத்துநின்ற நாயும் திரும்பி மெதுவாக லயத்தை நோக்கி நடக்கிறது. அது ஓடிய களைப்பில் நடக்கும்போது அழகாகத்தான் இருக்கிறது! ஏன்! அதன் நடை மட்டும்தான். அழகோ? அதுகூட லயத்து நாயாக இருந்தாலும், அழகாகத்தான் இருக்கிறது. அழகுதான் எல்லோருக் சொந்தமானதே... இந்த நாய்க்கும் அது சொந்தமானது... தானே...!

இந்தநாயின் உடம்பு நிறமென்றோ, வெள்ளை நிறமென்றோ சொல்ல முடியாத அளவுக்கு இரண்டுமே கலந்து சரிசமமாக இருந்தாலும் நாயின் முகத்தைப் பார்க்கின்றபோது, முகம் முழுவதும் கறுப்புநிறம் பரவிக் கிடப்பதால் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. அப்போது 'மூஞ்சி கறுப்பாக இருக்கிற நாய் பொல்லாத நாய்' என்று யாரோ சொன்னது நினைவுக்குவரும் உண்மையிலே யாரோசொன்னது போலவே இந்த நாயும் லேசுப்பட்ட நாயில்லை பொல்லாதது!

அடேயப்பா! கொஞ்சம் நேரம் சும்மா இருக்கவேண்டுமே இது அங்கே ஓடும், இங்கே ஓடும். யாராவது புதிதாக அந்த லயத்திற்கு வந்துவிட்டால் சம்பளம் போடும் அன்று டவுனிலிருந்து கடை முதலாளிமார்கள் 'பாக்கி' வசூலிக்க வந்துவிட்டால் போதும், சத்தம் போடாமல் பூனையைப் போலிருக்கும். புதிதாக வந்தவர்கள் இது பேசாமதானே இருக்கு' என்று நினைத்து அதன் கிட்டே போனால் அவ்வளவுதான் 'லபக்' கென்று காலையோ, கையையோ பிடித்துக்கொள்ளும் அதன்பின் அதனைப் பிரித்தெடுக்க வளர்ப்பவர்தான் வந்தாக வேண்டும். ஆனால் இந்தநாய் லேசில் குரைக்காது. குரைக்காத நாய் கடிக்குமாம். ஊமையா இருப்பவன் ஊரைக் கெடுப்பான் என்று சொல்வார்கள், அதுபோல் இது ஊமையாக இருந்தது காலையோ கையையோ கடிக்கும் அவ்வளவுதான்...

மெதுவாக நடந்து வந்தநாய், நேரமாகிவிட்டது என்று நினைத்ததோ என்னவோ தெரியவில்லை. திடீரென்று வேகமாக ஓடிவந்து, அந்த லயத்திற்குப் போவதற்காக அந்த ரோட்டிலிருந்து லயம்வரைக்கும் இருக்கிற படிக்கட்டு வழியாக ஏறியது. கீழே மூன்றாவது படிக்கட்டில் நாய் வரும போது மேலே எட்டாவது படிக்கட்டில் நின்று கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்த வள்ளி நாயின் கறுப்பு முகத்தையும் பார்த்துவிட்டு நடுநடுங்கிப்போய், பக்கத்திலிருக்கும் மரத்தின் பின்னல் ஒளிந்து கொள்கிறுள். பத்துப்படிகளையும் தாண்டி மேலே வந்தநாய் வள்ளி மறைந்திருக்கும் மரத்தை வேண்டுமென்றே பார்த்துவிட்டு 'ஏன் ஓடுறீங்க! ஒங்களயெல்லாம் கடிக்கமாட் டேன். நீங்கள்ளாம் பழகிவைங்க தானே!' என்று சொல்வது போல் நினைக்கிறது நினைத்தால் போதுமா? நினைப்பதை வெளியே சொல்லவேண்டாமா! அதுதான் வள்ளியைக் கண் டதுமே சொல்லிவிட்டதே! சொல்லிவிட்டதா?... ஆமாம்... வால் ஆட்டினுல் என்ன அர்த்தம்! உங்களைத் தெரியும் என் பது தானே...

மேலே லயத்து வாசலுக்கு வந்தநாய் அந்த லயத்தின் கடைசியிலிருக்கும் காம்பராவை நோக்கி நடந்து போனது. நாய் போனதும் மரத்தின் பின் பக்கமிருந்த வள்ளி லேசாக எட்டிப் பார்த்துவிட்டு படிக்கட்டுகளில் வேகமாக இறங்கி ஓடினுள் நாயோ கடைசிக்காம்பராவின் வாசலில்போய் நின்று யாரையோ பார்த்துவிட்டு பேசாமல் படுத்துக்கொண் டது. ஓடிவந்த களைப்பு போலும்...!

நாய் வாசலில் படுத்திருந்ததை காம்பராவின் உள்ளே யிருந்து பார்த்த ராசையா ஐந்து வயதிருக்கும்... வெளியே ஓடிவந்து நாயின் வாலைப் பிடித்திழுத்தான். நாய் உறுமிக் கொண்டு திரும்பி யாரென்று பார்த்து ராசையாதான தன் வாலை இழுத்திருக்கிறுன் என்பது தெரிந்ததும் அது பேசா மல் மறுபடியும் படுத்துவிட்டது. எஜமானின் மகன் அல்லவா! வாலைப்பிடித்து இழுக்கிறுன்! அவனேடு கோவிக்கமுடியுமா?

"வீரா..." "வீரா..."

அந்தக் காம்பராவின் உள்ளே யிருந்து அந்தக்குரல் வரு வதைக் கேட்டநாய், விருட்'டென்று எழும்பி வேகமாக அந் தக் காம்பராவின் உள்ளே போய், தன்னை அழைப்பவரின் காலருகே நின்று தன்வாலை ஆட்டுகிறது. அது தன்வாலை



இப்படியும் அப்படியும் ஒரு விசிறியைப் போல் ஆட்டுகிற போது அது பார்ப்பதற்கே அழகாகத்தான் இருக்கிறது! அது சரி, வாலை ஏன் ஆட்டுகிறது? ஓ... அங்கே நிற்பவன் அதனுடைய எஜமான் அல்லவா! அவனைக் கண்டதும் தன் நன்றியைத் தெரிவிக்க வாலை ஆட்டாமல் இருக்குமா? அதனுல் தான் வாலை ஆட்டுகிறது! ஆனுல் அதனுடைய எஜமான் நீங்கள் நினைப்பது போல் 'கோட்டும் சூட்டும்' போடவில்லை. இந்த நாயைப் போலவே ஒரு சாதாரண தொழிலாளி தான், எஜமானுய் இருக்கிறுன் ஏன் இருக்கக் கூடாதா?

"வீரா..." "வீரா..."

வீரனின் எஜமான் தன்னுடைய கையை மூடியவாறு-மூடிய கைக்குள்ளே ஏதோ வைத்திருப்பது போல் பாவனை காட்டியவாறு - வீரனை அழைத்தான். வீரன் ஆசையுடன் அவனருகே ஓடியது. வீரன் அருகில் வந்ததும் கையை மேலும் கீழும் காட்டினுன் அவன். வீரன் மேலே எம்பி, எம்பி, அந்தக் கையைப் பிடிக்க முயன்றது. அப்படி வீரன் மேலே எம்பும்போது அவனுடைய கையில் என்ன இருக்குமோ என்ற நினைப்பு ஆசையாகப் பெருகி எச்சிலாக மாறி, அதன் நாக்கு வழியாக வடிகிறது... கடைசியில் 'பே' என்று அவன் கையை விரித்தபோது அந்தக் கையினுள்ளே ஒன்றும் இல்லாததால் அது ஏமாந்து போனது. பாவம் வீரன்... கையில் ஏதாவது இருக்குமென்று நினைத்தது போலும்...! ஏமாற்றத்தை வாங்கிக்கட்டிய நாய் எஜமானேடு கோவித்தது போல் வெளியே வந்து வாசலில் படுத்துக் கொள்கிறது... அதனுடைய எஜமானே இதைப் பார்த்து விட்டு சிரித்தான். இந்த நாயை வளர்க்கிற அந்த எஜமான் தான் முத்தையா... அவன்தான் இதற்கு வீரன் என்று பெயர் வைத்தான். அவன் அப்படி பெயர் வைத்தற்கும் ஒரு காரணமுமிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரன் சின்னக்குட்டியாக இருந்த போது மேட்டு லயத்துச் சின்னையா அதை முத்தையாவிடம் கொடுத்தபோது அவன் மறுக்க முடியாமல் வாங்கிக்கொண்டு வந்து பக்கத்து காம்பரா வீரனிடம் ''வீரா... வீரா... இந்தக்குட்டி நாய்வந்து பாரேன்!'' என்றான். அந்த வீரன் வந்து நாயைப்பார்க்கும் முன்னர் 'வீரா... வீரா' என்றதுமே, இந்தக் குட்டிநாய் துள்ளிக்கொண்டு முத்தையாவிடம் ஓடிவந்து வாலை ஆட்டியது. அவனும் வீரன் என்றுபெயர் வைத்துவிட்டான். வீரனை வாங்கிய முத்தையா நாய்வாங்கும் விஷயத்தில் கெட்டிக்காரனென்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் இவன் மற்றவர்களைப்போல் பெட்டைநாயை வாங்கிவரவில்லை. வாங்கும் போதே 'என்ன சாதி' என்று பார்த்துத்தான் வாங்கினான். இல்லாவிட்டால் பெட்டைநாயை அவன் தலையில் கட்டியிருப்பார்கள். ஒரு பெட்டைநாய் வளர்ப்பதைவிட பத்து ஆண் நாய்கள் வளர்க்கலாம்.

படுத்துக்கிடந்த வீரன் லேசாகத் தலையைத் தூக்கி, வானத்தை அண்ணாந்து பார்த்து திடீரென்று எழுந்து நின்று சோம்பல் முறித்துவிட்டு வெளியேவந்து படிகளிலிறங்கி 'கரத்த'ரோட்டு வழியாக ஓடியது. அந்த ரோட்டில் என்ன காரா, பஸ்ஸா வருகிறது பயந்து நடக்க? அந்த வீதியே சொந்தம்போல் நட்டநடு வீதியில் ஓடுகிறது, அப்படியே ஓடிஓடி ஒருபெரிய பங்களாவின் பின்பக்கம் போய்நின்றது. அது அந்த தோட்டத்துரையின் பங்களா... வீரனின் கண்களில் எதையோ எதிர்பார்க்கும் ஆர்வம் நிறைந்திருந்தது. அதனுடைய முழு நினைவும் அந்த பங்களாவின் வாசலருகே தேங்கிநின்றது. அதன் வாலோ விசிறியைப்போல் அசைந்தது. ஒரு பத்துப் பதினைந்துதடவை வாலை இப்படியும் அப்படியும் அசைத்திருக்கும்... பங்களா வேலைக்காரன் துரையின் 'லஞ்ச்' முடிந்ததை அறிவிப்பதுபோல் மிச்சமீதியை கீழே ஓரிடத்தில் கொட்டிவிட்டு வீரனையே பார்த்தான்... கரெக்டா சொல்லி வைச்சமாதிரியே தொரை சாப்பிடுற டைம் பார்த்து வருதே... கெட்டிக்கார நாய்தான்!





பங்களா வேலைக்காரன் போனபின்னர் அவன் கொட்டிவிட்டுப்போன மிச்ச மீதியில் காலால் கிண்டி கிடைத்த எலும்புகளைக் கடிக்கிறது, இன்று வீரனுக்கு நல்ல அதிர்ஷ்டமதான்! நேற்றிலும் பார்க்க எலும்புத்துண்டுகள் கூடுதலாக இருக்கின்றனவே... ஆவலோடு அந்த எலும்புகளை 'கறுக்... புறுக்' கென்று கடித்துத்தின்று தீர்த்தது எல்லா எலும்புத்துண்டுகளையும் விழுங்கிய பின்னர் ரன், பங்களாவின் முன்பக்கம் வந்து, அங்கே வாசலருகே சல்லடைக்கம்பி போட்ட கூட்டையே ஏக்கத்துடன் பார்த்தது... அந்தப் பார்வை அதன் உடலில் கிளம்பியிருக்கிற பசியின் உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டுவதைப் போலிருந்தது. வீரனுக்கு சரியான பசிதான்! பசியா? இப்போதுதானே எலும்புத்துண்டுகளை விழுங்கித் தள்ளியது. அதற்குள்ளாவா பசிக்கிறது அதற்கு. ஆமாம்...! ஆனால் இந்தப்பசி எலும்புத்துண்டுகளால் தீர்க்க முடியாதபசி! எல்லா உயிரினங்களுக்கும் வரக்கூடிய பசிதான் இப்போது வீரனுக்கும் வந்திருக்கிறது...

வீரன் தன்னைப்பார்க்க வரமாட்டானா என்று துடித்துக்கொண்டிருந்த பங்களா அல்சேஷன்நாய் வீரன் தன்னைப் பார்த்ததும் சந்தோசத்தில் அதே நேரத்தில் வெளியேபோக முடியவில்லையே என்ற உணர்வில் அந்தக் கூட்டினுள்ளே துள்ளியது. தன்னை மறந்து வீரனுடன் காதல் பேச்சுபேசியது. அது மனிதனுக்குப் புரியவே புரியாது ஆனால் புரியவேண்டிய வீரனுக்குப் புரிந்தது. புரிந்தும் அதனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அதை ஏக்கத்துடன் பார்த்தது...

''என்னதான் நீ மேல்நாட்டு அல்சேஷனா இருந்தாலும் எந்த நேரமும் அடைபட்டு சிறைக்கைதி போல்தானே இருக்கிறே... என்னை மாதிரி சுதந்திரமா ஒனக்கு நெனைச்ச இடத்துக்குப் போக முடியுதா? பாவம் நீ...! ஒன்ன நெனைச்சா எனக்கு பாவமா இருக்கு...!''

இப்படி வீரன் நினைத்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களா நாய் ஊளையிட்டது. வீரனும் பதிலுக்குப் பேசியது அப்போது வெளியே வந்த பங்களா வேலைக்காரன் வீரன் இன்னும் போகாமல் அங்கேயே நிற்பதைப்பார்த்து விட்டு 'கல்'லொன்றை எடுத்து வீரனின் மீது வீசினன். ஆனல் வீரஞ கல்லடிபடும்? வேலைக்காரன் கல்லையெடுக்கும்போதே எங்கோ ஓடிவிட்டது. கல் 'பொத்'தென்று சும்மாதான் விழுந்தது. வேலைக்காரனுக்கு வீரனை விரட்டி விரட்டி 'சி'என்று ஆகிவிட்டது. எத்தனை நாளைக்குத்தான் எவ்வளவு நேரம் தான் 'கல்'வீசி வீரனை விரட்டுவான். வீரனும் விடுவதாய் இல்லை. அடிக்கடி காலையில் ஒருதரம், பகலில் ஒருதரம், மாலையில் ஒருதரம், என்று பங்களாவின் பின்பக்கம் வந்து கொண்டே இருந்தது.

ஓ... இப்போதெல்லாம் வீரன் ஏனே முன்னரைவிட அடிக்கடி பங்களாவின் பின்பக்கம் வந்து கொண்டிருக்கிறது...

வீரன் வருவது பங்களா நாய்க்கு சந்தோசந்தான். வீரனை ஆணென்று தெரிந்துகொண்ட பங்களாவின் பெண் நாய்க்கு சந்தோசம் இருககாதா என்ன! வீரனைப் பார்க்கும் போதெல்லாம் அதுகூட்டில் துள்ளு துள்ளென்று துள்ளியது.

பங்களா வேலைக்காரன் இந்தக் கூத்தையெல்லாம் பார்த்துவிட்டு வேறுவழியின்றி துரையிடம் சொல்லிவிட்டான். துரைக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது தோட்டத்து தலைவரைக் கூட்டி வரச்சொல்லி வீரன் வரும்வரை இருக்க வைத்து வீரன் வந்ததும் அதை அவனுக்குக் காட்டி 'அது யாருடைய நாய்? என்று கேட்டார். தலைவரும் கங்காணி மார்களை கண்டுபேசி அடையாளம் சொல்லி அது இன்னர் நாயென்று கண்டுபிடித்து துரையிடம் வந்து 'அது தொங்க லயத்து முத்தையாவுட்டு நாய்ங்க தொர...' என்று சொன்னர். துரையும் முத்தையாவை உடனே வரச்சொன்னர். முத்தையாவும் துரை கூப்பிடுகிருர் என்றதும் 'என்னவோ ஏதோவென்று' மனதுக்குள் ஓட கால்கள் நடுநடுங்க துரையின் பங்களாவிற்கு வந்தான். துரை சீறினர்...' ''முத்தையா!



ஒன்ட நாய் நம்ம பங்களாவிற்கு அடிக்கடி வருது... அதுசரியில்ல லயத்து நாயெல்லாம் பங்களாவுக்கு வரக்கூடாது... மரியாதையா சொல்றேன்...சொறிபுடிச்ச உன்னுடையலயத்து நாயை கட்டிப்போடு... இனிமே தப்பித்தவறி இந்தபக்கம் தலைகாட்டிச்சின்ன அப்பறம் சுட்டுப் போடுவேன். சரியா! லயத்து நாய்களுக்கெல்லாம் பங்களாவுல என்னவேல! நாளைக்கி வரட்டும் சுட்டுப்போடுரேன்... சுட்டு...''

துரையின் ஒவ்வொரு வார்த்தைக்கும் முத்தையா வளைந்து நெளிந்து, ''சரிங்கதொர...'' என்று பஜனை பாடினன் பின்னர் வீரனை இனிமேல் பங்களா பக்கமே கால் வைக்காமல் செய்வதாக அதைதானே பொறுப்பெடுப்பதாக - துரைக்கு உறுதி கொடுத்துவிட்டு மெல்ல பங்களாவிலிருந்து அவன் நழுவினன்... பங்களாவிலிருந்து வெளியே வந்ததே போதுமென்ருகிவிட்டது அவனுக்கு. நாயை சுடுகிறேன் என்று சத்திய அந்ததுரை கோபத்தில் அவனையே நாயைப்போல் சுட்டுவிடுவார், பொல்லாத துரை... லயத்தில் உள்ளவர்கள் அவனுக்கு கீழே வேலை செய்பவர்கள் யாரும் அவனைத்தேடி பங்களாவுக்கு வரக்கூடாதாம்... லயமே எரிந்தால்கூட பங்களாப் பக்கம் கால்வைக்கக் கூடாதாம்... அப்படி ஒரு சட்டம் போட்டிருந்தார், அதை அமுல் படுத்தவே அந்த அல்சேஷன் நாயை கூட்டோடு பங்களாவின் முன்பக்கம் வைத்திருக்கிருர்.

லயத்திற்கு திரும்பிய முத்தையா, அப்போதே வீரனைக் கட்டிப்போட்டான். மறுநாளே டவுனுக்குப்போய் இரும்புக் கடையில் 'நாய்ச் சங்கிலி' வாங்கிக்கொண்டு வந்து கட்டிப் போட்டான். அப்போது வீரன் 'ஒருநாளுமில்லாமல் எஜமான் ஏன் சங்கிலியில் கட்டிப்போடுகிருன்?' என்று கவலைப் பட்டது. அவனுக்கும் வீரனைக் கட்டிப்போடுவதில் விருப்பமில்லைதான். ஆனல் கட்டிவைக்காமல் முடியாதே...! கட்டாமல் இருந்தால் அதுவழக்கம்போல் பங்களாவிற்குப் போகும் போனல், பங்களாவில் இருப்பது மேல்நாட்டு அல்சேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்...! இது லயத்துநாய் ஆண்...! இரண்டும் சந்தித்தால் என்ன ஆகுமோ? அதனுல்தானே துரை 'வீரனைக் கட்டிப் போடு – கட்டிப்போடு' என்று கத்துகிருர்...

முத்தையா வீரனைக் கட்டிப்போட்டுக் கொண்டே இருந் தான். எத்தனை நாளைக்குத்தான் கட்டிப்போடுவது? ஆனு லும் வீரனை துரையை மனதில் நினைத்துக்கொண்டே 'கட் டிப்போட்டான். நாட்கள் ஓடின. ஒருகிழமை இரண்டு கிழமை மூன்றுகிழமை ஆகியது இனியா வீரன் போகப்போகி றது என்ற நினைப்பில் ஒருநாள் அவிழ்த்து விட்டான் முத் தையா. ஆனுல் வீரனு பங்களாவிற்கு போகாமல் இருக்கும். முத்தையாவின் தலைமறைந்ததும் பங்களாவிற்கு ஓடியது... அதற்கு பலநாட்கள் அல்சேஷனைச் சந்திக்காததில் கிளம்பிய ஆர்வம் போலும்... வேகமாக ஓடியது.

அங்கே பங்களாவில் ஒருமரத்தில் அல்சேஷசன் நாய் அப்போதுதான் சந்தன சோபபில் குளிப்பாட்டப்பட்டு வெயி லில் காய கட்டப்பட்டிருந்தது பிறகு கேட்சரா வேண்டும்... வீரனின் அதிஷ்டத்தை... யாருமே இல்லை... வீரனை பார்த்து அல்சேஷனும் துள்ளியது வீரனும் துள்ளியது... அதன்பின் இரண்டும் புழுதியில் கட்டிப் புரண்டன... அப்படி எவ்வளவு நேரம்தான் கட்டிப் புரள்வது?... அதற்கும் ஒரு எல்லையுண்டு தானே! அந்த எல்லைக்கு பின்னர் வீரன் அல்சேஷன் மீது தாவியது... சிலநிமிடங்கள் தாவின. இரண்டும் இறங்கி, பிணைந்து, நினைவற்று மயங்கி நின்றன, பங்களா அல்சேசன் இப்போது கிழக்குத்திசையைப் பார்த்தது வீரன் மேற்குத் திசையைப் பார்த்தது. இரண்டும் எத்திசையைப் பார்த்தா லும் இணைந்து விட்டனவே! இணைந்தபின் கிழக்காவது. மேற்காவது,

அல்சேசனும் வீரனும் கிழக்கும் மேற்குமாய் இணைந்து கொண்டிருந்தபோது பங்களாவின் உள்ளேயிருந்து ஒரு பார்வை வெளியேவிழுந்தது. பார்த்தது வேலைக்காரன் அவன்



உடனே பதறிக்கொண்டு துரையிடம் போய் சொன்னுன். துரை துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு வேகமாக வந்தார். அவர் பின்னுல் வேலைக்காரனும் வந்தான். இருவரும் வெளியே வந்தபோதே அல்சேஷனும் வீரனும் பிரிந்துவிட்டன. துரை க்கு தாங்கமுடியாத கோபம்... கையோடு இருந்த துப்பாக்கி யால் வீரனை சுட்டுப் பொசுக்க குறிபார்த்தார், சுட்டேவிட் டார்... சூடு 'டுமீல்' என்ற சத்தத்துடன் அந்த இடத்தையே நடுங்க வைத்தது.

துப்பாக்கியிலிருந்து விடுபட்ட குண்டுகள் வீரனைத் தேடிப் பாய்ந்தன ஆனுல் வீரன் அதற்கு அகப்படவேயில்லை. துரைக்கு தாங்கமுடியாத ஆத்திரம்... வேலைக்காரனைப் பார்த் துக் கத்தினுர். ஏன் பார்த்துகிட்டிருக்க அந்த நாயை அடிச்சி கொல்லு!''

வேலைக்காரன் அங்கே கிடந்த ஏழெட்டு அரைச்செங்கல் லைத் தேடிப்பிடித்து சரமாரியாக அடுத்தடுத்து வீரனைநோக்கி வீசிக்கொண்டே துரத்தினுன். இந்தத்தடவை வீரனுல் தப்ப முடியவில்லை. ஒரேஒரு செங்கல் வீரனின் முன்பக்கக் காலைத் தாக்கிவிட்டது. கல்லடிபட்டதும் வீரன் 'லொள்... லொள்' என்று கத்தியவாறு நொண்டியடித்து நொண்டியடித்து ஓடி யது...

பங்களா வேலைக்காரன் திரும்பி வந்தான். துரை துப் பாக்கி ஏந்திய கரத்தோடு ராணுவவீரனைப்போல் சிவந்த கண் களுடன் நின்றுகொண்டிருந்தார். அவர் நின்றநிலை சரியாக இல்லை. அவர் உள்ளத்தில் எரிமலை வெடித்துக்கொண்டிருந் தது. எது நடக்கக்கூடாது என்று நினைத்தாரோ அது நடந்து விட்டதே...! அல்சேசனும் வீரனும் சேர்ந்துவிட்டது...லயத்து நாய் ஒரு பங்களா அல்சேசன் நாயோடு...

அந்தநேரம் பார்த்துதான் அல்சேசன் வாலை ஆட்டிக் கொண்டு அவரருகே வந்தது. இந்தநேரம் பார்த்தா அது வரவேண்டும்? தன் காலருகே வந்ததும் துரைதன் காலால் அதுவும் பூட்ஸ் காலால், ஓங்கி ஒருஎத்து எத்தினுர். அல்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன் தூக்கி வீசப்பட்டதைப்போல் கீழே விழுந்தது. கீழே விழுந்ததும் அல்சேசன் 'வாள்... வாள்' என்று கத்தியது. அதன் கதறல் கூட அவருக்கு அசிங்கமாக இருந்தது... மற்ற நாட்களில் தன் காலருகேவரும் அதனைத்தூக்கி அதன்முகத்தில் அன்புடன் முத்தமிட்டு கொஞ்சும் அந்ததுரை இன்று...

அல்சேசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. துரை தன்னைக் காலால் ஏன் உதைத்தார் என்பதுகூட புரியவில்லை. துரை போன்ற மனிதர்களைப் பிரிப்பதோடு நிற்காமல் நாய்களைக் கூட லயத்து நாயென்றும் - லண்டன் நாயென்றும். பிரித்துப் பார்ப்பதன அர்த்தத்தை ஐந்தறிவு நாயால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அதுதான் மனிதனைவிட ஒருஅறிவு குறைந்ததாமே!

அல்சேசன் மறுபடியும் துரையின் கால்களை நோக்கி மெதுவாக அசைந்து அசைந்து போனது. அதன்வால் எப்போதும் போல் அன்பைக் காட்டியது. துரையோ மறுபடியும் காலால் ஒரு உதைவிடத் தயாராக இருந்தார். அவருடைய கால்கள் துடித்துக்கொண்டிருந்தன... ஆனால் அல்சேசன் அவரருகே வந்து கொண்டே இருந்தது... அதற்கு துரையின் உள்ளம் புரியவே இல்லை. துரையிடம் போனால் உதை படுவோம் என்பதும் அதற்குத் தெரியாது. அதற்கு இது மட்டுமல்ல, கிழக்கு—மேற்கு, மேடு—பள்ளம், என்றபேதம் கூட என்னவென்று தெரியாது... அதனால்தான் அதனைநாய் என்று சொல்கிறோம் போலும்...! நாய்கள் நாய்கள்தான் மனிதர்கள் மனிதர்கள்தான்! ஆனால் அந்தநாய்கள் ஒரு போதும் இந்த மனிதராவதே இல்லை!...

□ □ □

# லயத்துப்பயல்

அம்மா அப்படிச் சொல்வாள் என்று அவன் கனவிலும் நினைத்துப் பார்க்கவே இல்லை ஒருநாளும் இல்லாமல் இன்று திடீரென்று அவள் வாய்திறந்தபோது, அவன்தன் வாயைத் திறக்கமுடியாமல் போய்விட்டது. இதுவரை யார் தனக்கு பக்கபலமாக இருந்தார்களோ அவர்களே அம்மாதான். அவனுக்கு எதிரான கட்சியில் சேர்ந்துவிட்டார்கள். ஆனால் கட்சி மாறவில்லை. அவனுடைய கட்சியை ஆதரித்து நன்மையே கிடைக்காததால் தான். அவனுக்கு இல்லை அவன் சார்ந்திருக்கிற கட்சிக்கு எதிராகி விட்டாள்.

தேய்ந்து ஓய்ந்து போன செருப்பை மாட்டிக்கொண்டு வெளியே போகப் போனபோதுதான் அம்மா சொன்னாள். சொன்னாளா? இல்லை... இல்லை... கொட்டினாள்... ''ஒப்பீசில தொரவேல பார்க்கிறமாதிரி தான் கரெக்டா டைமுக்கு கௌம்பியாச்சி... ஆனா வேலயும் இல்ல... எத்தனை நாளைக்கி தான் இந்த எடுபிடி வேலை? தோட்டமே சிரிக்கிது... டவுனுக்கு போனா வேலயா கெடைக்காது! என்னைக்கிதான் நல்ல புத்தி வரப்போவுதோ?''

அவன் ஒருவினாடி அப்படியே அசந்துபோய் நின்றான். நின்றவன் நெஞ்சில் கோடிக்கணக்காய் எண்ணங்கள் மின்னின... அம்மாவா... அம்மாவா? ஆமாம்... அம்மாதான் அன்று தன் தங்கைக்கு எதிராக அடித்துப்பேசிய அம்மா தான்... ஏன் அவள் மாறிவிட்டாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் எதையும் எண்ணிப்பார்க்க முடியவில்லை. அத்தகைய அமைதியான நெஞ்சம் அவனிடம் அப்போது இல்லை. நெஞ்சில் ஒரே போராட்டம்... வெட்டு குத்து... ஆனால் அவனோ குனிந்த தலையுடன் கொஞ்சம் வேகமாக லயத்தை விட்டு வெளியேவந்து படிக்கட்டுகளில் இறங்கினான். மனம் எங்கோ இருந்தது. கால்கள் மட்டும் படிக்கட்டுகளில் தினமும் தரிசித்துப் பழகிப்போனவையல்லவா? தன் பாட்டில் இறங்கின.

எதிரில் மூச்சு இரைக்க இரைக்க வந்த காமன் கங்காணியைக் கூடப்பார்க்காமல் நடந்தான். நல்லநேரம். அது ஒரு பிரச்சனையாகக் கருக்கட்டவோ உருவெடுக்கவோ இல்லை. காரணம்... காமன் கங்காணிக்கு கண் அவ்வளவாகத்தெரியாது. தப்பித்தவறி கண்தெரிந்து, ''என்னா வேலு! கண்டும் காணாத மாதிரி போனியே!'' என்று எப்போதாவது கேட்டாலும், ''என்னா தாத்தா! வெளையாடுறீங்க? நீங்கசொல்ற நேரம் நான் அய்யாவுட்டு வங்களாவுல் இருந்தேன். நீங்க வேற யாரையாவது பார்த்திருப்பீங்க...'' என்றுபொய் சொல்லித் தப்பலாம். கிழவனும், ''அதுநெசம்தான்: எனக்கும் இப்பல்லாம் கண்சரியா தெரியுதில்ல... யாரையோ பார்த்தா யாரோ மாதிரி தெரியுது...'' என்றுதன் பலவீனத்தைக் கக்குவான்...

ரோட்டில் தன்பாட்டுக்கு நடந்தான் நேற்றெல்லாம் அவன் ரோட்டோரத்தில் வளர்ந்திருக்கும் புற்களின் மீதுகால்கள் படும் விதமாக நடந்து போனான். ஒவ்வொரு முறையும் கால்களைத் தூக்கி வைக்கும்போது, புற்களில் படிந்திருந்த பனித்துளிகளை உடைத்துக் கால்களை நனைந்துக்கொள்வது அவனுக்கு ஒரு வேடிக்கையான காலைநேர விளையாட்டு... ஆனால் இன்று? அவன் மனசு சரியில்லையே!...

விடியு முன்னரே எழும்பி லயத்துக்குப் பின்பக்கம் உள்ள சின்னத் தோட்டத்தில், தன் கைவரிசையைக் காட்டிவிட்டு பீலியடியில் தலையைப் பிடித்துக் குளித்துவிட்டு, பின்னர்



லயத்துக்கு வந்து விபூதி பூசி, ரொட்டி சாப்பிட்டு சட்டை போட்டுக்கொண்டு செருப்பை மாட்டியவாறு கண்டக்டர் ஐயாவின் பங்களாவிற்குக் கிளம்பியபோது தான் அம்மா அப்படிச் சொன்னாள். அத்தோடு அவனுள் கிளம்பிநின்ற உற்சாகம், சுறுசுறுப்பு எல்லாம் நூவறுந்த பட்டங்களாகின. இப்போது அவனா போகிறான்...பழக்க தோஷம்தான்...!

ரோட்டில் ஒரு திருப்பம், திருப்பம் தாண்டினால் இனி மேடுதான்... அவன் அங்கேயே நின்றான், இப்படியே திரும்பிப் போனால் என்ன? திரும்பிப் போகலாம்தான்... ஆனால் ஐயா வீட்டிலிருந்து அவனைத்தேடி ஆள்வருமே... பம்பரமாய்ச் சுழன்ற யோசனை சுழன்று சுழன்று சாய்ந்துபோனது...

நேற்று பங்களாவிலிருந்து லயத்திற்கு திரும்பும்போது ஐயா அவன் காதுகளில் ''பாலாவுக்கும் பேர்த்டே பார்ட்டி வருது... பாலாவும் வாறான்... நெறைய வேல இருக்கு...வேலு நாளைக்கி நேரத்தோட வாவேன்!'' என்று போட்டுவைத்தார். போகாமல் முடியுமா! இவன் அங்கேபோய்தான் நிறைய்வேலை செய்யவேண்டி இருக்கிறது. பங்களாவின் பின்பக்கம் குவித்து வைத்திருந்த மரக்கட்டைகளை வெட்டிப் பிளந்து விறகாக்க வேண்டும்! பாதியில் நின்றுபோன ஜன்னல் பெயிண்ட் வேலையைத் தொடரவேண்டும்! பூஞ்செடிகளுக்கும் காய்கறி செடிகளுக்கும் தண்ணீர் ஊத்துகிற தின வேலை... பங்களா உள்ளே சின்னச்சின்ன வேலை... ஐயாவிற்கும் ஐயாவின் சம்சாரத்திற்கும் அவன் இல்லாமல் வேலை ஓடாது. வார்த்தைக்கு வார்த்தை, வேலைக்கு வேலை அவன் பெயரே அடிபடும். அவன்தான் அங்கே எல்லாம்... அவர்களுக்கு யோசனை சொல்லும் மந்திரியாய் - பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியனாய் - பங்களாவைக் காக்கும் பகல்நேரக் காவல்காரனாய் - வேலைக்காரனாய் ஆகிவிட்டான்! ஆனால் அவன் வேலைக்காரனாய் இல்லை. வேலைக்காரன் என்றால் சம்பளம் இருக்கவேண்டுமே! அவனுக்கு ஏது சம்பளம்? சம்பளத்திற்குப் பதிலாக அவ்வப்போது சாப்பாடு, டீ, எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் கிடைக்கும்... தீபாவளி பொங்கல் நாட்களில் வேட்டி இனுமாகக் கிடைக்கும்...

அம்மா சொன்ன வார்த்தைகளை ஒருதடவை எண்ணிப் பார்த்தான். அவள் சொன்னவை அத்தனையும் உண்மை தான். சம்பளம் இல்லாமல் ஐயாவின் பங்களாவில் முடங்கிக் கிடக்கிறுனே! இது நியாயமா? நியாயம் இல்லையென்று முதலில் அவன் தங்கையும் இப்போது அம்மாவும் அவனுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கிவிட்டார்கள். ஆனல் அவன் இன்னமும் இன்றும் பங்களாவிற்குப் போகிறுன். ஏன்? அதற்கு காரணம உண்டு! ஐயாவும் ஐயாமகனும் கொழும்பில் ஒரு கடையில் நல்ல வேலைப்பிடித்துத் தருவதாக சொன்னுர்கள். அதை நம்பியே அந்த வேலைவரும் வரைக்கும் ஐயாவின் பங்களாவில் வேலை செய்கிறுன். அவர்கள சொல்லி பல மாதங்களாகி விட்டன. இன்னமும் அதைப்பற்றி ஒரு சத்தமே இல்லை. ஆனல் அவன் அவர்களை நம்புகிறுன். குறிப்பாக ஐயாவின் மகனை நம்புகிறுன். ஏன்? ஓ... அவனும் ஐயாவின் மகனும் அரிச்சுவடி படித்த காலத்திலிருந்து இன்று வரை நண்பர்கள்...! இது என்ன புதுக்கதை? ஒரு தோட்டத்தில் கண்டக்டர் ஐயாவின் மகனும் அதே தோட்டத்தின் லயத்திலுள்ள ஒரு தொழிலாளியின் மகனும் நண்பர்களா! இருக்காதே! அப்படி நடக்காதே! ஆனல் இங்கே இந்ததோட்டத்தில் இருந்தது அப்படி நடந்ததே...

அப்போதெல்லாம் அவனை அவனுடைய அப்பா ஒரு தொழிலாளியின் பிள்ளை போலவா வளர்த்து படிக்கவைத்தார்? இல்லை... பணத்தைப் பணமாக பார்க்காமல் மகனை நாலு எழுத்து எழுதப்படிக்கத் தெரிந்தவனுகை ஆக்க உயிரைக் கொடுத்துக் கஷ்டப்பட்டார். அவன் ஸ்கூல் போன போது அவனுடைய தலையிலிருந்து கால்வரைக்கும் என்ன என்ன தேவையோ அத்தனையையும் வாங்கிக் கொடுத்தான் தான் கிழிந்த சாரத்தை ஒட்டுப்போட்டுக் கட்டிக்கொண்டு திரிந்தாலும் தன் மகனை தினமும் 'டிப்டொப்பா'க ஸ்கூலுக்கு



அனுப்பினுன். தினமும் மகன் வெள்ளையும் சுள்ளையுமாகப் போக நாலைந்து 'செட்' உடுப்பு. காலுக்கு ஒருநாள்விட்டு ஒருநாள்போட கறுப்பு வெள்ளை சப்பாத்துக்கள்... இரண்டுக்கும் ஏற்ற மேஸ்கள் ஸ்கூல் மாஸ்டர் கொடுத்த லிஸ்டில் உள்ள அத்தனை புத்தகங்கள் 'பொருட்கள்... அவைகளைக்கொண்டு போக கவர்ச்சியான பேக் கை லேஞ்சி... டீச்செலவுக்கு சில்லறை, குடை, பஸ்ஸிற்கு போக சீசன்டிக்கெட் அத்தனையையும் வாங்கிக்கொடுத்தான்...

தோட்டத்திலேயே அவன் ஒருத்தன்தான் காலுக்கு சப்பாத்தும் மேசும்போட்டு டவுன் ஸ்கூலுக்கு போய் வந்தவன்... அவன் ஸ்கூலுக்கு போவதை யாரும் பார்த்தால் ஒருதோட்டத்து துரையின் மகன் என்றே, கண்டக்டரய்யாவின் மகன் என்றே தான் சொல்வார்கள். அத்தகைய கவர்ச்சி அழகு அவனிடம் இருந்தது. இந்தக் கவர்ச்சியும் அழகும்தான் கண்டக்டர் ஐயாவின் மகனுக்கும் அவனுக்கும் ஆரம்பத்தில் பேசிக்கொள்ளத் தூண்டியது, இருவரும் ஒரே வகுப்பில் இருந்ததால் பேச்சு நீண்டு, நீண்டு நட்பாக மாறியது. ஆனல் அவர்கள் நட்பு ஆரம்பத்தில் ஸ்கூல் வட்டத்திற்குள் மட்டுமே இருந்தது. தோட்டத்திற்கு வந்தால் இருவருமே பேசமாட்டார்கள். அவனுக்குப்பேச ஆசைதான்... ஆனல் ஐயாவின் மகன்தான் ''நாம ரெண்டுபேரும் பேசுறது. சிரிக்கிறது எல்லாம் ஸ்கூலோட இருக்கட்டும். தோட்டத்துக்குள்ள வேணும். நானும் நீயும் பேசுறதை பழகிறதைபார்த்தா அப்பா என்னை அடிச்சே கொல்வாரு! அதனல் ஸ்கூல் மட்டும் பேசிக்குவோம்!'' என்று சொல்லியிருந்தான். அவனும் எண்ணிப் பார்த்து, அதுநியாயம் தான் என்று புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டான். அதன் பின்னர் அவர்கள் இருவரும் தங்களுக்குள் ஒரு வரம்பை வகுத்துக்கொண்டு அதற்குள்ளேயே நின்று பழகிப்பேசி வந்தார்கள்...

அவன் இப்போது பங்களாவிற்குப் போகும் பாதையருகே வந்துவிட்டான். அந்தப்பாதையருகே ஒருபெரியமரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவெல்லாம் பனிமழையில் குளித்த மரம், தன்மேனியில் இருக்கின்ற ஈரத்தைச் சொட்டு சொட்டாசக் கொட்டிக் கொண்டிருந்தது கீழே விழுகிற பனித்துளிகள் சூரியன் ஒளிச் சத்தில் மின்னியவாறு பங்களாவிற்கு செல்லும் படிக்கட்டு களில் விழுந்து சிதறுவது எத்தனை அழகான காட்சி? அதை தினமும் சிலவிநாடி நின்று ரசிப்பவன் இவறு அவன் நெஞ்சுக்குள்ளே... படிக்குபபோது அவன் தினமும் இந்தமரத்தின கீழேதான் ஐயாவின் மகனுக்காக - பாலாவுக்காக காத்திருப்பான். அவனை கீழேயிருந்து பார்த்தால் பங்களா வாசல்தெரியும். பங்களாவில் இருந்து பார்த்தால் இந்தஇடம்தெரியாது. இது இருவருக்கும் வசதியாகப் போய்விட்டது. எதற்கு? இருவருக்கும இங்கே சந்தித்து ஒன்ருக ஸ்கூலுக்குப் போவதற்கும் கூட அவர்கள் வகுத்திருந்த வரயபுககு உள்ளேதான்... தினமும் அவன்தான் இங்கேவந்து நிற்பான. பிறகுலேசாக ஒரு'விசில்' சத்தம் கொடுப்பான். அதைக்கேட்டதும் பங்களாவிலிருந்து பாலா மூச்சு இரைக்க இரைக்க ஓடிவருவான். அவன் வந்ததும் இருவரும ஒன்ருக ஸ்கூலுககுப் போவார்கள் சிலநாட்களில் தோட்டத்து லொறி டவுனுக்குப்போக அந்த ரோட்டு வழியாக போகும். பாலா கையக்காட்டி, அந்த லொறியை நிறுத்தி அவனை ஏற்றிவிட்டு, தானும் ஏறிக் கொள்வான். இதெல்லாம் ஐயாவிற்குத தெரியாது. ஐயாவிற்கு தெரிந்தால் லொறி டிரைவருக்குப ஆபத்து, பாலாவிற்தம் ஆபத்து. அதிலும் பாலாவுக்குத்தான் முதலில், 'நீ லொறியில் போறது போதாதுன்னு கண்டவனுகள எல்லாம் ஏத்தச் சொன்னியாமே! ஒன்ன...' என்று கேட்டவாறே ஐயா நெருப்புக் கோபத்தில் அடி கொடுப்பார்...

அந்த மரத்திலிருந்து தலையில் விழுந்த பனித்துளிகளால் நினைவை அறுத்துக்கொண்டு அவன் அந்தப படிக்கட்டுகளில் மெல்லமெல்ல ஏறிறேன். அதில் இன்று அவனல் சுலபமாக ஏற முடியவில்லை. தலையில் பெரிய பாரத்தை சுமந்துபோய்க் கொண்டிருக்கிற ஒரு உணர்வு அவனுக்கு இருந்தது. ஆனல் அவன் தலையில் எதுவுமே இல்லை. அப்படியானல் எங்கே சுமை...? மனதில்தான் சுமை... அது அவனை அழுத்துகிறது.



பாதி படிக்கட்டுகளில் ஏறிய அவன் அப்படியே நின்றன்... மூச்சு இரைத்தது. கீழே பார்த்தான். அப்போது பழைய ஞாபகம் மனதைக் கவ்வியது... அந்தப்படிக்கட்டுக்கு மேலே போய் பங்களா உள்ளேபோகச் செய்தது எப்போது எது என்று யோசித்தான். அதுஅது... ஸ்கூலில் படிக்கும்போது... ஒருநாள் பாலா ஸ்கூலில் ஓடிப்பிடித்து விளையாடி விழுந்து காலை உடைத்துக்கொண்டான்... அவனை அவனும் ஆசிரியர்களும் சேர்ந்து கார்பிடித்து தூக்கிப்போட்டு டிஸ்பென்சரியில் மருந்து கட்டிய பின்னர் அப்படியே தோட்டத்திற்குப்போய் பங்களாவில் விட்டார்கள். அன்று அவன் அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு பங்களாவிற்குப் போனன். அன்றுதான் அவனுக்கு முதல் தரிசனம். கண்டக்டர் ஐயாவோடு முதல் சந்திப்பும் கூட....

ஐயா அவனைப் பார்த்தார். 'யாரிவன்? நம் மகனைப் போலவே உடுத்தியிருக்கிருனே?' என்ற எண்ணங்களைக்கோர்த்தார். அவனிடம் கேட்டார். அவன் 'இன்னரின் மகனென்றும்' சொன்னன். அவருக்கு அதிசயம்... லயத்திலுள்ள ஒரு தொழிலாளியின் மகனு இப்படி உடுத்தி ஸ்கூலுக்கு போகிருன? அவர் அதிசயம் அடங்குவதற்குள் பாலாவே அவனை அறிமுகப்படுத்தினன்.

ஐயா மௌனமாகவே இருந்தார்... முதலில் தன் மகனுக்கும் லயத்திலுள்ள ஒருத்தனின் மகனுக்கும் நட்புறவு இருப்பதா என்று குமுறினர் பிறகு தன்மகனே, அவன் தனக்கு துணையாக இருப்பதாக சொன்னதும், அதை சாட்சிப்படுத்துவதுபோல் சற்றுமுன்னர் காரில் நடக்க முடியாதவனை நடத்தி தாங்கிக்கொண்டு வந்ததும் அவரின் குமுறல்களை அடக்கிவிட்டன.

அன்று காரில் வந்திருந்த அத்தனை பேருக்கும் பிஸ்கட்டுடன் டீ கொடுத்தார்கள். அதுதான் அவனுக்கு அந்தபங்களாவில் கிடைத்த முதல் டீ... அதற்குப்பிறகு காலில் கட்டுடன் கட்டிலிலேயே கிடந்த பாலாவைப் பார்க்க வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் அவனுக்கு டீ கிடைத்தது... அதற்குப்பிறகு பாலாவிற்கு காயம் ஆறி ஸ்கூலுக்குப் போகத்தொடங்கிய போது அவன் அந்தப் படிக்கட்டுகளைத்தாண்டி பங்களாவிற்கே வந்து அவனையும் அழைத்துக்கொண்டு போக ஆரம்பித்தான். அதற்குபிறகு தொழிலாளியின் மகன் என்ற உணர்வுகள், வித்தியாசங்கள் மங்கிமறைய நன்ருக பழக ஆரம்பித்தார்கள்... அவனும் பங்களாவிற்கு அடிக்கடி வர ஆரம்பித்தான். இதையெல்லாம் ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பது போல் ஐயா ஒன்றுமே சொல்லவில்லை...

காலங்கள் உருண்டோடின...

அவன் பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அந்தக் காலத்தில் தான் அது நடந்துவிட்டது. அவனுடைய அப்பா ஸ்டோர் மெஷினில் வேலைசெய்யும்போது மெஷினில் அடிபட்டு செத்துப்போனர். அத்தோடு அவனுடைய லஷ்மி கடாட்சம் எல்லாம் ஒரேயடியாக அடிபட்டுப் போய்விட்டது. குடும்பச் சுமைகளைத் தூக்கவேண்டிய கட்டாயம் அவனுக்கும் வந்துவிட்டது. படித்தபடிப்பை அப்படியே இடையில் நிறுத்த வேண்டியதாகிவிட்டது.

ஐயாவின் மகன் பரீட்சை எழுதி பாஸ்செய்து மேலே படிக்க கொழும்புக்குப் போய்விட்டான். அவனே படிப்பில் மேலே போக முடியாமல் கீழேயே இருந்து விட்டான். அம்மா அவனைபேர்பதிந்து வேலைசெய்யச் சொன்ஞள். ஆஞல் அவனே மறுத்துவிட்டான். எங்காவது ஒருகடையில் வேலை செய்யத் தயாராஞன். தனக்கு தெரிந்த கடையில் ஒருவேலை தேடித் தரும்படி ஐயாவிடமும், ஐயாவின் மகனிடமும் சொல்லியிருந்தான். அவர்களும் 'சரி' யென்ருர்கள். கொழும்பிலிருந்து ஐயாவின் மகனும் அவனுக்கு வேலைதேடுவதாகக் கடிதம் போட்டிருந்தான். வேலை கிடைக்குமாம்...அந்தவேலை கிடைக்குமாம்... அந்தவேலை கிடைக்கும் வரையும்தான் ஐயாவின் பங்களாவில் வேலையாம்...

அதற்குப்பிறகு......!



பங்களா வாசலில் போய்நின்ருன் அவன். அங்கேவாசல் முற்றத்தில் சிறிய பூந்தோட்டம். விதவிதமான பூஞ்செடிகள்... அதில் பூத்துக்கிடக்கும் வகைவகையான வண்ண வண்ண மலர்கள்... யானை, மான், கோழி, பூனை, நாய் வேடம் பூண்ட பச்சைநிற செடிகள்... அத்தனையும் அவனுடைய கைவண்ணத்தில் பிறந்தவையாகும். அவனுடைய உழைப்பில் மலர்ந்தவையாகும். அவன் இதில் கைவைப்பதற்கு முன்னர் எப்படி இருந்தது. சடைசடையாய் புல் முளைத்த பூமியாக இருந்தது. இன்று அதில் லஷ்மிகரம் நடனம ஆடுகிறது...

வாசல்கதவு மூடியே கிடந்தது. காலிங் பெல்லை அழுத்தினன். கதவு திறக்கப்பட்டது. தொறந்தது ஐயா தான்...'வா வேலு! ஏன் லேட்?'

அவன் மௌனமாக இருந்தான். தன்முகத்தில் லேசாக மண்டிக்கிடந்த ஒரு இருட்டை மறைப்பதுபோல் புன்னகை பூத்தவாறு உள்ளே போஞன். அவன் பின்னே கதவைச் சாத்திவிட்டு ஐயா நடந்து வந்தார். அவன் குசினியைத் தாண்டி வெளியே போகப்போஞன்...

''வேலு! வந்தோன்ன வேலை தொடங்கப் போறியாக்கும்... மொதல்ல சாப்பிடு டீ குடி... அதுக்கு பிறகுவேலை செய்யலாம்...'' அவன் அப்படியே நின்ருன்... ஓ... இந்த கண்டக்டர் ஐயா எவ்வளவு அன்பாக இருக்கிருர்! ஒருலயத்திலுள்ள ஒருத்தனை சாப்பிடு, டீ குடி என்று சொல்கிருரே இவரைப்போய் இந்த பங்களாவில் வேலை செய்தவை தங்கச்சி முறை சொல்கிருளே... அவளோடு அம்மாவும் சேர்ந்து கொண்டு விட்டாளே! இந்த தோட்டத்தில் வேறு யாருக்குத்தான் அவனைப்போல் ஐயாவின் பங்களாவில் குசினிவரை போகவும் வரவும் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது!

சற்று நேரத்தில் அவனுக்கு டீ வந்தது. ஐயாவின் மனைவியே அதைக்கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அதை வாங்கிக் குடித்துவிட்டு குசினிக்கு வெளியே வந்தான். தன் உடம்பில் கிடந்த சட்டையைக் கழட்டி சுவர் ஆணியில் மாட்டினான். பிறகு கோடரியைக் கையிலெடுத்தான்... விறகைப் பிளக்க ஆரம்பித்தான். அவன் கையிலுள்ள கோடாலி பெரிய மரக்கட்டைகளை சிறுசிறு துண்டுகளாகப் பிளந்து தள்ளியது... திடீரென்று அவன் நெஞ்சில் கோடாலியாகப் பாய்ந்து இறங்கியது ஒரு சம்பவம்...

ஒருநாள்காம்பராவில் அவனுக்குப் தங்கச்சிக்கும் சண்டை அப்போது தங்கச்சி அவனிடம் கேட்டாள், "கொழும்பில கடையில வேலை வாங்கித்தாரேனு சொல்லி எத்தனை நாளாச்சினு எண்ணிப்பாத்தியா? பத்து மாசத்துக்கும் மேலாச்சி... இன்னுமா வேலை கெடைக்கல்ல. நெசமாவே கொழும்புக்கு ஒன்னய வேலைக்கு அனுப்புற நோக்கம் இருந்திருந்தா இவ்வளவுநாள் வுரைக்கும் வேலை கெடைக்காமலா போயிருக்கும் பங்களாவையும் கண்டக்டர் அய்யாவையும் மலைமாதிரி நம்பிகிட்டிருந்தா, சரிதான்... பங்களாவேலை செஞ்சே காலத்தை போக்க வேண்டியது தான்... அய்யாவும் உனக்கு வேலை வாங்கிதாரேன்னு சொல்லி சொல்லி வேலை வாங்கிக்கிறாரு. நீயும் செய்யிற... எனக்கு மத்த லயத்துப்பக்கம் தலைகாட்ட முடியல்ல... என்னு ஓங்க அண்ணன் படிச்சி கிழிச்சி கடைசியில அய்யாவுட்டு பங்களாவுலயே புழுக்கவேலை செய்யிறாரேன்னு சொல்லி சொல்லி கிண்டல் செய்யிறாங்க! அய்யா பங்களாவுல வேல செய்யிறதுக்குத்தான் தோட்டத்திலபேர் பதிஞ்சி வேலை செய்யலாமே! அது கௌரவம்தானே... எதுக்கு இந்த அசிங்க பொழப்பு... இப்படித்தான் அய்யாவுட்டு பங்களாவுல வேல செஞ்சுதானு வெள்ளிவுட்டு அண்ணன் டவுனுக்கு வேலைக்கு போனான்...?"

தங்கச்சி 'பட பட'வென்று கொட்டித்தள்ளினாள். அவனும் விடவில்லை. அய்யாமீதுள்ள நம்பிக்கையை வைத்து வாதாடினான். இருவரும் பெரிய சண்டை வார்த்தைகளில் தான் பிடித்துக் கொண்டார்கள். இடையே குறுக்கிட்டு



அம்மா சமாதானப்படுத்தி "இந்தா நீ ஒன் வேலய பாரேன்... அவன் எங்கேயாவது வேலை செஞ்சு எப்படியாவது போறான் நீயேன் பொட்டபுள்ள குதிக்கிற? என்று ஒருதீர்ப்பு சொன்னாள். அந்த சண்டை அத்துடன் நின்றது, அதற்குப் பின்னர் அவ்வப்போது சண்டை வரும். அப்போதெல்லாம் நீதிபதி அம்மாதான்... ஆனால் இப்போ?

பங்களாவில் வேலைமுடிந்து லயத்திற்கு அவன் போன போது உலகம் இருட்டுக்குப் பயந்து கறுப்புநிறப் போர்வையைப் போர்த்திக்கொண்டு விட்டது.

காம்பராவுக்குப் போனான், அவனோடு யாருமே பேசவில்லை. அம்மாவும் பேசவில்லை. அவன் வராந்தாவில் பாயை விரித்துப்போட்டுப் படுத்தான். வழக்கம்போல் இந்தநேரத்தில் அவனைச் சாப்பிடச் சொல்லுகிற அம்மாவும் மௌனியாக இருந்தாள், அவன் ஐயாவின் பங்களாவில் சாப்பிட்டிருந்தான். அதனால் இங்கே சாப்பாட்டை எதிர்பார்க்கவில்லை அவன்...

விடிந்ததும் வழக்கம்போல் பங்களாவிற்குப் போனான். இருட்டியதும் லயத்திற்கு வந்தான். இப்படியே சிலநாட்கள் ஓடிவிட்டன. ஐயாவின் மகனுடைய பேர்த்டே பார்ட்டிக்கு ஒரேஒரு நாள்தான் இருந்தது. பேர்த்டே பார்ட்டிக்கு முதல் நாள்... ஐயா டவுனுக்கு போய்விட்டார்... பேர்த்டே பார்ட்டிக்கு வரப்போகிற மகனையும் மகனுடைய பிரண்ட்ஸ்களையும் அழைத்து வர...

அவனுக்கு ஓயாதவேலை...பேர்த்டே பார்ட்டிக்காக இரவு பகலாக உழைத்தான். பங்களா ஹாலை வர்ண கடுதாசிகளாலும் பலூன்களாலும் அலங்கரித்தான்... தனக்கு பிறந்த நாள் விழா நடப்பதாக நினைத்து உழைத்தான். அதையெல்லாம் அவன் பெரிதுபடுத்தவே இல்லை. ஐயா மகன் பாலா தனக்கு வேலைதேடிக்கொண்டு வந்தால் போதும் என்றிருந்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுமாலை நாலுமணியைப்போல் பங்களாவிற்கு கார் வந்தது. காரிலிருந்து முதலில் ஐயா இறங்கினர். அப்புறம் பாலா... அதன் பின்னர் யார்யாரோ... வெறும் தேகத்தோடு நின்றவன் ஓடிப்போய் சேட்டை மாட்டிக்கொண்டு திரும்பவும் வந்துநின்ருன். அதற்குள்ளே அவர்கள் பங்களாவின் உள்ளே வந்தார்கள். அவன் பாலாவின் முகத்தையே பார்த்தான். ஒருசிரிப்பை உதிர்த்தான்... அவ்வளவுதான்... அவனுக்கு என்னவோ போலிருந்தது. ஆறு மாதத்துக்கு முன்னுல் வந்தபோது அவன் ஓடிவந்து இவனை விசாரித்தான். பேசினுன், இன்று? அவன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தான் ஏக்கத்துடன் ஐயா மகன் ஆளேமாறியிருந்தான். தலைமுடி சடைபோட்டு வளர்ந்திருந்தது. மீசை குவிந்திருந்தது. நடை உடை புதுத்தினுசாகியிருந்தது. அவனேடு வந்திருந்தவர்களும் அவனைப்போலவே விதவிதமாக இருந்தார்கள்... அவர்கள் தங்களுக்குள் ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டார்கள்... ஐயாவின் மகனும் பாலாதான் இங்கிலீஸில் வெளுத்து வாங்கினுன்.

அப்பாவும் இருந்திருந்தால் தானும் அவர்களைப்போல் இங்கிலீஸில் வெளுத்து வாங்கலாம் என்ற நினைவுகள் அவன் நெஞ்சை கலங்க வைத்தன. கலங்கிய கண்களுடன் அப்பறம் ஐயாவின் மகனேடு பேசிக்கொள்ளலாம் என்று நினைத்தவாறே அவ்விடத்தைவிட்டு அகன்ருன்.

அன்று இரவு லயத்திற்கு சந்தோஷத்தோடு திரும்பினுன் அவனுகவே அம்மாவிடம் ஐயாமகன் வந்திருப்பதை சொன்னுன்.

விடிந்ததும் துவைத்து காயவைத்த சேட்டையும் வேட்டியையும் மாட்டிக்கொண்டு பங்களாவிற்கு சந்தோஷத்தோடு போனுன்... பங்களாவில் ஐயாவின் மகன் அவனேடு வந்திருந்தவர்கள் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். அவன் பாலாவைப் பார்த்துவிட்டு உள்ளே போனுன். போகும்போது இன்று எப்படியாவது ஐயா மகனிடம் கேட்டுவிடவேண்டும் என்ற நினைவுடன் போனுன். பேர்த்டே பார்ட்டிக்கு முன்னர் கேட்கவேண்டும்... பேர்த்டே பார்ட்டி தொடங்கிஞல் பேசமுடியாது...



வெகுநேரத்திற்குப் பின்னர் அவன் வெளியே வந்தான். பங்களா வராந்தாவில் ஐயாவின் மகன் பாலா மட்டும் ஒரு நாற்காலியில் இருந்தான். மற்றவர்கள் அங்கும் இங்கும் இருந்தார்கள். இதுதான் சந்தர்ப்பம் என்று அவன் உட்கார்ந்திருக்கும் ஐயாவின் மகனைப்பார்த்துச் சிரித்துவிட்டு அவன் பெயரைச் சொல்லி அழைத்தான், ஐயாவின் மகனுக்கு முகம் லேசாக கறுத்தது. அவன் அதைக்கவனிக்கவில்லை...

ஐயா மகன் மௌனமாக இருந்தான். அவன் அவனருகே கிடந்த ஒருநாற்காலியில் அமர்ந்து கேட்டான்... ''கொழும்புல வேலை சரியா? பாலா!''

அப்போது பங்களாவின் உள்ளே இருந்து ஐயாவும் அவரோடு கூடவந்திருந்த பிரண்ட்ஸ் ஒருத்தனும் வந்தார்கள். தன் மகனுக்கு அருகே வேலு உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் ஒருவினாடி துடித்துப்போன ஐயா தன்னைக் கட்டுப்படுத்தி அடக்கிக் கொண்டு வேலுவை அங்கிருந்து கிளப்ப அழைத்தார்... வேலு கூப்பிட்ட குரலுக்கு செவிக்கொடுத்துப் போனுன்.

அப்போது ஐயாவின் மகனிடம் அவனேடு வந்த பிரண்ட்ஸ் ஒருத்தன் கேட்டான்... ''கூ... இஸ்... ஹி...''

''ஹி... ஹி... அவ எஸ்டேட் லயத்து பெலோ... ஹீ... இஸ் அவ சர்வன்ட் போய்''

அவன் காதுகளில் அந்த வார்த்தைகள் விழுந்தன. வார்த்தைகள் ஒவ்வொன்றும் இடிகளாய்... லயத்துப் பயலாம்! இவர்களுக்கு உழைத்து நின்ற அவன் வேலைக்காரனும்! அவன் நெஞ்சில் அம்மாவும் தங்கச்சியும் வந்துநின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வேகமாக பங்களாவின் உள்ளே நடந்து குசினி வழியாக வெளியேபோய் பங்களாவைப் பின் பக்கமாகசுற்றி முன்பக்கம் வந்து பிறகு படிக்கட்டுகளில் 'விறு விறு' வென்று இறங்கத் தொடங்கினான். தூரத்தில் அவனுடைய லயம் அவன் பார்வையில் விழுந்தது. இன்று ஏனோ அவன் பார்வையில் அந்தலயம் என்றுமில்லாதவாறு அழகாகத் தெரிந்தது...



மாத்தளை வடிவேலன்

- புத்தாண்டு புதிதல்ல

  — சிந்தாமணி - 1978

- வெட்டுமரங்கள்

  — சமர் - 1980

- கறிவேப்பிலைகள்

  — வீரகேசரி - 1978

# புத்தாண்டு புதிதல்ல...!

அந்தி மயங்கிவிட்டது.

கூன்விழுந்த மலைகளுக்கிடையே தேங்கிக்கிடந்த பனிப் புகாரையும் அணைத்துக்கொண்ட இருள் ஒரு திருடனைப் போல மெல்ல... மெல்ல... வந்து பதுங்குகின்றது.

பார்வை... பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கண்ணை மூச்சு காட்டி இருள் கரிய, திரைதிரையாய் வந்து படிந்து விடுகின்றது. எப்படி வந்தது? ம்... தெரியாது.

மலைப்பாதையில் நின்றுவிட்ட சரக்கு வண்டியாக ஆங் காங்கே நீண்டுகிடக்கும் லயன் காம்பிராக்களில் 'குப்பிலாம் புகள்' ஒவ்வொன்றுகக் கண்சிமிட்டுகின்றன.

பீலிக்கரையிலிருந்து ஈரச்சேலையுடன் வீடு திரும்பிய காமாட்சிப்பாட்டி மண்வெட்டியைத் திண்ணையில் எறிந்து விட்டு அடுக்களைக்கு விரைந்தாள்.

அவளுக்குப் பகீரென்றது. ம்... குளிர். தாங்கமுடியாத குளிர். முதுமையினுல் தளர்ந்துபோன உடல் தட... தட வென ஆடியது. அடுப்பு மூட்டப்படவில்லை. எப்படிக் குளிர் காய்வது? விளக்கும் ஏற்றப்படவில்லை. எங்கும் ஒரே கும் மிருட்டு. குகையினுள் சிக்கிக்கொண்ட உணர்வுதான் ஏற் பட்டது. கண்களைக் கசக்கியபடியே வெளியே வந்தாள்.

அவள் உடம்பு நடுங்கியது. உடுத்தியிருந்த ஈரச்சேலை வேறு தேகத்தை ஊதவைத்து விறைக்கச் செய்தது. விரல் கள் கொடுகி... கொடுகி வெட்டி வெட்டி இழுத்தன. பற் களை இழந்த முரசுகள் ஒன்றையொன்று அணைத்துக்கொள்ள வாய் வில்வடிவில் மேல்நோக்கி வளைய சுருங்கித்தொங்கும் கன்னத்தோல் சிலந்திவலைப் பின்னலெனப் படம் காட்டுகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய் அம்பி... டேய்... அம்பி'' இயன்றமட்டும் குரலெடுத்துக் கூப்பிட்டாள் கிழவி.

பதில் இல்லை.

'' அம்பி... அம்பியோ... ''

பதிலுக்கு அடுத்த காம்பிரா அலமேலு ''ஐயோ முட்டை விடுற கறுப்புப் பொட்டையைக் காணலியே, காளி கோயிலுக்குக் காணிக்கை கட்டுறேன்''— என்று அங்கலாய்க்கும் குரல்தான் கேட்டது.

நாலு லயன்களுக்கு அப்பால் உள்ள பெரட்டுக்களத்தில் தன் சகாக்களுடன் ''பிள்ளையார் பந்து'' அடிக்கும் அம்பிப்பயலுக்குப் பாட்டியின் பலவீனமான குரல் எங்கே கேட்கப்போகின்றது ?

அப்படித்தான் தப்பித்தவறிக் காதில் விழுந்தாலும் கூப்பிட்ட குரலுக்கு மதிப்புக்கொடுத்து உடனே வந்துவிடப் போகின்றானா; என்ன ?

மீனாட்சிப்பாட்டியின் மதிப்பு அப்படியாகிவிட்டது!

அவனைச் சொல்லியும் குற்றமில்லை. விளையாட்டுப்பிள்ளை. புத்தாண்டுத் திருநாள்வேறு வருகின்றது. ''சித்திரைப் பெருநாள்'' ''வருஷப்பிறப்பு'' என்று சிறுவர்களெல்லாம் ஒரே இன்பக் குதூகளிப்பில் மிதக்கின்றார்கள்.

திண்ணையிற் கிடந்த தேயிலை மிலாரை எடுத்துக்கொண்டு போய், அடுப்பில் திணித்துவிட்டுத் தீப்பெட்டியைத் தேடினாள். விறகு அட்டல், ஜன்னல் திண்டு, போத்தல் ராக்கை இன்னும் எங்கெல்லாமோ துளாவினாள். ஹூம்... ஹூம்... கிடைத்தபாடாக இல்லை.

கிழவிக்கு இப்பொழுது பகற்பொழுதிலேயே கண் சரியாகத் தெரிவதில்லை. தேயிலைப் புதருக்குள்ளே ''வத...வத'' வென்று செழுமையாகப் படர்ந்துகிடக்கும் அமலப்புற்களே கிழவியின் கண்களைப் பொத்திவிட்டு மெதுவாக நழுவித் தப்பிவிடுகின்றன.



''இனியும் பார்வைஎன்ன வேண்டியிருக்கின்றன'' என்று அலுத்துப்போய் உள்வாங்கிக்கொண்ட கண்களோடு, ஏதோ ஒரு நிதானத்தில்தான் கிழவி நடமாடிக்கொண்டிருக்கின்றாள்.

''கண்வெளிச்சம்'' இருந்தால் கிழவி இப்படி ஏன் இந்த 'முடியாத வயதில்' கொந்தரப்புக்காட்டில் உயிரைப் பிடித்துக்கொண்டு ஏறிஇறங்க வேண்டும். கொழும்புப் பங்களாவில் கிடைத்த ஆயா வேலையோடே எப்படியோ காலத்தை ஓட்டி இருக்கலாம்.

ஆனால் ''கண்தெரியாத கிழடை வைத்துக்கொண்டு மாரடிக்கமுடியாது'' என்ற நற்சாட்சிகளுடன் திரும்பிவந்தபோது ''கொந்தரப்பு'' மட்டும் ஒதுக்காமல் ஏற்றுக்கொண்டுவிட்டது.

கொந்தரப்புச் சம்பளம் மாதா மாதம் கிடைக்கின்றதோ என்னவோ; கொந்தரப்புக் கணக்குப்பிள்ளையின் ''திட்டு'' மாதம் தவறாமல் கிழவிக்குக் கிடைக்கும்.

உழைக்கக்கூடாத வயது. உழைக்கமுடியாத உடம்பு. ஆனால் கிழவி உழைத்துக்கொண்டுதான் இருக்கின்றாள். தெம்பு உடலில் அல்ல, உள்ளத்தில்தான். என்னசெய்வது? வயிறு என்ற ஒன்று ஒட்டிக்கொண்டிருக்கின்றதே ?

உண்டு இல்லையென்று பாராமல் நேரம் தவறாது பற்றி எரிகின்றதே!

ஐம்பத்தி ஐந்து வயதுவரை உழைத்துவிட்டு ''அக்கடா'' என்று ஓய்வாக மூலையில் குந்த முடியாது. மருமகளின் பெயரிலுள்ள இரண்டு ஏக்கர் கொந்தரப்பில் புல்வெட்டுகிறாள் கிழவி.

பெற்ற தாயையும், கட்டிய மனைவியையும், இருபிள்ளைகளையும் தவிக்கவிட்டுவிட்டு யாரோ ஒருத்தியை இழுத்துக்கொண்டு வவுனியாவிற்கு ஓடிப்போன மகனைப்பெற்ற பிழைக்காக மட்டுமன்றி, தனக்கும்வேறு ஒட்டிக்கொள்ள உறவில்லாதபடியால் மருமகளுடனேயே தங்கிவிட்டாள் கிழவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எங்குதான் போவது ...? ஏச்சுப்பேச்சு, இன்ப துன்பம் எல்லாவற்றிற்குமே அவள்தான். நாளைக்குக் கிழவிக்கு ஒன்று நடந்துவிட்டால் முழுப்பொறுப்பும் அவள் தலையில் தானே! இதை நினைத்து மருமகள் என்னதான் பிழைசெய்தாலும் கிழவி மௌனமாக அடங்கிப்போய்விடுவாள்.

அடுத்த வீட்டு அலமேலுவிடம் இரட்டையில் தீக்கங்குகளை வாங்கிவந்து அடுப்பை மூட்டிக் குளிர்காயத் தொடங்கினாள். கேத்தலில் தண்ணீர் கொதிக்கத்தொடங்கியது.

வேலை முடிந்து வீடு திரும்பிய கிழவியின் மருமகள் தேனீர் தயாரித்து வழங்கிவிட்டு இரவுச் சாப்பாட்டிற்காகச் சமையலை ஆரம்பித்தாள்.

கிழவிக்கு உடுத்துக்கொள்வதற்கு மாற்றுச்சேலை கிடையாது. கட்டியிருக்கும் சேலை மட்டும்தான். அதுவும் கடந்த தீபாவளிப் பண்டிகைக்கு மருமகள் வாங்கிக்கொடுத்ததுதான். கிடைக்கும் சொற்ப வருமானத்தில் நான்கு உயிர்களின் வயிற்றைக் கழுவிக்கொண்டு கிழவிக்கென ஒரு சேலையை மருமகள் வாங்கியது பெரிய சாதனைதான்.

கிழவிக்காவது ஒரு சேலை இருக்கின்றது. பாலாயிக் கிழவி ஒரு கந்தலை இடுப்பில் சுற்றிக்கொண்டு தோட்டத்தைச் சுற்றிவருவதும், அனாதையான சன்னாசிக் கிழவன் தொங்கல் காம்பிராவில் செத்துப்போய்க்கிடந்த கோலம்...!

அந்த ஒரேயொரு சேலையுடன் கிழவி காலந்தள்ளுவதே ஓர் அதிசயம்தான். பூப்போல அதைப் பாவித்து வந்தாள். என்றாலும் அதுவும் நூல்தானே! நைந்து நைந்து நைலோன் துணியாக உடலைக்காட்டத் தொடங்கிவிட்டது.

சேலையின் ஒரு பாதியை இடுப்பில் சுற்றிக்கொண்டு மறு பாதியையும் தோய்ப்பாள். குளித்துமுடிந்து கரையேறிய பின்னர் உலர்த்துவதும் இப்படியேதான். ரவிக்கைபோடாது அந்தச் சேலையை மட்டுமே அவள் அணிந்திருப்பதே ஒரு தனிக்கலையாகும்.



இரவில் குளிருக்காகப் போர்த்துக்கொள்ளவும் இதே சேலைதான். பகலில் கொந்தரப்புக் காட்டிற்குச் செல்லும் போது இடுப்பில் ஒரு படங்குத் துண்டைக் கட்டிக்கொள்வாள்.

கிழவி இப்படி எத்தனை பவ்வியமாகப் பாவித்தபோதிலும் அது கண்சிமிட்டி விளையாடத் தொடங்கிவிட்டது.

அன்றொருநாள் தன் இளைய பேரப்பிள்ளையை மடியில் வைத்து தாலாட்டிக் கொண்டிருந்தாள் கிழவி. கிழவியின் ரா... ரா... பாட்டில் களிகொண்ட குழந்தை துள்ளிக்குதித்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டது. பயன் கிழவியின் சேலை இரண்டாகக் கிழிந்ததுதான். பின்னர் ஊசியால் உருட்டித் தைத்துவிட்டாள் மருமகள்.

சேலை காய்ந்தவுடன் கிழவி அடுப்படியைவிட்டு நகர, மருமகள் இரவுச் சாப்பாட்டிற்காக ரொட்டி சுடத்தொடங்கினாள்.

கிழவிக்கு ஓய்வு கொடுக்கக்கூடாது என்பதுபோலத் தொட்டியில் உறங்கிய "உங்காப் பயல்" வீரிட்டுக் கத்தினான். அவனைத் தூக்கிஅணைத்தபடியே திண்ணைக்குச்சென்று தாலாட்டுப்பாடித் தட்டிக்கொடுத்துத் தூங்கவைத்தாள் கிழவி.

"அம்பி வந்தானா" மருமகள் கோபத்துடன் கேட்டாள்.

"இல்ல. நான்தான் வந்து அடுப்பு மூட்டினேன். கிழவி கூறினாள்.

"இன்றைக்கு அவன் வரட்டும். தோலை உரிக்கிறேன்." மருமகள் கறுவியபடியே வேலையில் மூழ்கினாள். கிழவி மௌனமானாள்.

கிழவி பகல் கொந்தரப்பில் புல் வெட்டிக் கொண்டிருக்கும் போது திடீரென்று குளிர் காற்றுச் சுழன்று அடித்தது. நினைத்துப்பார்ப்பதற்கு முன் மேற்காவுகை மழை ஒரு பாட்டம்பாடி ஓய்ந்தது. எதிர்பாராத விதமாக ஆலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய் அளவில் பெரிய மழைத்துளிகள் விழுந்தன. கிழவி வசமாகச் சிக்கிக் கொண்டாள். குன்றுகளை மெழுகி விட்டாற் போன்று மரகதப்பச்சைத் தேயிலைச் செடிகள். ஓடி ஒதுங்க வும் முடியாது.

சிறிது நேரத்தில் மழை ஓய்ந்து மஞ்சள் வெயில் சுரீ ரென்று அடித்தது. எனினும் கிழவி தெப்பமாக நனைந்து விட்டாள். செம்மண் தூசிபடிந்த உடம்பை மழைநீர் சேறு பூசியது போலாக்கி விட்டது.

அதற்கு மேல் கிழவியால் வேலை செய்ய முடியவில்லை. பீலிக்கரைக்குச் சென்று உடலைக் கழுவிக் கொண்டு வீடு திரும்பினுள். அலசிப் பிழிந்து இடுப்பில் சுற்றிய ஈரச்சேலை உடம்பில் சொத ... ... சொதப்பை ஏற்படுத்தியது.

''கண்டக்டர்'' வீட்ல அந்த அம்மா இன்னைக்கு உன்னை கட்டாயம் வர சொன்னிச்சே ... ... போகலியா ... ... ரொட் டியை மறுபக்கம் திருப்பிப்போட்டபடியே கேட்டாள் மரு மகள்.

''அந்திக்கே போகத்தான் நெனைச்சிருந்தேன். மழையில சேலை நனைஞ்சி ஈரமாக போயிடுச்சி ... ... வீட்டுக்கு வந்தா ... ... அம்பியையும் காணல்ல ... ... இதோ இப்பபோயிட்டு வந்திடுறேன்''

''கந்தையா கண்டக்டர் வேலைதளத்தில் மிகவும் கண்டிப் பான பேர்வழி எனினும் தங்கமான மனிதர்'' என்று பெய ரெடுத்தவர். அவருடைய மனைவி சென்றமாதம் பிரசவித் தாள். இது ஐந்தாவது குழந்தை அந்த அம்மாவுக்கு ஆஸ்துமா வேறு! காமாட்சிப் பாட்டிக்கு அங்கு 'கழுவ வைக்க' என்று ஏகப்பட்ட ஓய்வு ஒழிச்சலற்ற வேலைகள். பாட்டி இப்பொழுதும் 'ஊடமாட' அங்கு போய்வருகிருள்.

''நான் ஐயா வீட்டிற்கு போய் வருகின்றேன். அம்பி வந்தா அடிக்கவேண்டாம்'' — கொள்ளிக்கட்டையை வீசிக் கொண்டு இறங்கி நடந்தாள் கிழவி. அம்பிப்பயல் குறும்பு செய்தாலும் அவன் மீது தனிவாஞ்சை கிழவிக்கு!



இரவு மணி எட்டைத் தாண்டியிருக்கும் அம்பிப்பயல் மெதுவாக வீட்டுக்குள் நுழைந்தான். உடம்பெல்லாம் ஒரே அழுக்கு. வியர்வை வேறு மணத்தது. சட்டையின் ஜேபி கிழிந்து தொங்கியது. மாலையில் சிறுவர்களுடன் சண்டை பிடித்திருக்க வேண்டும். முகத்தில் நகக்கீறல்களில் இரத்தம் கசிந்து செங்கோடுகள் ஓடிக்கிடக்கின்றன. தலைமயிர் படி யாது குத்துக் குத்தாக இலுப்பிக் கிடக்கின்றது.

''இவ்வளவு நேரம் எங்க போயிருந்த'' தாய் அதட்டி ளுள். பதில் பேசாது மூலையில் போய் அமர்ந்தான் அம்பி.

''எங்கடா போன ... ... இவ்வளவு நேரமா விளையாடு றது? அடுப்ப பற்ற வைச்சி தண்ணி சுடவைச்சா என்ன? உனக்கு விளையாட்டு பெருசா போச்சி ... ... அப்பாயி ஈரச் சேலையுடன் நடுக்கிக் கிட்டு இருந்ததைப் பார்த்தியா ..... ?''

''எனக்கு நீ ஏன் புதுவருஷத்திற்கு புதுச்சட்டை வாங் கிக் கொடுக்கல்ல ... ... ராசு, கோபாலன் எல்லோருக்கும் அவங்க அம்மா புது உடுப்பு வாங்கிக் கொடுத்திருக்காங்க— அவன் நியாயம் அவனுக்கு!''

தன் இயலாமையை நினைக்கத் தாயின் கோபம் தணிந்தது!

''புதுச்சட்டை தைக்க காசுக்கு எங்க போறதாம்? இந்த மாதம் மேலதிக அரிசி, மாவுக்கே சம்பளம் போதாது. அடுத்த மாத சம்பளத்திற்கு கட்டாயம் வாங்கித் தருவேன். இந்தா நீ ... பகலும் சாப்பிடல்ல ...... சோறு சாப்பிடு......'

அம்பி முறைத்துக் கொண்டு நின்றுன். ''இந்தா சாப்பிடு ராசா ... ... என் கண்ணு இல்ல ... ...

'' ம் ... ... ம் ... ... எனக்கு சோறு வேண்டாம். புது வருஷத்திற்கு போட்டுக்கிற சட்டை வாங்கிக் கொடுத்தாத் தான் சாப்பிடுவேன். இல்லாட்டி எங்கேயாவது ஓடிப் போயிடுவேன்.'' சாப்பிடமறுத்து அடம்பிடித்தான் அம்பிப் பயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சரி நாளைக்கு வாங்கித் தாரேன். இப்ப நீ ... ... இதை சாப்பிடு" தாய் சோற்றுப் பீங்கானை நீட்டினாள்.

"எனக்கு வேண்டாம்" — நாளை மறுநாள் புத்தாண்டுத் திருநாள். இத்தனை நாளும் இல்லாமல் ஒருபகலில் எப்படி புது உடுப்பு வாங்கி அளிக்கப் போகின்றாள்? — அம்பிப் பயலுக்கு நம்பிக்கை வரவில்லை.

"ம் ...... சாப்பிடு" கோபத்தோடு ஒரு உதை விட்டான். சற்று தூரத்திற்கப்பால் விழுந்து நொறுங்கியது பீங்கான். தாய்க்கு முகம் சிவந்து கோபம் கொப்பளித்தது.

"அன்னத்தை கொட்டிட்டியே பாவி, இதுக்குத்தானே இந்த பாடுபடுறோம்" அம்பிப்பயல் எழுந்து லாவகமாக ஓடப் பார்த்தான். தாய் விடவில்லை. தலைமயிரைப் பற்றிப் பிடித்துக் கொண்டாள்.

"ஐயோ அம்மா நான் செத்தேனே" — அம்பி அலறினான். தாய் காளியாக மாறினாள்.

கண்டக்டர் வீட்டிலிருந்து திரும்பிய காமாட்சிப்பாட்டி ஓடி வந்து தடுத்தாள். "விடு ...... விடு ...... பச்சபுள்ளையை இப்படியா அடிக்கிறது?" அவளிடம் இருந்து விடுவித்துத் திண்ணைக்குக் கூட்டிவந்தாள்.

"வலிக்குதா" ஆதரவோடு முதுகைத்தடவிக் கொடுத்தாள். அம்பிப்பயல் தேம்பித்தேம்பி அழுதான். அவனுக்கு மூச்சுஇறைத்தது.

"ஏன் வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்யல? இனிமே இப்படிச் செய்யாத; ஒழுங்காக நட"

"வருஷப்பிறப்பிற்கு ராசு, கோபாலன் எல்லோரும் புது சட்டைபோடுவாங்க. எனக்கு மட்டும் இல்ல. எனக்கும் புது உடுப்பு வேண்டும்" வார்த்தைகள் கோர்வையாக வரவில்லை. தேம்பித்தேம்பி அழுதபடியே கூறினான்.



கிழவி ஒருகணம் மௌனமாக யோசித்தாள். பின் அமைதியான குரலில் "நீ அழுவாத இந்தா உனக்கும் சட்டைதைக்க புதுத்துணி" மடியிலிருந்த பார்சலை எடுத்தாள். இளஞ்சிவப்பு நிறத்தில் சீத்தைப் புடவை.

அம்பிப்பயலின் அழுகை நின்றது. கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அழுகை போன திக்குத் தெரியவில்லை.

"கமுசும் சாரமும் தைச்சிக்கிட்டு உங்காப்பயலுக்கு ஒரு ஜங்கி தைச்சு கொடு... ..." புடவையை விரித்து மேலும் கீழுமாகப் பார்த்தான் அம்பிப்பயல் "அச்சா பாட்டி. நான் இப்பவே போய் தைக்க கொடுக்கட்டா?" புடவையை கன்னத்தில் அழுத்தி முத்தம் கொடுத்தான்.

"ம் ... ... உன்விருப்பப்படி செய்" — "எங்க அச்சா பாட்டி" என்று கூறிய படியே சீத்தைப் புடவையுடன் தொங்க வீட்டு இராமு டெயிலரிடம் ஓடினான் அம்பிப் பயல். "இருட்டு பார்த்துப்போ ... ... விழுந்திராத" என்று கூறிவிட்டு சேலையின் முந்தானையை இழுத்துச் சொருகிய படியே கிழவி உள்ளே போனாள்.

"உனக்கு ஏது புது சீத்தை" — மருமகள் கிழவியை விசனத்துடன் கேட்டாள்.

"கண்டக்டர் வீட்டு அம்மா கொடுத்தாங்க. பிரசவம் பார்த்தகற்கு சந்தோஷமா புதுவருஷத்திற்கு மூட்டிக் கட்டிக்கணுசொன்னாங்க"

"உனக்கு கட்டிக்க இல்லாம நைஞ்சி போன ஒட்டுத் துண்டை சுத்திக்கிட்டு இருக்கியே, அவனுக்கு என்ன இப்ப அவசரம் புது உடுப்பு கட்டாட்டி வருஷம் போகாமலா இருந்திடப் போவுது" அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் பனித்தன.

கிழவி பதில் கூறுது பலாக்கட்டையை இழுத்துப் போட்டு அமர்ந்து ரொட்டியை கறியில் தோய்த்து பொக்கை வாயில் குதப்பத் தொடங்கினாள்.

வறுமையையும் துன்பத்தையும் நிரந்தரமாக அணிந்து கொண்டுள்ள அவளுக்குப் புத்தாண்டு புதிதல்லவே! △

சிந்தாமணி — 1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுமரங்கள்

மாலையில் இருந்து தொடர்ந்து இரவு முழுவதும் பாட்டம் பாட்டமாகப் பெய்து அடம்பிடித்த பெருமழை கிழக்கு வெளுக்கமுன்னரே அடங்கியிருந்தபோதும், வானம் வெளுக்கவில்லை. மழைஇருட்டு அப்பிக்கிடக்கின்றது. பிரகாசமற்ற வானத்தில் மழைமேகம் கறையாய்ப் படிந்து கவிழ்ந்துள்ளது

விடிந்து வெகு நேரமாகிவிட்டது! இலை உதிர்ந்து கள்ளிக்கம்பாய் நீட்டிக்கொண்டிருக்கும் றப்பர் மரங்கள் யாவும் ஈரம் சொட்டிக்கொண்டிருக்கின்றன. கான்கள், குட்டைகள் யாவும் நிரம்பிப் புதுவெள்ளம் பாய்கின்றது. கலங்கிப் பாயும் புதுவெள்ளத்தில் தென்னைமட்டை முதற்கொண்டு தகரப் பேணிவரை துடுப்பில்லாமல் இனிமாக நீந்திக்களித்துக்கொண்டிருக்கின்றன.

ராமையா புரண்டுபடுத்தான். குளிர், உடம்பை ஊசியாய்த் துளைத்து எடுத்தது உடம்பு முழுவதையும் மறைக்க அந்தத் துண்டுக்கம்பளியால் முடியவில்லை. தலைப்பாகத்தை மறைத்தால் கால்பகுதி அடங்காது சில்லிட்டது. கால்களுக்கு ஆதரவாகக்கொஞ்சம் இழுத்துவிட்டால் நெஞ்சுக்குமேலே... கழுத்தோடு... காதுகள் குடையச் சில்லிட்டுத் தொண்டை கம்ம... காதுகளில் கம்பிகளைச் செருகுவதுபோல......ம் ...ம் சிவ... சிவா... பற்கள் கிட்டித்து வெடவெடத்து நடுங்குகின்றன. கீழே விரித்திருந்த படங்குத் துண்டுவேறு ஈரம் பொசிந்த தரையில் ஊறி உடலில் நமைச்சலை ஏற்படுத்துகின்றது. ''இனியும் படுக்கமுடியாது. எழுந்திருக்கவேண்டியதுதான். எழுந்து என்ன செய்வது... அடுப்படியில் குந்திக் குளிர்காய்வதற்கும் ''......வேலை...?''

சிகப்பியைப் பார்த்தான். அவள் எவ்வித சிரத்தையுமே இல்லாது படுத்துக்கிடந்தாள். முதிர்ந்து தளர்ந்த உடம்பு சுரணையற்றுக்கிடந்தது.

முன்பெல்லாம் குளிர்என்றால் இப்படியா...? அப்படியே சிகப்பியை அணைத்து......அணைத்து...... எத்தனை இன்பமாக அவள் இப்பொழுது அவனுடைய சிகப்பி மட்டுமல்ல - தொங்கவீட்டு பாட்டி...... அவனும் தொங்கவீட்டு பாட்டாவாகிவிட்டான், காலம்தான் எப்படி ஓடிவிட்டது.

அவன் நாட்டிய ஒட்டுமரங்கள் யாவும் தண்ணீராக வடித்து வாளிவாளியாகப் பாலைத்தருகின்றன.

அது பங்குனி மாதம். இலையுதிர்காலம். பங்குனி மாதங்களில் றப்பர் தோட்டத்தில் வேலை கம்மியாகிவிடும். இலையுதிர்ந்து தளிர் கொழுந்து விடுகின்ற காலமாதலால் கற்பகத்தருவாகப் பாலைச்சுரந்து நிற்கும் பட்டைகள் ஊமைகளாகிவிடுகின்றன. எனவே பால்வெட்டுக்கு ஓய்வுகொடுத்துவிடுவார்கள்.

இந்த மாதம்தான் சீக்கில்லாமல் வேலைசெய்தவர்களுக்கு 'போனஸ்சோடு' கூடிய வருட விடுமுறை கிடைக்கும். மற்றவர்களுக்கு ஏதோ இல்லையென்று சொல்லாமல் இரண்டொரு நாள் வேலை கிடைக்கும். இது அரிசி ரேஷனுக்குத்தான் சரியாக இருக்கும்.

இந்த வருடம் நல்ல மழை! பால்வெட்டுக்காரர்களுக்கு சோதனைக்குமேல் சோதனையாகப் போய்விட்டது. இரண்டு மாதங்களாக ஒழுங்காக வேலைகிடைக்கவில்லை. கான்கட்ட, மருந்தடிக்க... மைபூச... என்று இருந்த சில்லறைவேலைகளையெல்லாம் தேடி... தேடிக்கொடுத்தும் தலைக்கு மூன்று நாட்களுக்குமேல் கிடைக்கவில்லை.

என்ன செய்வது ?

நாலைந்து பேர் ரகசியமாக நாட்டிற்கு வேலைக்குப்போய் வந்தார்கள். என்ன வேலை - எங்கு வேலை என்பதெல்லாம் அவர்களுக்குள்ளே பரமரகசியமாக இருந்தது. இன்னும் நாலுபேருக்குத் தெரிந்தால் வேலைநாள்கள் குறைந்துபோய் விடும் என்பது மட்டுமல்ல! ''எங்களுக்கும் வேலைகொடுங்க''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இவர்கள் கேட்டுக்கொண்டு நிற்கும் அழகிலேயே நாட்கூலி குறைந்துவிடும். பின்னர் நாளொன்றுக்கு ஆறு ரூபாயும் பகல் சாப்பாட்டுக்கு சாப்பாடும் என்றிருக்கும் வேலை, ஐந்து ரூபாதான். சாப்பாடு கிடையாது என்றாகி விடும்.

அப்படியொரு போட்டிச்சந்தை நாட்டுக்கூலிவேலை!

தோட்டத்தில் செக்ரோலில் பதிவு உள்ளவர்களுக்கே வேலையில்லை. ராமையா போன்ற பென்சன் எடுத்த கிழடு களையெங்கே கவனிக்கப்போகின்றார்கள்.

இரண்டு வாரங்களுக்குமுன்னர் தோட்டத்து இளைஞர்க ளுக்கு ஒரு யோகம் அடித்தது. தொடர்ந்து பெய்கின்ற மழை தோட்டத்தை ஊடறுத்து நாட்டிற்செல்லும் தார்ப் பாதையை அடித்துக்கொண்டு போய்விட்டது.

ரோட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு மேல்இருக்கும் வளைவு சற்றுப் பயங்கரமானது. கவனமில்லாமல் வந்துவிட்டால் வாகனங்கள் பிள்ளையார் கோவிலுக்குக்கீழே, பள்ளத்திற் தலைகுப்புறத் தோப்புக்கரணம்போட்டு நிற்கவேண்டியது தான். இப்படி வருடத்தில் நாலோ ஐந்தோ நடந்து தோட் டத்து வாண்டுகளுக்குச் காட்சிகொடுக்கத் தவறுவதில்லை!

முடக்கில் அமைந்திருக்கும் பாலம்தான் இப்படியென் றால் பாலத்திற்கடியில் ஓடும் சிற்றாறு எப்பொழுதுமே வஞ் சகம் செய்தது கிடையாது. நிதானமாக நடந்துகொள்ளும்' வருடம் முழுவதும் அதன் கருணையினால்தான் தோட்டத்தில் நீர் விநியோகம் சீராக நடந்துகொண்டிருக்கின்றது.

கோடையின் கொடுமை அகோரமாகத் தாண்டவமாடி னாலும் கண்ணாடிபோன்று தெளிந்த நீர் ஸ்படிகமாக ஓடிக் கொண்டிருக்கும். வேலைமுடிந்து வீடு திரும்பும் ஆயாசத்தில் அப்படியே இரண்டு தடவை உடம்பை நனைத்துவிட்டாற் போதும், உடம்பில் புதுத்தெம்பு புகுந்துவிடும். களைப்பு... ...ம்...... போனஇடம் தெரியாது.



தோட்டத்தில் வளர்க்கப்படும் ஆடுமாடுகள் மட்டுமல்ல; பால் ஸ்டோரே இதன் தயவில்தான் குளிர்ந்துபோய் ஓடிக் கொண்டிருக்கின்றது.

கொட்டும் மழையா? நாலு டிவிசன் அழுக்கையும் சுமந்துகொண்டுபோய் பள்ளத்தில் ஆற்றில் சேர்த்துவிட்டு இரண்டே நாட்களில் கட்டுக்கடங்கி நிதானமாக ஓடிக் கொண்டிருக்கும்.

அப்படிப்பட்ட குணம்கொண்டதுதான் இம்முறைபெய்த பெருமழைப்போக்கை மாற்றிவிட்டது. மேற்கிலிருந்து வந்த வெள்ளம் கரைபுரண்டு...ஓடி...பெருக்கெடுக்க மண்சரிந்து... அப்படியே வாரிச்சுருட்டி... விடியற்காலையில் பார்த்தபோது, ரோட்டுப் பிள்ளையார் கோயில் முடக்குப்பாலத்தைக் காண வில்லை. இரண்டுகரைகளிலும் ஒன்றையொன்று பார்த்தபடி பஸ்கள் நின்றுவிட்டன. கிராமசபை உறுப்பினர் எம். பி. வீட்டிற்கு ஓடினார். எம். பி. வீட்டில் இருந்து டெலிபோன் ஓடியது!

மறுநாளே பாதை புனரமைப்பு வேலை ஆரம்பமாகியது. மண் நிரப்ப, கல் உடைக்க இப்படிப் பலவேலைகள் சுறுசுறுப் பாக நடந்தன.

இராமையா கிழவன் தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு அங்கேபோய் நின்றான். ஓவசியர் ஆட்களை வாட்டசாட்டம் பார்த்துப் பொறுக்கி எடுத்தார். ''இந்த ரோட்டெல்லாம் இராஜா கூனி அடித்து நான் வெட்டியதுதானுங்க'', இரா மையா கிழவன் முதலில் திறமையைக்கூறி நின்றான். பின்னர் வறுமையைக்கூறிக் கெஞ்சி நின்றான். ஹூம்... வேலை கிடைக்கவில்லை.

நான்கு நாட்களின் பின்னர் பொறுக்கி எடுத்த ஆட்க ளுக்கே மண்விழுந்தது. வேலைசெய்யாது விட்டாலும் சம்ப ளப்பட்டியலில் இடம்பிடிக்க நற்சாட்சிக் கடிதங்களுடன் வந்தவர்களைச் சேர்க்க இவர்களில் பத்துப்பேரை நீக்கவேண் டியதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் ஓய்வுமாதம். மழை வேறு !

இரவு பகலாக சிங்கு...சிங்குன்னு ஓடிக்கொண்டிருக்கும் றப்பர் ஸ்டோர் வேறு அடங்கிப்போய்க் கிடக்கின்றது. மழை விட்டபாடாக இல்லை. ஒட்டுப்பாலாக நீண்டுகொண்டிருக்கின்றது.

''என்ன இந்த வருஷம் இப்படி மழை, வானம்பொத்துக்கிட்ட மாதிரி.''

''ஆமா ஒரு ஊரு அழிஞ்சாத்தான் நிற்கும்போல! மாரிமுத்துவும், இராமையாவும் நேற்று கடையிலிருந்து திரும்பும்போது கதைத்துக் கொண்டு வந்தார்கள்.

இருவரும் வயது ஐம்பத்தி ஐந்தைத் தாண்டிவிட்டபடியால் பென்சன் எடுத்துவிட்டார்கள். இராமையாவுக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள மனைவி சிகப்பி மட்டுமே இருக்கிறாள். ஆனால் மாரிமுத்துவிற்கு அப்படிஅல்ல ! மகள் என்றும், மருமகன் என்றும் பேரன் பேத்தி என்றும் பலர் உள்ளனர். ஆனால் கவனிப்பதுதான் கிடையாது.

இன்னமும் இவன் கையைப் பார்ப்பவர்களும் உண்டு. வருகிற பென்சன் கால்வயிற்றுக் கஞ்சிக்கே போதாது ! எனவே கிடைத்த சில்லறை வேலைகளைச் செய்து காலத்தை ஓட்டிவருகின்றனர்.

தோட்டத்தில் பதிவு பெற்றவர்களுக்கே வேலையில்லை. புதிதாக வேறு ஐம்பது ஏக்கர், காணி இல்லாத கிராமத்தவர்களுக்கு வழங்கப்போகின்றார்கள் என்ற செய்தி உலாவி வயிற்றில் புளியைக் கரைத்தது.

வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் வயிறு இருக்கின்றதே !

இராமையாவும் மாரிமுத்துவும் நாலு மைல்கள் நடந்து டவுனுக்குப் போனார்கள். புதிதாக மில்கட்டும் இடத்திற்குப்போய் எடுபிடிவேலை கிடைக்குமா என்று கேட்டுப்பார்த்தார்கள். முதலாளி கண்ராக்டரைப் பார்க்கச் சொன்னார். கண்ராக்டர் கையை விரித்தார்.



பவுடர் பூச்சுக் கலையாத பெண்கள் அலுங்காமல், குலுங்காமல் வேலை செய்தனர். இருவரும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வரும்போது மழைவேறு பிடித்துக்கொண்டது. தெப்பமாக நனைந்துவிட்டார்கள்.

''என்னண்ணே காலையில கழுவிவிட்ட மாதிரி வானம் கெடந்திச்சி. இப்ப... சனியன் இப்புடி ஒரேயடியாக பெய்யுது.''

''சுள்ளுன்னு வெயில் அடிக்கிற நேரமே நினைச்சேன். எப்பதான் மழைவிடப் போவுதோ...?''

குன்றுகளையும், மேடுகளையும் மறைத்து நிரை......நிரையாக அணிவகுத்து வளர்ந்துநிற்கும் பால்மரக்காட்டினூடே அமைந்த ஒற்றையடிப்பாதை வழியாக வீடு திரும்பினர்.

காலைப்பால் அந்திவெட்டு என்று நாளொன்றுக்கு இரண்டுபேர் போட்ட தோட்டம்தான் இன்று இப்படியாகிவிட்டது. மழைவேறு கொட்டிக்கொண்டு சோதனைப்படுத்துகின்றது.

அன்று மாலை தலைவர் வீட்டில் ஒரு கூட்டம் நடந்தது. குடைகள் திண்ணைவரை உள்ளே போய்விட தலைபொத்த மட்டைகளும் பொலித்தீன் கொங்காணிகளும், சேம்பு இலைகளும் வெளியே திண்ணைச்சுவற்றில் சாய்ந்து அழுதுகொண்டிருக்க, தலைவர் ஆலோசனைக்கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார்.

இதுக்குத்தான் மாச சம்பளம் வேணும்னு கேட்டுப் போராடினோம். காட்டிக்கொடுத்துப்புட்டானுக...'' தொண்டர் தலைவன் முத்து ஆத்திரமாகக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்ப அதெல்லாம் பேசிப்பயனில்லை. நடக்கவேண்டிய காரியத்தைப் பாருங்க'' சிவனு காரியத்தில் கண்ணாக இருந்தான். எல்லோரும் ஆமாம் போட்டனர்.

கூட்டத்தில் எடுத்த முடிவோடு தலைவர் கணக்குப்புள்ளையைச் சந்தித்தார். அந்த வருட - எஸ்டிமேட்டில் புதிதாகச் சில்லறை வேலை ஒன்றும் இல்லாதபோதும் றப்பர் மரங்களுக்கிடையில் கொக்கோ நட, வாரத்தில் பெண்களுக்கு இரண்டு நாள் ஆண்களுக்கு மூன்று நாள் கொடுப்பது என்று முடிவாகியது.

இந்த முடிவைத் தலைவர் பெருமையோடு கூறினார். மாத இறுதியில் மாவட்டக் கமிட்டித் தேர்தல்வேறு நடைபெற விருக்கின்றது. தலைவர் அதற்கு நிற்கிறார். எனவேதான் விட்டுக்கொடுக்காமல் பேசிவந்தார்.

''எங்களுக்கு ஒண்ணும் இல்லியா...?'' இராமையா, மாரிமுத்து இன்னும் பென்சன் எடுத்தவர்கள் கேட்டார்கள்.

''உங்களுக்கும் வழி பொறந்திருக்கு. நம்ம எட்டாம் நம்பர் பழைய மரம் இருக்கில்லியா: அதை அடுப்புக்கு வெட்டப் போறாங்களாம். யார் விறகிற்கு ஐம்பது சதம் கைகாசுக்கு வெட்டுவீங்களாம்......''

''ஐயோ இது அநியாயம்! முன்பு யாருக்கு ஒரு ருபாய்க்கு வெட்டமுடியாதுன்ன மரமாச்சே... அதுவும் வரக் கட்டு... அங்கு லொறி கறுத்த வண்டிகூடப் போகமுடியாதே!'' முத்து மீண்டும் நியாயம் பேசினான்.

''இந்தா முத்து தொரை சொன்னதைத்தான் நான் வந்து சொல்றேன்...... எனக்குமட்டும் தெரியாதா?... தலைவர் தன் நியாயத்தைக் கூறினார்.

''தலைவர் சொல்றது நியாயம்'' - யாரோ கூட்டத்தில் ஒத்துப்பாடினார்.

''மண்ணுங்கட்டி ஞாயம். மொக்குப்பத்தி முடிச்சி விழுந்துபோன நார்மரம்... இந்த கிழடுகளால ஒரு மரத்



தைக்கூடத் துண்டுபோட முடியுமா? இன்னொரு இளைஞன் எடுத்துக் கூறினான்.

''இந்தாப்பா... விருப்பம்னு செய்ய வேண்டியதுதான். இதுல ஒன்னும் வற்புறுத்தல் கிடையாது.'' தலைவர் ஒருபடி மேலே போனார்.

ஏன் இந்த கல்லுகட்ட, மண்பால் எடுக்க இப்டி ஏதாவது சில்லறை வேலை கேட்டுப் பார்க்கிறதுதானே'' இளைஞன் விடவில்லை.

''சரி...சரி... எங்க தலைவிதி இப்ப... நீங்க ஏன் சண்டை போடுறீங்க...'' மாரிமுத்துக் கிழவன்தான் அமைதிப்படுத்தினான்.

கிழவர்களுக்கு ஏதோ வேலைகிடைத்த திருப்தி.

''எங்களால முடியாது. நாளொன்றுக்கு ரெண்டு இளந்தாரி சேர்ந்தாலும் ஐஞ்சி ருபாவுக்கு வெறகுவெட்ட முடியாது.'' இளைஞர்கள் பின்வாங்கிவிட்டனர். வேறுவேலை கிடைக்கும் என்ற தெம்பு அவர்களுக்கு!

நாலு டிவிசனுக்கும் கடைசித் தொங்கலில் அமைந்திருப்பதுதான் எட்டாம் நம்பர் பழைய மலை. கல்லுக்காடு இடைஇடையே பெரிய பழைய மரங்கள். எத்தனையோ மலைகளில் பழைய மரங்கள் அழிக்கப்பட்டுப் புல்லுமலைகள் கொழுத்தப்பட்டு, புதிய ஒட்டுமரங்களை உண்டாக்கிவிட்டார்கள். ஆனால் இது என்றும் பழைய மலையாகவே உள்ளது!

புதிதாக வெட்டுப்பழகும் அத்தனைபேரும் இங்கேதான்! பெரிய மரங்கள். எட்டிய மட்டும் 'கங்கு வெட்டில்' பட்டை சீவிப் பால் உறியப்பட்ட உறியப்பட்ட மரங்கள்! இன்று பட்டையேஇல்லாது நெஞ்சைக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

தன் பாலை வாளி வாளியாக வழங்கிவிட்டு இன்று ஸ்டோர் அடுப்பு விறகிற்குத் தயாராக நின்று கண்ணீர் வடிக்கும் பால்மரக்காடு அது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம். எட்டாம் நம்பர் பழையமலே ! இராமையாக் கிழவன் நீண்ட நாட்களாக அங்கே பால்வெட்டியுள்ளான். தனக்குத் தொழில் கொடுக்கும் ஒவ்வொரு மரங்களையும் தனது இதயத்தில் இருத்தி நேசித்துள்ளான்.

சிரட்டை நிறைந்துவழியும் பாலேச் சேகரிக்கும்பொழுது அவை வெறும் மரங்கள் மட்டுமல்ல!! அவனே வளர்க்கும் தாய்!! அவனே வாழ்விக்கும் தெய்வம். இந்த உணர்வு இன்றும் அவனைவிட்டு நீங்கவில்லை !

இப்பொழுது அவைகளை வெட்டிச்சாய்த்து, அறுத்து அறுத்து நெஞ்சுமுட்டும் ஏற்றத்தில் உருட்டித் தள்ளிக் கொண்டுவந்து அடுக்கவேண்டும்!

ஒரு யார் விறகிற்குக் கூலி ஐம்பது சதம். அதற்காக அறுக்கவேண்டும்.

சிவப்பி எழுந்து தேநீர் தயாரித்துக் கொடுக்கிறாள். இராமையாக் கிழவன் படுக்கையில் அமர்ந்தபடியே தேநீரைப் பருகிறான். பின்னர் சிறிதுநேரம் அடுப்படியில் இருந்து குளிர் காய்ந்துகொண்டிருக்கிறான்.

''ராமையா அண்ணன் புறப்படலியா...?'' அழைத்த படியே வந்தான் மாரிமுத்துக்கிழவன். தோளில் கோடரி இருந்தது.

''இதோ வந்திட்டேன் மாரி அரம் வச்சிருக்கியா ?''

''ஹூம். கிடையாது. தண்ணிக்கல்லு இருக்கு... தீட்டிக்குவோம்.''

வானம் பிரகாசமாக இல்லை.

முதுமை அவர்கள் உடம்பில் கனிந்திருந்தபோதும் உழைப்பு என்ற உறுதி, நம்பிக்கையைக் கொலுவிருக்க தீரத்துடன் அவர்கள் நடந்துகொண்டிருக்கின்றனர்.



மழை பொசிந்துகொண்டுவந்தது.

இலையை உதிர்த்துக் குச்சி குச்சியாக நீட்டிக்கொண்டு இளமைபோய் முதுமையில் சோர்ந்து நிற்கும், தங்களை அந்தப் பால்மரக் காட்டினை அழிக்க அவர்களுக்கு மனம் இல்லை. இருந்தாலும் வேறுவழி......?

மரங்களுக்கு மட்டுமா அந்நிலை... இத்தனை காலமும் உழைத்து... உழைத்து இன்று உடலில் வலுவற்ற நிலையிலும்... தங்கள் நிலைமை அவர்களுக்கு நன்கு புரிந்தது.

அவர்கள் வேகமாக நடக்கின்றனர். ▽

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலைகள்

ரெங்கையா கிழவனுக்கு நித்திரை வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். கிழவனுக்கு உடம்பெல்லாம் அடித்தது போன்ற வலி. மூட்டுக்கள் கழன்றுவிட்டதைப் போன்று கால்கள் கடுத்தன. இடது முழங்காலுக்குக் கீழே கொப்புள மாகத்தோன்றி, பின்னர் வெடித்துத் தற்பொழுது ரூபாய் நாணயங்களின் அளவில் நாற்புறமும் படர்ந்திருக்கும் புண் கள்வேறு விண்விண்ணென்று தெறிக்கின்றது.

இன்று வெள்ளிக்கிழமை. எல்லாக்கடைகளிலுமே சதம் ஒன்று பிச்சைபோடுவார்கள். மொத்தமாக ஒரு நாலைந்து ரூபாய் தேறும். இதைக்கொண்டு அடுத்துக் கம்மியாகும் இரண்டுமூன்று நாட்களுக்குமாக இரண்டு உயிர்களைக் கூட் டில் தங்கவைப்பதற்கு இரை போட்டுவிடலாம். எனவேதான் மந்தண்டாவளைச் சந்தியிலிருந்து அரசாங்க வைத்தியசாலை வரை இரண்டுகல் தொலைவில் நீண்டுகிடக்கும் கடைகளில் ஒன்றுவிடாமல் ஏறிஇறங்கினான்.

ஒருநாள் காலத்தில் பெருநாள் சாமான்கள் என்றும், புடவைகள் என்றும் மிடுக்காக ஏறிஇறங்கியவன்தான். ஆனால் இன்று,

...அதுஒரு காலம்...

வெள்ளிக்கிழமையைத் தவிரப் பிறநாட்களில் கடைகள் பக்கம் தலைகாட்டவே முடியாது. வீடுகளில் கிடைப்பதுதான் அதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. பாதசாரிகள்மிகுந்த கச்சேரி ரோட்டிற்குச் சென்றாலும் ஊனங்களை முதலாகவைத் துப் பிழைத்துக்கொண்டிருக்கும் ஆயுள் பிச்சைக்காரர்கள் இவர்கள் போட்டிக்கு வந்துவிட்டதை உணர்ந்து ஏசத் தொடங்கிவிடுவார்கள்.

பகல் யாரோஒரு புண்ணியவதி மீன்குழம்புடன் சோறு போட்டாள். அதை அப்படியே கோப்பையில் ஏந்திக் கிழ



விக்கு வைத்துக்கொண்டு தகரப்பேணியில் ‘வெறும் காட்ட’ ஒன்றினை வாங்கிக் கால் ருத்தல் பாணை அதில் தொட்டு நனைத்துச் சாப்பிட்டான். கிழவன் கொடுத்த சோற்றைக் கிழவி மிகவும் ருசித்துச் சாப்பிட்டாள். இடையில் கிழவ னுக்கும் இரண்டு கவளம் கொடுத்தாள். சோற்றைச் சாப் பிடும்போது கிழவி கண்கலங்கிவிட்டாள். அன்றொருநாள் இரண்டுநாட்கள் தொடர்ந்துவந்த பட்டினி விரதத்தை முடித் துக்கொள்ளும் முகமாக ஹோட்டலுக்கு முன்னாலுள்ள எச் சில் தொட்டில் இலையில் ஒட்டிக்கொண்டிருக்கும் பொருக்கு களைச் சாப்பிடவேண்டி வந்துவிட்டது. அதுவும் சரிவர முடி யவில்லை. நாகரிகவான்கள் கலைத்துவிட்டார்கள். சாப்பிடும் பொழுது பழைய நினைவுகளில் கண்கலங்கிய கிழவியைக் கிழ வன் தேற்றினான்.

சமுதாயத்தில் எத்தனை மேடுபள்ளங்கள் - வளைவு நெழி வுகள் — உயர்வு தாழ்வுகள் உண்டோ, அத்தனையையும் சூக் குமமாகக் காட்டும் காட்சியாக அவ்வீதி காட்சியளித்தது.

பகலில் எந்நேரமும் ஆரவாரம் மிகுந்தே காணப்படும். லொறிகளும் மாட்டு வண்டிகளும் இன்னும் தள்ளு வண்டி களும் பொருட்களை ஏற்றுவதிலும். இறக்குவதிலும் மும்மூர மாக ஈடுபட்டிருக்கும்.

‘இந்தக் கடையிலா இவ்வளவு பொருட்களும் அடைந்து கிடந்தன’ என்று யோசித்து மூக்கின்மேல் விரலை வைக்கும் படியாகிவிடும். கொழும்பு மார்க்கட் நிலைவரம் பார்த்து ‘லோட் அடித்து’ நிற்கும் லொறிகள். கடைக்குக்கடை இதே கதைதான். மிளகு என்றால் மிளகு. இலவம் பஞ்சு என்றால் பஞ்சு...கொக்கோ...என்றால் கொக்கோ தான். இத்தனைக் கும் சாதுவாகத் தோன்றும் கடையைப் பார்க்கும் போது பூதம் அடைபட்டிருந்த புட்டிதான் நினைவிற்கு வரும்.

தலைக்கு அணையாக வைத்திருந்த குட்டிச் சாக்கினுள் அடைபட்டுக்கிடந்த தகரப்பேணி தலையை அழுத்துகின்றது. ஒருவாறு சரித்து வைத்துக் கொண்டான். இப்பொழுது தகரப்பேணி அகப்பட்டு நெளிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு முதிர்ந்துவிட்ட போதிலும் நகரம் ஒளிவெள்ளத்தில் மிதக்கின்றது. வீதியின் அருகில் நிற்கும் மரங்களின் காகங்கள் கொட்ட...கொட்ட விழித்திருக்கின்றன. மாநகர சபை விளக்குகளுடன் கொஞ்சி விளையாடிய ஈசல்கள் சிற கிழந்து அப்பிக் கிடக்கின்றன. அழகுமலைப் பக்கத்திலிருந்து வேட்கையுடன் பறந்து வந்த வௌவால் ஒன்று மின்சாரக் கம்பியில் மோதி நிரந்தரமாகத் தொங்கிக் கொள்ளுகிறது.

தனக்கு நேர் கிழக்காக பேமண்டின் மறுகோடியில் உறங்கும் கிழவியைப் பார்த்தான். கிழவி அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாள். கிழவியை நினைக்கும் போது அவனுக்கு துக்கம் மேலிடுகின்றது. கிழவிக்கு ஒரே 'ஊர்' பைத்தியம். அவளுடைய உறவினர்கள் அங்கேதான் இருக்கின்றார்கள். கிழவியின் பேச்சைக் கேட்டு உடலில் தெம்பு இருக்கும் போதே ஊருக்கு போயிருந்தால் தனக்கு இக்கதி ஏற்பட்டிருக்குமா என்று நினைத்து நினைத்து கவலைப்பட்டான்.

கிழவியை கல்யாணம் முடித்த தினம் அவனுக்கு நினைவுக்கு வருகின்றது. மாரியம்மன் கோவிலிலிருந்து 'தப்புத்த முறுடன் வீடுவரை...' ஜே...ஜே என்று ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். காமாட்சி என்றால் முழுத் தோட்டத்திலுமே பிரசித்தம். கொழுந்து எடுப்பதில் மகா கெட்டிக்காரி. இவனும் வேலையில் இப்படித்தான். தவறணை ரெங்கையா என்றால் ஒரு தனி மதிப்புத்தான். பிள்ளையை வளர்ப்பதுபோல் தேயிலைக் கண்டுகளை வளர்த்தான். 'பூமாதேவிக்கு மட்டும் வஞ்சகம் செய்யக்கூடாது' என்று நன்றாக பாடுபட்டான்.

இப்பொழுது தோட்டத்து வாழ்க்கையை நினைக்கும் போது பெரும் ஏக்கம் ஏற்படுகின்றது. இவ்வாறு துன்பப்படவேண்டுமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. தோட்டத்தில் சிறுவனாக இருந்தபொழுது 'செட்டு' சேர்த்துக் கொண்டு ஒன்றாகப் படுத்துறங்குவது, மிலாறு பொறுக்கச் செல்வது, மலைக்குத் தேநீர்கொண்டு செல்வது, போன்றவைகளெல்லாம் நினைக்கும்தோறும் இனிக்கும் நினைவுகளாகும்.



அதற்குப் பின்னரும் அவனுடைய வாழ்க்கை சந்தோஷமானதாகத்தான் இருந்தது. காமாட்சியைக் கல்யாணம் முடித்து தனிக்குடித்தனம் வந்தான். தோட்டத்தில் உள்ளவர்களோடு வருடம் தோறும் காமாட்சி சகிதம் கதிர்காமம் சென்றுவருவான். மாசிமகத்தில் அம்மனுக்குத் தேர் எடுப்பார்கள். கார்த்திகை கழிந்ததும் காமன்கூத்து ஆரம்பமாகிவிடும். காமன் தகனம் என்றால், தோட்டமே விழாக்கோலம் பூண்டுவிடும். 'அறம்காத்த வாணியே குலம்காத்த வாணியே' என்ற சரஸ்வதி துதியுடன் இரவு எட்டுமணிக்கு ஆரம்பமாகும். சின்னையா வாத்தியாரின் வள்ளி திருமண நாடகம் முடிந்து 'ரகுபதி ராகவ' கீதம் ஆர்மோனியத்தில் இசைக்கும் போது, விடிய கோழி கூவிவிடும்.

மேட்டு லயத்துப் பெண்கள் துள்ளுமாவுடன் குழவி கொட்டியபடி புறப்பட, ஒத்த ரோட்டு வரையில் ஒத்த தப்புடன் செந்தூதன் ஓலைகொண்டு பந்தங்கள் எரிய ஆடி வந்து காமன் பொட்டலைச் சேரும்பொழுது பளார் என்று விடிந்துவிடும். முழுநாளும் ஒரே குதூகலம்தான். இன்னும் கரகம் பாலிப்பு, பங்குனி உத்தரம் என்று எத்தனை விழாக்கள் சந்தோஷத்திற்குக் குறைவில்லை.

தீபாவளி, சித்திரை போன்ற திருநாட்கள் வந்தால் டவுனிலிருந்து கார் ஒன்றும் குடும்பம் ஒன்றுமாகத்தான் திரும்புவார்கள். இப்படியே ரெங்கையா கிழவனின் வாழ்க்கையில் நாற்பது வருடங்கள் இன்பமாக ஓடியபின்னர் அது நடந்தது. தோட்டத்தை நிருவகித்து வந்த கம்பனி நட்டம் என்று காரணம்காட்டி பலபிரிவுகளாகப் பிரிந்துபோயிற்று. புதுநிர்வாகங்கள் வந்தன, புது ஆபிஸ்கள், முதலாளிகள், உத்தியோகஸ்தர்கள் வந்தார்கள். பிரிந்த தோட்டங்களில் வெவ்வேறு சங்கங்கள் தோன்றின. தண்ணிச் சண்டைகள் முளைத்துத் தகரங்கள் கல்லடிபட்டன. இப்படிப் பலபிரச்சினைகள் புதிதாக முளைத்தன.

இவ்வேளையில்தான் பிரஜா உரிமை ஒப்பந்தம் மீண்டும் நிறைவேற்றப்பட்டு மனுக்கள் கோரப்பட்டன. கிழவி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குப் போவோம்' என நச்சரித்தாள். ஆனல் ரெங்கையா ஏதோ நப்பாசையால் மறுத்துவிட்டான். இலங்கைப் பிரஜா உரிமைகோரி அவன் மனுப்போட்டான்.

பழைய கௌரவம் போய் புதிய கிராமியத் தோட்டச் சூழலில் ஒருவாறு காலம் ஓடிக்கொண்டிருக்கையில், தொடர்ந்துவந்த துன்பங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று, தோட்டம், காணியில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு தோட்டத்தில் வேலைசெய்த சகலரும் வேலையிழந்தார்கள்.

முதலாளி... புத்திசாலி. எப்படியெல்லாமோ... காரியம் பார்த்து லயத்தைக்கூட விற்றுவிட்டார். கூப்பன் அரிசி தொட்டு உண்டாக்கிய காய்கறிச் சேனைவரை சகலதும் பறிபோயிற்று. நாட்டான் தலையில் பழியைப்போட்டுவிட்டு கோழிக்கூடுகள் மாயமாய் மறைந்தன. பக்கத்துத் தோட்டங்களிலிருந்து கிடைத்த ஆதாரமற்ற செய்திகள்கூடக் 'குமர்கள் வைத்திருப்பவர்களை குலைநடுங்கச் செய்தன'. சில பகுதிகளிலிருந்து வந்த செய்திகள் மகிழ்வைத் தந்தன.

தெம்புள்ள குடும்பங்கள் வவுனியாவிற்கு நடந்தன. பிற தோட்டங்களிலும் 'உள்ளவர்களுக்கே வேலையில்லை யென்று' கையை விரித்துவிட்டார்கள்.

தங்க நகைகளில் தொடங்கி செம்பு... கோடரி, கத்தி என்பனவெல்லாம் ஒருகொத்து அரிசிக்காக விலைபோயின... உணவுப்பஞ்சத்தில் மரவள்ளி, வற்றளை என்றுதொடங்கி... அரிசியையே மாதக்கணக்கில் காணுது, கோரக்கிழங்கு; அமலப்புல் என்பவற்றில் போய் நின்றது.

பசி தாங்காது காட்டு மரவள்ளிக் கிழங்கைத் தின்று; யார் யார் யாரோ இறந்துபோனுர்கள்

லயத்துத் தகரங்களையும் இரும்புக் கேடர்களையும் ஒரு கோஷ்டி சண்டித்தனம் செய்து கழற்றிச் சென்றது. ஆயா என்றும் 'சேவண்ட் கேர்ள்' என்றும் பட்டினத்து பங்களாக்



களில் வேலைசெய்துகொண்டிருந்தவர்கள்கூட திருப்பி அனுப் பப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இனியும் தாக்குப்பிடிக்க முடியாது என்பதை உணர்ந் தவர்கள் டவுனுக்கு நடக்கத் தொடங்கிவிட்டார்கள். எந்த நகரத்திற்கு முன்பு பெருமையுடன் வந்து போனுர்களோ அதே நகரில் இன்று பிச்சை எடுக்கிருர்கள்.

ஒருநாள் ஒரு கோஷ்டி பலரைப் பிடித்துத் தெருநாய் களை வண்டியில் பலாத்காரமாக அடைப்பதுபோன்று அடைத் துச்சென்றது. மூன்ரும் நாள் களைத்து வாடிச்சோர்ந்து திரும்பிவந்த சிலர், அவர்கள் தங்களை இனம்தெரியாத காட் டுப்பகுதியில் இறக்கி விரட்டி, இம்சைப்படுத்தியதாகக் கூறி அழுதார்கள்.

கிழவனுக்கு நித்திரை வரவில்லை. வெற்றிலைப்பையைத் துழாவி ஒரு புகையிலைத் தட்டையை எடுத்துச் சப்பினுன். அந்த வீதியின் பேமண்டில் அநேகர் அலங்கோலமாகப் படுத்து உறங்கினுர்கள். தெருநாய்கள் கூடவே படுத்துக் கிடக்கின்றன.

''ஐயோ... கிழவனைத் தனிக்க வச்சிட்டு என்னைய கொண்டு போயிருக...'' கிழவி தூக்கத்தில் வாய்புலம்புகி ருள். கிழவிக்குக் கடந்த பத்து நாட்களுக்கு மேலாகக் கடு மையான வருத்தம். இன்னநோய் என்றில்லாத துன்பத்தில் வாடுகிருள். உடல் ஈர்க்கிலாக இளைத்துப்போயிருக்கின்றது.

இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாத அவளை நினைக்கும்போது கிழவனுக்குப் பெருமையாக இருக்கின்றது. மெதுவாக நகர்ந்து அவள் முகத்தைத் தடவிப்பார்த்தான். புஸ்...புஸ்... என்று மூச்சு ...இழுத்து...வந்தது. விலகிக் கிடந்த சேலைத்தலைப்பைச் சரியாக இழுத்துவிட்டான்.

வாழ்க்கையின் சுமையேபோன்று இணைந்துதொடரும் பெட்டிகளை இழுத்துவந்த ஆசுவாசத்தில் ஸ்டேசன்வந்து சேர்ந்த குட்ஸ் ரெயின் மேல்மூச்சு கீழ்மூச்சுவாங்கி, பின்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ...என்று அவலக்குரல் எழுப்பியபடியே ஓடுவது நிசப்தமான இரவுவேளையில் தெளிவாகக் கேட்கிறது.

இவர்களுக்கு முன்னதாகக் கடைக்காரன் எழுந்துவிட்டால் மாடியிலிருந்து நீரைக்கொட்டி இலவசமாக ஸ்நானம் செய்துவைப்பார்கள். தெருவின் மேற்கு மூலையில் சாக்கடைக்கு அருகில் படுத்திருக்கும் குடும்பம் நெருப்புமூட்டிக் குளிர்காய்ந்துகொண்டிருக்கின்றது.

சிக்னல் கம்பங்கள்தரும் சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாது வாகனங்கள் பறக்கின்றன.

பொழுது விடிந்துவிட்டது. கிழவியை எழுப்பி 'சைவக் கடை'யில் சூடா ஒரு காட்ட வாங்கிக்கொடுத்துவிட்டு, 'இடத்தைக் காலிசெய்து ஆலமரத்துப் பக்கம்போய் குந்துவோம்' என்று நினைத்தவன், 'ஏய்...புள்ள...ஏய்... காமு... எந்திரி...எந்திரி... நல்லா விடிஞ்சிரிச்சு'' என்று அவளை எழுப்பினான். பதில் இல்லை.

பனிகொட்டி நனைந்திருக்கும், அவள் போர்த்திருந்த சேலையை விலக்கி, ''ஏய்...காமு...காமு'' என்றவன் முகத்தைத்தடவிக் கையைப்பிடித்துப் பார்த்தான்.

கிழவனுக்குக் குடுமியைப் பிய்த்துக்கொண்டு ஓவென்று பெரிதாக் குரல்எடுத்துக் கத்தவேண்டும்போலிருந்தது. அவனுடைய முகம் வீங்கி உடம்பு விறைத்துப்போயிருந்தது. இலையான்கள் குந்திக்குந்தி மொய்த்துப் பறந்தன.

கடை திறந்தவுடன் விடயத்தை அறிந்த முதலாளி, ருத்ரதாண்டவத்தில் நின்றார். ''ச்...சீ... தொல்லையாகப் போய்விட்டது. சனியன்களைப் படுக்கவிடுறதனால வாற தொல்லைகள் இதெல்லாம்... இருக்கட்டும்...இருக்கட்டும்... இதுகளுக்கு ஒரு நல்லமுடிவெடுக்கிறன்...'' ஆத்திரத்தில் ஏதேதோ பொரிந்து தள்ளினார். கிழவனுக்கு முதலாளியின் முகத்தைப்பார்க்கப் பயமாக இருக்கின்றது.



முனிசிபல் லொறி வந்து பிணத்தை ஏற்றிச்சென்றது. பிச்சைக்காரர் கூட்டத்தைச்சேர்ந்த சிலர்வந்து அனுதாபம் தெரிவித்தார்கள். இதனைத்தொடர்ந்து முனிசிபல் முனிபுங்கவர்களால் தொடுக்கப்பட்ட ஆக்கினைகள் முழுப் பிச்சைக்காரக்கூட்டத்தையுமே வெலவெலத்து நடுங்கச்செய்தன. கிழவன் நீண்டுவளர்ந்திருக்கும் தாடியை உருவியபடியே சற்று நேரம் அந்த பேமண்டில் உட்கார்ந்திருந்தான். இப்பொழுது அவன் சிந்திக்கவில்லை. தன்மீது துர்நெடி வீசுவது அவனுக்கே தெளிவாகப் புரிந்தது.

பின்னர் மெதுவாக எழுந்தான். ''கிழவி போய்விட்டாள். புண்ணியவதி. நான்தான் பாவி...பாவி இன்னும் உசிரோட இருக்கேன்'' என்று அரற்றியபடியே கால்கள் போனபடியே நடந்தான். 'காண்குட்டைகளில் பாய்ந்து உயிரைப்போக்கிக்கொள்ளுவோமா?'என்றுகூட நினைத்தான்.

அன்றிரவு வழமையாகப் படுக்கும் வீதிக்கு வரவில்லை. புகையிரத நிலையத்திற்கு முன்பாக அலரி மரத்தடியில் படுத்தான்.

நடுச்சாமத்திற்குமேல் இருக்கும். டவுண் சுற்றிக்காவல் செய்யும் 'சிக்குரிட்டி காட்மார்கள்' இருவர் கிழவனை எழுப்பி ஏதோ தமாஷ் செய்துவிட்டு நடந்தார்கள். விடியவிடியப் பனிகொட்டியது. தூக்கமே வரவில்லை; சிவராத்திரிதான். இப்படிப்பொழுதைக் கழிப்பது அவனுக்கு ஒன்றும் புதிய அனுபவமல்ல......!

மறுநாள் பகல் வழமையாக ஓடிவிட்டது. தூக்கம் கண்களைத் தாலாட்ட, இரவு பேமன்டிற்குத் திரும்பினான். சற்றுத்தூரத்திலிருந்தே கடையை நோட்டம் விட்டு கடை பூட்டியாகி விட்டது என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு மெதுவாக நடந்து சென்று குட்டிச் சாக்கை வைத்தான்.

கையில் ஏதோ அரும்புவது போன்ற உணர்வு ஏற்பட்டது. சட்க்கென்று கையை எடுத்துக்கொண்டவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஒரு அடி முன் தள்ளி சீமெந்து தரையை ஒரு குருடனைப் போல இரு கைகளாலும் தடவிப் பார்த்தான்.

அவனுக்கு பாதக் குறட்டில் ஏறியது போன்று இருந்தது. கடைக்கு வந்து போகும் நடைபாதையை தவிர்த்து பிற் பகுதிகள் யாவும் சீமெந்துக்கு மேலே அரையங்குல உயரத் திற்கு கூரான கண்ணாடித் துண்டுகளும் முனைப்பான முக் கோண சிறிய கூளாங்கற்களும் பதிக்கப்பட்டிருந்தன. தரை இன்னமும் உலரவில்லை.

மெதுவாக எழுந்து வீதிக்கு வந்தான். நடுரோட்டில் நின்றபடியே வீதியின் இருபகுதிகளையும் வெறிக்க நோட்டம் விட்டான். ஒளிவெள்ளத்தில் மிதக்கும் அவ்வீதியில் தான் ஒரு குருடனுக்கப்பட்டு கிடப்பதாக அவனுக்குப் பட்டது. தெளிவான வானத்தில் விண்மீன்கள் பளபளத்துக் கொண் டிருக்கின்றன. எட்டிய உயரத்திற்கு சிறிய விளக்குகளால் கோலம் போட்டபடி மின்மினிகள் பறக்கின்றன.

ரெங்கையா கிழவன் இருமியபடி தோளில் குட்டிச் சாக்குத் தொங்க நடந்து செல்லும் போது நடுங்கிய படியே ஊன்றிச் செல்லும் தடி எழும்பும் ... டொக்... டொக் என்ற ஓசை தெளிவாகக் கேட்கின்றது.

அந்த நாலுமாடிக் கட்டிடத்தின் உச்சியில் கம்பனியின் பெயர்ப்பலகையில் அலங்கரித்துக்கொண்டு ‘டால் அடிக்கும்’ ஆட்டோமாடிக் பல்ப்புகள் ஒளிவர்ணங்களில் ஜாலம்காட்டி கண்களைக் கூசச்செய்கின்றன. ▽

**வீரகேசரி - 1978**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாளர்களின்...!

"அவள் வாழ்வில்...பெரும் சோதனை. பெண்மைக்கு அதன் கற்புக்கு விடும் சவால். கணவனைக் காப்பாற்ற வேண்டுமானால் அதற்குக் காணிக்கை அவளது கற்பு. அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெண்களுடையது மட்டுமல்ல .. பெரும் பங்கு ஆண்களினதும் கூடத்தான்.."

— மலரன்பன்

"ஓ! இந்த கண்டக்டர் ஐயா எவ்வளவு அன்பாக இருக்கிறார், லயத்திலுள்ள ஒருத்தனை சாப்பிடு டீ குடி என்று சொல்கிறாரே. தோட்டத்தில் வேறு யாருக்கு அவனைப்போல ஐயா பங்களா குசினிவரை போகச் சுதந்திரம் கொடுக்கப் பட்டிருக்கிறது..."

— மாத்தளை சோமு

"வழியும் பாலைச் சேகரிக்கும்போது அவை வெறும் மரங்கள் மட்டுமல்ல! அவனை வளர்க்கும் தாய்! யார் ஒன்றுக்கு ஐப்பது சதக் கூலிக்காக அவைகளை வெட்டி அறுத்து அடுக்க வேண்டும் "

— மாத்தளை வடிவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org